# புறநானூற்றில் அறம்



முருகையா சதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறநானூற்றில் அறம்

முருகையா சதீஸ்
மேனாள் உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வெளியீடு: 31
அம்மா பதிப்பகம்
31/1, சமாது ஒழுங்கை,
திருகோணமலை.
2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | |
|---|---|
| தலைப்பு | : புறநானூற்றில் அறம் |
| ஆசிரியர் | : முருகையா சதீஸ் |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கு |
| பதிப்பு | : முதற்பதிப்பு – ஆவணி, 2023. |
| வெளியீடு | : அம்மா பதிப்பகம், திருகோணமலை. |
| அச்சுப்பதிப்பு | : ஜே. எஸ். பிறின்டேர்ஸ், பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம். |
| பக்கங்கள் | : ix, 104 |
| விலை | : 500.00 |

| | |
|---|---|
| Title | : Purananurttil Aram |
| Author | : Murukaiya Sathees |
| Copyright | : To Author |
| Edition | : First Edition - August 2023. |
| Published by | : Amma Pathippaham, Trincomalee. |
| Printed by | : J.S. Printers, Pandatharippu, Jaffna. |
| Pages | : ix, 104 |
| Price | : 500.00 |

ISBN : 978-624-99407-6-5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்

கல்வியும் அறனும் அறிவித்து

என்னை ஆளாக்கிவிட்ட

**ஆசிரியர்களுக்கு...!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய இலக்கியச் செல்வமான புறநானூறு தமிழர்களின் அழியாத, சாகாவரம் பெற்ற சொத்தாக மிளிர்கிறது. பண்டைத் தமிழ் இலக்கியங்களில், புறப்பொருள் சார்ந்த போரும் வாழ்வும் அதன் பிரதான பாடுபொருளாக விளங்கினாலும், போரியல் ஒழுக்கங்கள் அதனூடு செம்மையும், ஒளியும் விளங்கச் சித்திரிக்கப்பட்டாலும், அவற்றோடு இணைந்ததாகத் தமிழர்களின் சால்பும் வாழ்க்கை அறங்களும் வடித்துத் தரப்பட்டுள்ள நேர்த்தியையும் இந்நூ லில் கண்டு இரசிக்கவும் சிந்திக்கவும் முடிகிறது. காலங்காலமாக எத்தனையோ எழுத்தாளர்களும் தமிழியல் ஆய்வாளர்களும் புறநானூ ற்று இலக்கியத்தின் பெட்பையும் அதில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களையும் கவிதைத் திறத்தையும் கட்டுரைகளாக, நூல்களாக, ஆய்வேடுகளாக, விமர்சனங்களாகப் படைத்தளித்துள்ளனர். இந்த வகையில் அவை கணக்கில் அடங்கா. இருந்தும் தொட்டனைத்தூறும் மணற்கேணிபோல புறநானூறு பற்றி ஆராயும்போது, புதுப்புது அர்த்தங்களும், புதுமையான காட்சிப் பொலிவுகளும், மானுட சக்தியின் மகத்துவங்களும், பண்டைய தமிழ் மன்னர்களின் வலிமைத் திறன்களும், வள்ளன்மைகளும், அறம்விலகா அருட்பணிகளும், நடுநின்று நோக்கிச் செயற்படுத்தும் வீரமும் தீரமும், நூல் முழுவதும் ஆங்காங்கே வெளிப் படுவதைக் கண்டு அதிசயிக்க முடிகிறது.

அதன் தொடர்ச்சியாகவே ஈழத்தமிழ் இளம் எழுத்தாளரும், தமிழ் ஆய்வாளரும், இலக்கிய வேட்கை நிரம்பியவரும், எழுதத் துடிக்கும் எண்ணங்கள் உடையவருமான திருமலை மண்ணின் திரியாய்க் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகையா சதீஸ் (கவிஞர் முல்லை) அவர்கள், தனது ஆவல் மீதூரப்பெற்று "புறநானூற்றில் அறம்" எனும் தலைப்பிலான, கையடக்கமான சிறிய நூலொன்றினைத் தமிழ்ச் சமூகத்திற்குப் பயனுறத் தந்துள்ளார். பாரிய நூலொன்றினைப் படித்து, இரசித்து, பாடுபொருளறிந்து, அவற்றை நுணுகி ஆராய்ந்து, காரணகாரியத் தன்மையைச் சீர்தூக்கிப் பார்த்து, பாடல்களின் உணர்வையும், உணர்ச்சியையும் புரிந்து கொண்டு தன்னால் இயன்ற எழுத்தாளுமையுடன் இந்நூலினைப் படைத்துள்ளார்.

தமிழர் வாழ்வோடு என்றும் பிரிக்கமுடியாமல் இணைந்துள்ள அறம் பற்றிப் புறநானூற்றைச் சிறப்பாகக் கொண்டு, அறம் என்பதன் விளக்கம், தமிழிலக்கியங்கள் கூறும் சில அறக்கருத்துக்கள், அறம் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூற்றுச் செய்திகள், அவற்றினூடாக வெளிப்படும் கொடை, விருந்தோம்பல், அன்பு, அருள், போரறம், உழவுத்தொழிலின் மேன்மை, நீதி, மனையறம், பிறர் நலம்பேணல், கல்வி, இல்லறம், மக்கட்பேறு, நிலையாமை, உலகப்பொதுமையறம், நட்பு முதலான அறம் சார்ந்த கருப்பொருள்களைச்சான்றாதாரங்களுடனும்,போதியவிளக்கங்களுடனும் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

போரும் போர்சார்ந்த ஒழுக்கமும் புறமெனப்படினும், மனித வாழ்வின் பன்முகக்கூறுகளெல்லாம் அறத்தின்பாற்பட்டவையே என்பதைப் புறநானூறு தெளிவாகக் காட்டுவதை நூலாசிரியரின் இந்நூல் புரிய வைத்துள்ளது.இளையவர்ஆனாலும்இலக்கியத்தைப்பொறுத்தவரையில் அனுபவமுள்ள ஆற்றலாளர்போன்று விளங்குகின்றார். எளிமையான சொல்லாட்சி, காட்சிகளைச் சித்திரித்துக்காட்டும் திறமை, உணர்ச்சிகளை ஆங்காங்கே புலப்படுத்தும் தன்மை, வாக்கிய ஒழுங்கமைப்பின்மூலம் எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாக்கும் நுட்பம், ஊடும்பாவும்போல் ஒவ்வொரு பாடலினூடும் தெளிவாக மிளிரும் கருத்துக்களைக் கூட்டித்தரும் ஆற்றல் ஆகியன நூலை இரசித்துப் படிப்போர்க்குச் சுவையூட்டுவன. இந்நூலில் இரத்தினச் சுருக்கமாச் சொல்லப்பட்ட விடயங்கள், தமிழர் பண்பாட்டுப் பெட்டகங்களாகப் போற்றப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியுள்ளது.

திரு. முருகையா சதீஸ் அவர்கள், ஏற்கனவே கவிதைத் தொகுதி ஒன்றினையும், நாவல்கள் இரண்டையும், திறனாய்வு நூல்கள் மூன்றையும் வெளியிட்ட பெருமைக்குரியவர். இருநூல்களின் பதிப்பாசிரியர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் உதவி விரிவுரை யாளராகப் பணியாற்றியவர். ஏராளமான புலம்பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களுடன் இலக்கியத் தொடர்புடையவர். எழுத்தைத் தவமாகக் கருதிச் செயற்படுபவர். அவரது எழுத்துக்களில் இந்த நூலானது ஒரு மகுடமாக ஒளிரும் என்பதில் ஐயமில்லை. பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், தமிழியல் ஆய்வாளர்களும், இலக்கிய ஆர்வலர்களும் இந்நூலை வாங்கிப் பயன்பெற வேண்டும். நூலாசிரியருக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள். அவரது இலக்கியப்பணி – எழுத்துப் பணி மேன்மேலும் செறிவுடனும், வல்லமையுடனும் தொடரட்டும்.

**கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு,**
கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வுநிலைப் பிரதியதிபர்,
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

கவிஞர் முல்லை என்று நன்கு அறியப்பட்ட முருகையா சதீஸ் அவர்கள், கிழக்கிலங்கையின் திருகோணமலை – திரியாய்க் கிராமத்தைச் சேர்ந்தவர். திரியாய்த் தமிழ்மகாவித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியையும் பின் திருகோணமலை இகிச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் கற்றவர். பல்கலைக்கழகத் தெரிவையடுத்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று அங்கேயே உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். இவர் தன்னைக் கவிஞராக, விரிவுரையாளராக, ஆய்வாளராக, கதையாசிரியராக, இலக்கிய விமர்சகராக, பதிப்பாசிரியராகப் பல தளங்களில் நிலைப் படுத்திக் கொண்டவர்.

“ஆறிப்போன காயங்களின் வலிகள்” (2021) – கவிதைத் தொகுதி, “ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு” (2022) – ஆய்வு நூல், “தமிழில் இலக்கியத் திறனாய்வும் ஈழத்தில் அதன் வளர்ச்சிப் போக்கும்” (2022) – ஆய்வு நூல், “தமிழ்க் கவிதையும் திறனாய்வும்” (2022) – ஆய்வு நூல், “கண்ணீரில் கரைந்த தேசம்” (2022) – நாவல், “ஆறாத வடு” – நாவல் (2023) முதலியவை இதுவரை வெளிவந்த இவரது நூல்களாகும். அதுமட்டுமன்றி வே. தில்லைநாதனின் “அவளுக்கு ஒரு கணவன் தேவை” (2022) – குறுநாவல், சோ. சுதர்சனின் “குருதி படிந்த நிலம்” (2023) – கவிதைத் தொகுதி முதலிய படைப்புக்களின் பதிப்பாசிரியராகவும் திகழ்கின்றார். இதுவரை சுமார் 30க்கும் மேற்பட்ட இவரது ஆய்வுக் கட்டுரைகள், சர்வதேச ஆய்வு மாநாட்டு மலர்களில் வெளிவந்துள்ளன. இவரது படைப்புக்கள் ஈழத்தில் மட்டுமன்றிப் புலம்பெயர் தேசங்களிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

இப்போது “புறநானூற்றில் அறம்” என்னும் இவரது ஆய்வுநூல் ‘அம்மா பதிப்பகத்தின்’ 31ஆவது வெளியீடாக வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்வடைகின்றேன். பண்டைத் தமிழகத்தின் அரசியல், சமூக, பண்பாட்டு வரலாறுகளைத் துல்லியப்படுத்தும் அரிய கருவூமாகப் புறநானூறு திகழ்கின்றது. அதில் பண்டைத் தமிழரின் வாழ்க்கைத் திறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது உள்ளபடியே விளக்கப்பட்டுள்ளது. புறநானூறு என்றால் போர் இலக்கியம்தான். அப்படிப் போரியல்சார் ஒழுகலாறுகளைப் பேசும் சிறந்த நூலாகப் புறநானூறு திகழ்ந்தாலும், மானிட வாழ்க்கைக் குரிய நல்லறங்களும் அதற்குள் புதைந்துதான் கிடக்கின்றன. அத்தகைய நீதிசார் அறக்கருத்துக்களைப் புறநானூற்றின்வழி ஆய்வுக்குட்படுத்திப் பேசுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இதன்வழி, வாழ்வியல் அறத்தைப் போதிப்பதில் புறநானூற்றின் வகிபங்கு எத்தகையது என்பதை இந்நூல் அடையாளப்படுத்தியுள்ளது. கட்டிறுக்கமும் நடையில் தெளிவும் உரிய சான்றுகளுடன் கூடிய எடுத்துரைப்பும் இந்நூலிற்குப் பலம் சேர்த்துள்ளன. அவரது "புறநானூற்றில் அறம்" எனும் இந்நூலை வெளியீடு செய்வதில் அம்மா பதிப்பகம் பெருமை கொள்கிறது. அவர் தொடர்ந்தும் பயன்மிகு படைப்புக்களைத் தரவேண்டும் என்பதே எனது அவா. நூலாசிரியருக்கு மகிழ்வான வாழ்த்துக்கள்.

அன்புடன்,

**கலாபூஷணம் திருமலை சுந்தா,**

அம்மா பதிப்பகம்,

31/1, சமாது ஒழுங்கை,

திருகோணமலை.

18.07.2023.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

புறநானூற்றுப் பாடல்கள் கற்பனையும், கனவும், பொய்யும், புனைவுமற்ற தமிழ்ச் சமூகத்தைக் உள்ளபடி காட்டும் படிமக்கலங்கள். அவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட உண்மைச் சரித்திரமாகும். அதன்கண் அறமும், பொருளும் முதலாக வாழ்க்கைக்கு இன்றியமையாத மறம், மானம், மாண்டவழிச்செலவு முதலிய நற்பண்புகளும், கடமையும், நற்றிறமும், உயிரோடு கெழுமிய நட்பும், செங்கோன்மையும், கடவுட் பற்றும் பகைமையொடு பொருது காட்சியையும் காணலாம். படையொடு கூடியபெருவேந்தரையும்,கொடையுடைமைபொருந்தியவள்ளல்களையும், கற்றறிந்து அடங்கிய சான்றோரையும் காணலாம்.

அத்தகைய சிறப்பையுடைய புறநானூற்றின்கண் சிதறுண்டு கிடக்கும் அறம்சார் கருத்துக்களை இந்நூலின்வழி கட்டமைக்க முனைந் துள்ளேன். அதன் பொருட்டே "புறநானூற்றில் அறம்" என்னும் தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. பிரதான தலைப்பை ஆராயும் முன் அதற்கு இசைவாக, அறம் என்பதன் விளக்கமும் தமிழிலக்கியங்கள் கூறும் அறக்கருத்துக்கள் சிலவும் விளக்கப்பட்டுள்ளன. அதன் பின்புதான் புறநானூற்றில் பொதிந்துள்ள அறக்கருத்துக்கள் போதிய சான்றுகளுடன் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆராயப்பட்டுள்ளன. இந்நூல் தமிழுலகிற்கு ஏதோவொரு வகையில் பயனளிக்கும் என நம்புகிறேன். இந்நூல் உருவாக்கத்தில் பெரும் பங்களிப்பை வழங்கிய கலாநிதி. பண்டிதர் செ. திருநாவுக்கரசு அவர்களுக்கும், இந்நூலை வெளியீடு செய்யும் 'அம்மா பதிப்பக' நிறுவுனர் கலாபூஷணம் திருமலை சுந்தா அவர்களுக்கும், நூலை அழகாக வடிவமைத்த அச்சகத்தாருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அன்புடன்,

**முருகையா சதீஸ்,**

20.07.2023.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறநானூற்றில் அறம்

## 1.1. அறம் என்பதன் விளக்கம்

தமிழர் வாழ்வியலில் 'அறம்' என்ற தமிழ்ச் சொல்லானது, சங்ககாலத்தில் இருந்தே வழக்கில் இருந்து வந்துள்ளது. இன்றுவரை அதன் வீரியம் குன்றிவிடவில்லை. வடமொழிச் சொல்லாகிய 'தருமம்' (தர்மம்) என்ற சொல்லும் அறம் என்ற சொல் சுட்டுகின்ற கருத்தினைத் தருவதாகும். இந்தத் 'தருமம்' என்ற சொல்லும், தமிழர் வரலாற்றில் தவிர்க்க முடியாததொன்றாகப் பெருவழக்குப் பெற்று விட்டது. தமிழ் இலக்கியங்களும் 'அறம்', 'தருமம்' ஆகிய இரு சொற்களையும் பெருமளவிற்குப் பயன் படுத்தியும், பயன்படுத்திக்கொண்டும் வருகின்றன. 'அறு' என்னும் வினையடியால் பிறந்தது அறம் என்ற சொல்லாகும். அறுத்துச்செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, வேறு படுத்து முதலான கருத்துக்கள் இதற்கு உண்டு. மனிதர்கள், தமக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைமைகளின் தொகுப்பாகிய முழுநிறை வடிவமே அறம் எனக் கருதுவர். கிரேக்க மொழிச் சொல்லான 'எதிக்ஸ்' (ETHICS) என்பது, பழகிப்போன நடத்தை, வழக்கம், மரபு எனத் தொடக்கத்தில் பொருள் தந்தபோதும், பின்னர் நடத்தை என்னும் பொருளில் தொடர்ந்து பேணப் படலாயிற்று. மனித நடத்தை குறித்து ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள், வழக்கமாகப் பேணு கின்ற முழுமையான ஒழுக்கமாக (Morality) இது கருதப் படுகின்றது. திருக்குறள் நூலில்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற" (குறள்: 34)

என்னும் குறளானது, பொறாமை, பேராசை, வெகுளி, கடுஞ்சொல் ஆகிய மன மாசுகள் இல்லாமல் வாழ்வதை வலியுறுத்தியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று,

"அழுக்காறுஅவா, வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா தியன்றது அறம்" (குறள்: 35)

என்னும் திருக்குறளானது, அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் சேர்ந்தது என்பதை உணர்த்தி உள்ளது. அறக்கருத்துக்களை இலக்கியச் சுவை ததும்பக் கொடுக்கும்போது, அவை அற இலக்கியங்களாகின்றன. தமிழிலக்கியங்களில் பக்திக்கு அடுத்தாக அதிகளவில் பேசப்பட்டது அறம் என்பதாக ஆய்வாளர்கள் கருதுவர்.

தமிழர் வாழ்க்கையில் அறம், பொருள், இன்பம் ஆகிய கோட்பாடுகள் இருப்பினும் அவற்றுள் முதன்மை யானது அறமாகும். தனி மனித ஒழுக்கமும் பொது ஒழுக்கமும் சேர்ந்து அறமாகின்றது. உலகனைத்திற்கும் பொதுவான அறங்கள் சில இருப்பினும், குறித்ததொரு சமூகத்திற்குரிய அறங்களும், சிறப்பறங்களாகக் காணப் படுகின்றன. உதாரணமாக, இந்து ஆலயங்களுள் மேற்சட்டையின்றி ஆண்கள் செல்வது சமூக அறமாகப் பேணப்படுகையில், கிறிஸ்தவ தேவாலயங்களுள் மேற் சட்டையுடன், பாதணிகளுடன் செல்வது பொருத்தமான தாகக் கருதப்படுவதை நோக்கலாம். ஒரு காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அற விழுமியங்கள், இன்னொரு காலத்தில் மாற்றங்களுக்கு ஆளாவதுமுண்டு. இந்துக் களிடையே பால்ய விவாகம், மறுமணம் சம்பந்தமாக முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட கோட்பாடுகள் சமகாலத்தில் மாற்றங்கண்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. எனவே அறம் என்பது உலகம் சார்ந்த, சமுதாயம் சார்ந்த, சமூகம் சார்ந்த பொதுமைப் படுத்தப்பட்ட, ஏற்றுக் கொள்ளப் பட்ட விழுமியங்களின் தொகுப்பாக அமையும் எனக் கருதலாம். புறநானூற்றின் 31ஆம் பாடலில் கோவூர்கிழார் என்னும் புலவர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல"

(புறம்: 31)

எனக் குறிப்பிடுவது இங்கு கருதத்தக்கதாகும். அறம் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் இருப்பினும், அவை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தைப் பொறுத்து வேறுபடவும் கூடும். கடமை, தருமம், கற்பு, புண்ணியம், அறநூல், அறக்கடவுள், அறச்சாலை, தரும தேவதை, யமன், ஞானம், நோன்பு, நல்வினை எனப் பல பொருள்கள் பயன்படுத்தப் படுவதை அகரமுதலியும், தமிழகராதிகளும் எடுத்துக் காட்டியுள்ளன. அறத்தின் மையக்கருவாக அமையும் 'உயிரிரக்கம்' என்ற கருத்தே வலிமை பெற்றதாகும். ஒரு விதத்தில் சொல்லப்போனால் அறம் என்பது நீதி, நேர்மை போன்றவற்றைக் குறிப்பதாகும். தூய்மையானது, உண்மை யானது, நன்மையானது, நேர்மையானது, குணமு ள்ளது என்பவற்றோடு நல்லூழ், கடமை என்பவற்றையும் அறம் சார்பாக இடமறிந்து, பொருளறிந்து பயன்படுத்த முடியும்.

## 1.2. தமிழிலக்கியங்களில் அறம்

பொதுவாக நோக்கும்போது, ஏராளமான தமிழ் இலக்கியங்கள் அறம் பற்றிய செய்திகளுக்கு முக்கி யத்துவம் அளித்துள்ளன. அவற்றை எமது இலக்கிய அனுபவத்தோடு பொருத்திப் பார்த்தல் பயன்மிக்கதாகும். வடமொழியில் தர்மத்தைக் கடைப்பிடி என்ற பொருளில் 'தர்மம் சர' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழில் 'அறம் செய விரும்பு' என ஔவையாரும் ஆத்திசூடியில் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கௌவும்
தர்மம் மறுபடி வெல்லும் எனும் இயற்கை
தருமத்தை நம்மாலே உலகம் கற்கும்"

(பாஞ்சாலி சபதம்: 67, அருச்சுனன் சொல்வது)

என்று அருச்சுனன் கூறுவதாகப் பாரதியார் இயற்றிய பாஞ்சாலி சபதத்தில் இடம்பெற்றுள்ளதை நோக்கும்போது, தருமம் முதலில் தோற்றாலும் பின்னர் வெற்றிபெறும். இதுதான் உலக இயற்கை என்ற கருத்து முன் வைக்கப் பட்டுள்ளது. சிலப்பதிகாரம் இயற்றப்பட்டதன் மூன்று நோக்கங்களை இளங்கோவடிகள் கூறும்போது, அதில் ஒன்றாக 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூ உம்' (மதுரைக்காண்டம், பதிகம்: 55) எனக் கூறியிருப்பதன் மூலம், அரசியல் நெறி தவறியவர்கள் அறக்கடவுளால் அழிக்கப்படுவார்கள் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. 'மணிமேகலை, சிறைக்கோட்டத்தை அறக் கோட்ட மாக்கினாள்' எனும்போது, சிறையிலிருந்த குற்றவாளி களுக்கு அமுத சுரபியைக் கொண்டு உணவளித்ததன் மூலம் அவர்களின் பசியைப் போக்கியும், அவர்கள் குற்ற வாளிகளாக மாறியமைக்கான காரணத்தை அறிந்து ஆறுதல் கூறியும், நன்னெறிகளை உபதேசித்தும், அவர்கள் தன்மீது நம்பிக்கை வைக்குமளவிற்கு அன்புடன் அணுகியும், சிறையிலிருந்தவர்களை நல்லவர்களாக மாற்றியமைத்தாள் என்பதை அறியமுடிகின்றது.

இஸ்லாமிய இலக்கியமான சீறாப்புராணத்தில், முகமதுநபி (ஸல்) அவர்களின் தாயாராகிய ஆமீனா பற்றிக் கூறவந்த உமறுப்புலவர், "அறத்தினுக்கோர் இல்லிடம். அருட்கோர் தாயகம்" என்பார். இதில், அறம் திகழுகின்ற இல்லமாக ஆமீனா அம்மையார் திகழுகின்றார் எனக் கருதப்படுகின்றது. அதாவது, அறச்செயல்களின் உறை விடம் அவரென உணர்ந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்கமின்மை அன்றோ இன்றிவ் வுலகங்கள் இராமன்
பரக்குந் தொல்புகழ் அமுதினைப் பருகு கின்றதுவே”
(மந்தரை சூழ்ச்சிப்படலம்: 78)

கம்பராமாயணம், மந்தரை சூழ்ச்சிப்படலத்தில் வரும் இப்பாடலடிகளில், அரக்கர்களாகிய இராவணன் முதலியோர் செய்த பாவங்களும், தேவர்கள் செய்த அறச் செயல்களும் (புண்ணியங்களும்) துரத்துதலால் கைகேயி யானவள் தன்னிடமிருந்த நல்லருட் குணங்களை இழந்தாள் என்றும், அவளது இரக்கமில்லாத செயலினால் தான் இன்று உலகங்கள் அனைத்தும், இராமபிரானின் பெரும் புகழைப் போற்றி வணங்குகின்றன என்பதாகக் கூறப் பட்டுள்ளன. அறக்கடவுள், தருமதேவதை முதலான தெய்வங்களின் தோற்றம் பற்றியும் தமிழிலக்கியங்கள் கூறத் தயங்கவில்லை. இறைவனை ‘அறவாழி அந்தணன்’ (குறள்: 08) எனக்கூறியுள்ளார் திருவள்ளுவர். அவரே, ‘அறத்தான் வருவதே இன்பம்’ (குறள்: 39) எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் ‘அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை’ (குறள்: 32) என்றும் கூறியுள்ளார். அத்துடன் ‘அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை’ (குறள்: 49) என்பதும் திருக்குறள் அடியாகும். ‘அறன் வலியுறுத்தல்’ என அதிகாரத்தையே பத்துக் குறட்பாக்களுடன் தந்து அறத்தின் பெருமையை நிலைநாட்டியவர் திருவள்ளுவர். ‘அறத் திற்கே அன்புசார் பென்ப’ (குறள்: 76) என்றும் திருக்குறள் குறிப்பிட்டதையும் கருதவேண்டும். உயிர் வாழ்க்கையானது அன்போடு இணைந்தது என வள்ளுவர் கூறியதுபோல, அது அறத்தோடும் இணைந்தது எனக் கருதவேண்டும். புறநானூற்றில் 204ஆம் பாடலில் கழைதின் யானையார் என்னும் புலவர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈஎன இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்,
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று,
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று, அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"
(புறம்: 204)

எனக் கூறியிருப்பதன்மூலம் இரத்தலும், ஈதலும், கொள்ளலும், கொள்ளாமையும் வாழ்வியல் அறத்தைப் பொறுத்து எவ்வாறு அமையும் என்பதை எடுத்துக் கூறியுள்ளார். ஒருமுறை மன்னன் ஒருவனிடம் பரிசில் பெற வந்தபோது, மன்னனின் மகன், தான் உருட்டி விளையாடிய நடைவண்டியைப் பரிசில் பெற வந்த பெண்பாற் புலவருக்கு பரிசாகக்கொடுக்க முன்வந்தானாம். அந்த அறச் செயலை வியந்து, பொன்முடியார் என்னும் புலவர், 'நடை கற்குமுன் கொடை கற்றாயே!' என அச்சிறுவனைப் புகழ்ந்து பாடியதாகக் கூறப்படுகின்றது. சுருக்கமாகச் சொல்லப் போனால் மனம், புத்தி, சித்தம் ஆகிய அகநிலை உறுப்புக்களை அன்பில் தோயச்செய்து யார்மாட்டும் அன்புடையராய் வாழ்வதே அறமாகும்.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை"
(தொல். பொருள்: 89)

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"
(குறள்: 76)

"அறம்புரி சுற்றமொடு" (தொல். பொருள்: 190)

"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே"
(நன்னூல்: 10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைபோன்ற உதாரணங்கள் பலவற்றை நோக்கும்போது, அறம் என்ற சொல்லின் பயன்பாட்டைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க, சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு"

(குறள்: 204)

எனத் திருவள்ளுவர் கூறியிருப்பதும், பிறருக்குக் கேடு விளைவிப்பவரை அறம் சூழ்ந்து வருத்தும் என்பதனால் புரிந்து கொள்ள முடிகின்றது. பெரும்பாணாற்றுப்படையில் "அறம்புரி செங்கோல்" (அடி: 36) என வருவதும் இங்கு நோக்கத்தக்கது. திருமுருகாற்றுப்படையில்,

"அறுநான் கிரட்டி இளமை நல்லியாண்[டு]
ஆறினிற் கழிப்பிய அறனில் கொள்கை"

(அடி: 179 – 180)

என வரும் அடிகள், அறனில் கொள்கைபற்றி எடுத்தியம்பி உள்ளன.

"கடுஞ் சினத்த கொல்களிறும்,
கதழ்பரிய கலிமாவும்,
நெடுங்கொடிய நிமிர்தேரும்,
நெஞ்சுடைய புகழ்மறவரும், என,
நான்குடன் மாண்ட தாயினும், மாண்ட
அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்"

(புறம்: 55)

கொல்களிறும், விரைந்து செல்லும் குதிரையும், கொடி பறக்கும் தேரும், அஞ்சாத போர் மறவரும் உடையாய்! அவை நினக்குப் பெருமை தருவனவே; என்றாலும் அறநெறியை முதலாக உடையது அரசனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு. இவ்வாறு கூறப்பட்டிருப்பதை நோக்கும்போது, முடிசூடி ஆளும் மாமன்னர்களும்கூட அறநெறியிலேயே ஆட்சியைச் செலுத்த வேண்டும். அதுவே நன்மை தரும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அகத்திணை இலக்கியங்களில் ‘அறத்தொடு நிற்றல்’ என்னும் பண்பு பெருமளவிற்குக் காணப்படுவதை அவதானிக்கலாம். செவிலித்தாயானவள் நற்றாய்க்கு அவளது மகளின் காதல் பற்றி எடுத்துரைக்கும்போது, அறத்தொடு நின்று உண்மையை உரைப்பாள். இதேபோன்று தோழியும் பல சந்தர்ப்பங்களில் தனது தலைவியின் காதல் பற்றி அவளது வீட்டாருக்கு அல்லது தலைவனுக்குச் சொல்லும்போது அறத்தொடு நிற்றலைச் சங்க இலக்கியங்கள் எமக்குக் காட்டியுள்ளன.

“அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் குய்த் துரைத்தாள் யாய்”

*(கலித்தொகை 39: 20 – 21)*

என்பதும் அறத்தொடு நிற்றலை வெளிக்காட்டுகின்றது. இறையனார் களவியல் உரை நூலில், 26ஆம் சூத்திரமானது பின்வருமாறு அமைந்துள்ளது.

“காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்
நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்,
வரைவெதிர் கொள்ளாது தமரவண் மறுப்பினும்,
அவனூறு அஞ்சுங் கால மாயினும்,
அந்நால் இடத்தும் மெய்ந்நாண் ஓரீஇ
அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே”

*(இறையனார் அகப்பொருள்: 26)*

தோழியானவள் அறத்தொடு நிற்க வேண்டிய நான்கு இடங்கள் பற்றியும் இறையனார் களவியல் உரைஇலக்கணம் கூறியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று,

"அறத்தொடு நிற்குங் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப"
(தொல். பொருள்: 203)

அறத்தொடு நிற்கும் உரிய காலங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில், தோழியானவள் அந்த மரபைக் கடைப்பிடிக்கத் தேவையில்லை என்பதைத் தொல்காப்பியம் குறிப்பிடும். இவை தவிர அறம் சார்ந்த சில பாடலடிகளை இலக்கியங்கள் காட்டும் விதத்தினை நோக்குவோம்.

"அறன் கடைப்படாஅ வாழ்க்கையும் என்றும்"
(அகநானூறு: 155)

"பிறர் நோயுந் தன்நோய் போல்போற்றி அறனறிதல்"
(கலித்தொகை)

"திறவோர் செய்வினை அறமது ஆகும்"
(குறுந்தொகை: 247)

"அறம்புரி அருமறை நவின்ற நாவில்"
(ஐங்குறுநூறு: 387)

"அறனும் அன்றே; ஆக்கமும் தேய்மென"
(நற்றிணை: 68)

"அறம்புரி அந்தணர் வழிமொழிந் தொழுகி"
(பதிற்றுப்பத்து, மூன்றாம் பத்து: 4)

இவைபோன்ற ஏராளமான இலக்கியச் சான்றுகளைத் தமிழ் இலக்கியங்களில் அவதானிக்க முடிகின்றது. கலித்தொகை யின் நெய்தற்கலிப் பாடல் ஒன்று, அறச்செயல்கள் எவை என்பதைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆற்றுதல் என்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையர் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்”

*(கலித்தொகை 133: 6 – 14)*

வறியவர்க்கு உதவுதல், தன்னுடன் சேர்ந்தவரைப் பிரியா திருத்தல், உலக நடையறிந்து ஒழுகுதல், தனது உற்றார் உறவினருடன் சினங்கொள்ளாதிருத்தல், அறியாமை மிக்க வரின் சொல் கேளாதிருத்தல், மறைக்க வேண்டியவற்றை பிறர் அறியாமல் மறைத்து நடத்தல், பாரபட்சம் காட்டாமல் நடுநிலைநின்றுநீதிவழங்கல்,தன்னைப்போற்றாதவரையும் பொறுத்துக் கொள்ளல் முதலான அறச்செயல்கள் பற்றிக் கலித்தொகை இவ்வாறு கூறியுள்ளது.

“நீதிநூல் பயில்” (புதிய ஆத்திசூடி)

“அறக்கண்ட நெறிமாண் அவையம்”

(புறநானூறு)

இவை அறம், நீதி, அற அவையம் ஆகியன ஒரே பொருளில் விளங்குவதைக் காட்டியுள்ளன. மதுரையில் அமைந்திருந்த அற அவையமானது, துலாக்கோல்போலச் செயற்பட்டது என்பதை மதுரைக்காஞ்சி நூலும் எடுத்துக் காட்டியுள்ளது. திருக்குறளைப் பின்பற்றியே நாலடியாரும் ‘அறன் வலியுறுத்தல்’ அதிகாரத்தில் பத்து வெண்பாக் களைத் தந்துள்ளது. இன்னா நாற்பது, இனியவை நாற்பது முதலிய நூல்கள், அறத்தின் வழியே செயற்பட வேண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகளால் பெறும் இன்பங்களையும், அறமற்ற செயல்களால் அடைகின்ற துன்பங்களையும் கூறியுள்ளன. இவை போன்ற சங்கமருவிய கால அறநூல்கள் யாவும், அறக் கருத்துக்களையே மிகுதிப்படுத்துவனவாக விளங்குகின்றன. ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆகிய மருத்துவப் பெயர்களால் விளங்கும் நூல்கள், உடலுக்கு வரும் நோய்களை மருத்துவ மூலிகைகள் தீர்ப்பது போல, உள்ளத்திற்கு வருகின்ற நோய்களை அறநெறியில் அமைந்த ஒழுக்க முறைமைகள் சரியாக்கும் என்கின்றன. ஆசாரம் என்பது ஒழுக்கமாகும். ஆசாரக் கோவை எனும் நூல், நாம் பின்பற்ற வேண்டிய அற ஒழுக்கங்களைப் பட்டியற்படுத்திக் காட்டியுள்ளது. ஏனைய முதுமொழிக் காஞ்சி, பழமொழிநானூறு, நான்மணிக்கடிகை போன்றனவும் அறக்கருத்துக்களைப் பெருமளவிற்குக் கூறுவனவாகும்.

தமிழிலக்கியங்களில் பக்திக்கு அப்பால் அறக் கருத்துக்களே மேம்பட்டு நிற்கின்றன. ஓர் அரசன், அற வழியில் செயற்பட்டு மக்களுக்கும் ஏனைய உயிர்களுக்கும் ஆபத்து வராமல் பாதுகாத்து அரசாட்சியை நடத்த வேண்டும் என்பதைச் சேக்கிழார் பெருமான் தமது பெரிய புராணத்தின், திருநகரச் சருக்கத்தில் மனுநீதி கண்ட சோழனின் வரலாற்றைக் கூறுமிடத்துக் கூறிச்செல்கின்றார்.

"மாநிலங்கா வலனாதல் மன்னுயிர் காக்குங் காலை
தானதனுக் கிடையூறு தன்னாற் றன்பரி சனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் ஏனைய வுயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந் தீர்த்தறங் காப்பா னல்லனோ?"

(திருத்தொண்டர் புராணம்: *121*)

ஒரு மாநிலத்தைக் காவல் புரிகின்ற அரசன், தன்னால், தனது இன சனங்களால், பகைவரால், கள்வரால்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய உயிர்களால் ஏற்படக்கூடிய பயத்தைப்போக்கி அறநெறியில் ஆட்சி செய்ய வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாக இச்செய்யுள் கூறியுள்ளது. மேலும், பெரிய புராணத்தில் இடம்பெற்ற இன்னோர் பாடலானது, மனுநீதி கண்ட சோழனின் நீதி வழங்கும் முறையைக் காட்டி நிற்கி ன்றது. மன்னன் மகனான வீதிவிடங்கன் ஊர்ந்து சென்ற தேர்க்காலில் அகப்பட்டு, ஈன்று அண்மைப்பட்ட பசுக் கன்றானது இறந்துவிட்டதைக் கண்ட தாய்ப்பசுவானது, துக்கம் தாங்காமல், அரசனின் மாளிகை வாயிலில் கட்டப் பட்டிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அடித்தது. பசு, மணியடித்ததன் காரணத்தை அமைச்சர் மூலம் அறிந்த மனுவேந்தன், எவருடைய சொல்லையும் கேளாமல் பசு அடைந்த துயரத்தைப் போலவே தானும் தன் மகனை இழந்து துயரடைவேன் எனக்கருதி, மகனை வீதியில் கிடத்தித் தானே அவன்மீது தேரை ஊர்ந்து சென்றான். இதனை வெளிப்படுத்தும் முகமாகச் சேக்கிழார் தந்த பாடல் வருமாறு,

"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்;
அருமந்த அரசாட்சி அரிதோ?மற் றெளிதோ?தான்!"

(திருத்தொண்டர் புராணம்: *129*)

இவை போன்று அறக்கருத்துக்களை எடுத்துக் காட்டும் ஏராளமான தமிழ் இலக்கியங்களை நாம் இனங் காணமுடியும். இன்றுவரை இது தமிழிலக்கியங்களில் தொடர்கிறது. 'அறம் காத்த தேவியே!' என்று இறைவியைப் போற்றுவதும், தம்மை வஞ்சித்து மனக்கவலைக் குள்ளாக்கிய மன்னர்களை அல்லது புலவர்களை அழிந்து போகும்படி கசப்புணர்வுடன், சில புலவர்கள் கடுமையான சொற்களினால் அறம் பாடுதலும், இலக்கியங்கள் மூலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அறிந்தவைகளே ஆகும். இதனாற்றான் தமிழில் ஒரு சொல் வெல்லும், இன்னொரு சொல் கொல்லும் என்று கூறப்படுகின்றது.

"தருமம் உனைத்தேடித் தாரமென்று வந்தது
தாய்தந்தை தெய்வம் எல்லாம் நீயேதான் என்றது"
*("அதிஸ்டம் அழைக்கிறது" திரைப்படம், 1976)*

"தர்மம் தலை காக்கும்
தக்க சமயத்தில் உயிர்காக்கும்
கூட இருந்து குழிபறித்தாலும்
கொடுத்தது காத்து நிற்கும்"
*("தர்மம் தலைகாக்கும்" திரைப்படம், 1963)*

"கொடுப்பவர் எல்லாம் மேலாவார் - கையில்
கொள்பவர் எல்லாம் கீழாவார்"
*("கர்ணன்" திரைப்படம், 1964)*

சனரஞ்சகத் தன்மையுடைய தமிழ்த் திரைப் படங்களில் இடம்பெற்றுள்ள பாடல்களில்கூட ஆங்காங்கே அறம், தருமம், கொடை முதலிய கருத்துக்களை எடுத்துக் காட்டும் பாடலடிகள் இடம் பெற்றிருந்தமையை மேலே உள்ள உதாரணங்கள்மூலம் அறிந்துகொள்ளலாம். ஆகவே தமிழிலக்கிய வரலாற்றில் எந்தக்காலத்திலும் அறம் பற்றிய செய்திகள் இடம் பெறாமலில்லை. இலக்கியங்களில் அது பயன்படுத்தப்பட்ட இடங்களைப் பொறுத்து சொல்லளவில் வேறுபட்டிருந்தாலும் பொதுவாகக் கருத்தளவில் ஒருமித்த தன்மையையே காட்டி நிற்பதைக் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3. புறநானூறு – ஓர் அறிமுகம்

தமிழர்களின் தொன்மையானதும் முதன்மையானது மாகிய இலக்கியமாகச் சங்க இலக்கியங்கள் திகழுகின்றன. காலம் கவர்ந்தவைபோக, எஞ்சிய தமிழ் நூல்களைத் தமிழ்ப் பற்றுடையோர் யாப்பு, பொருள், வண்ணம், அளவு என்ற வகையில் தொகுத்தளித்தனர். ஏறத்தாழ 35000 அடிகளைக் கொண்டமைந்ததாகச் சங்கப் பாடல்கள் விளங்கு கின்றன.இவற்றுள்பல்வேறுபுலவர்களின்தனிப்பாடல்களின் தொகுதி எட்டுத்தொகை எனவும், தனித்தனியே புலவர்கள் செய்த நீண்ட பாடல்களின் தொகுதி பத்துப்பாட்டு எனவும் அழைக்கப்படுகின்றது. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூ று, புறநானூறு ஆகிய நூல்கள் எட்டுத் தொகையில் அடங்கும். ஆற்றுபடை இலக்கியங்களான திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, கூத்தராற்றுப் படை (மலைபடுகடாம்) ஆகியனவும், குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய நூல்களும்பத்துப்பாட்டில் அடங்கும்.

காதலும் காதல் சார்ந்த ஒழுக்கத்தினையும் அகம் என்றும், ஏனைய போர், வெற்றி, கொடை, நட்பு, அறவுரை, கல்வி, இல்லறம் முதலானவற்றைப் புறம் என்றும், இருவகைப்படுத்திப் பழந்தமிழ் இலக்கியங்களின் பொருள் நெறியை வகுத்தனர். தலைவன், தலைவி என்றில்லாது, சுட்டி ஒருவர் பெயர் குறிப்பிடப்படின் அதுவும் புறத் திணையில் அடங்கிவிடும். அதேபோன்று இருதிணைக் கருத்துக்களும் இணைந்து வந்தால், அதுவும் புறத் திணையில் அடங்கிவிடும். இவ்வாறு வரையறை செய்து கொண்டு சங்ககால இலக்கியம் நோக்கப்பட்டது. இருமனம் கலந்த காதலும், உணர்வுகளும், பிரிவுத் துயரங்களும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிப் பிரவாகங்களும், வரைவு முடுக்கங்களும் அகத் திணையின் பாற்பட, பகைவர் நாட்டுடனான போரும், வெற்றிகளும், இரவலர்க்கான கொடைகளும், விருந் தோம்பல்களும் வாழ்வியல் அறங்களும், சமூக ஊடாட்டங் களும் புறத்திணையின்பால் அடங்குவனவாயின. பழந் தமிழ் இலக்கிய மரபில் திணை விரவி வருவதும் இடைக் கிடையே நிகழ்ந்துள்ளது. சங்க இலக்கியத்தின் அடிப்படைப் பண்பு இவ்வாறு அமைய, இனிப் புறநானூற்றை நோக்குவோம்.

எட்டுத்தொகை நூல்களில் புறப்பொருள் பற்றி அமைந்த பிரதானமான நூலாகப் புறநானூறு விளங்கு கின்றது. இது 4 – 40 அடிகள் வரையிலான செய்யுள்களைக் கொண்டது. சுமார் 160 புலவர்கள் பாடிய செய்யுள்கள் இதில் அடங்கியுள்ளன. சில செய்யுள்களை இயற்றியவர் பெயர்களை அறிய முடியவில்லை. இரும்பிடர்த்தலையார், தொடித்தலைவிழுத்தண்டினார் முதலான காரணப் பெயர் களால் புலவர்களின் பெயர்கள் அழைக்கப் பட்டுள்ளன. கபிலர், பரணர், பிசிராந்தையார். கணியன் பூங்குன்றனார், பாண்டியன் அறிவுடைநம்பி, கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி முதலான பலபேரை இனங்காட்ட முடியும். 40க்கும் மேற்பட்ட சங்கப்பெண் புலவர்கள் இருப்பதாகக் கூறப்பட்டாலும் ஔவையார், பொன்முடியார் முதலான சிலர் பாடிய பாடல்கள் புறநானூற்றிலும் இடம்பெற்றுள்ளன. மன்னர்களே புலவர்களாகவும் விளங்கி யுள்ளனர். புற நானூற்றில் சில பாடல்களின் அடிகள் சிதைந்துள்ளன. 267, 268 ஆம் பாடல்கள் இரண்டும் கிடைக்கவில்லை. பழந்தமிழர் வாழ்வியலின் பல்வேறு அம்சங்களையும் புறநானூறு எடுத்துக்காட்டியுள்ளது. காதலும் வீரமும் மாத்திரம் அல்ல, வாழ்வின் சகல ஊடாட்டங்களிலும் மக்களின் நிலைப் பாடுகள் குறித்த தகவல்களையும் தந்துள்ளது. தமிழர் பண்பாட்டு விழுமியங்களை இந்நூல்மூலம் அறிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது. பழந்தமிழர் ஆட்சி முறைகள் பற்றியும், ஆட்சியாளர்கள் பற்றியும் தெரிந்து கொள்வதற்குப் புறநானூறு வழி காட்டியுள்ளது.

"புறநானூற்றுப் பாடல்கள் வாழ்வியல் அறங்களை எடுத்தோதுகின்றன. போர் அறமும், குழந்தைச் செல்வச் சிறப்பும், சங்கப்பாடல்கள் காட்டுவனபோல் எவையும் காட்டுவனவல்ல. நல்லது செய்வதும் அல்லது செய்வதும் அதனால் வருகின்ற விளைவும் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. சமுதாயமும் வாழ்வியலும் ஒருங்கிணைந்து செல்ல அறம் முக்கியமானதாகும். அறத்தின் வழியே வாழ்க்கை பயணிக்க வேண்டும். மறந்தும் பிறன்கேடு சூழக்கூடாது. தீமை பயத்தல் என்றும் தீமையே தரும் என்பதை விளக்கப் புறப்பாடல்களில் சான்றுகள் உள. புகழறம், கல்வியறம் போன்றவை வாழ்வியல் அறத்தை மெருகூட்டுவனவாகும். அரசர்களுக்கிடையே மூளும் சண்டையும், அதனைச் சார்ந்து சந்துசெய்து வைத்தலும் பண்பாட்டு அறமாக இருந்து வந்தது. இதனை நாளும் வளர்த்தும், வளர்வித்தும் வருவது நமது பண்டைய இலக்கியமாகும்" ('புறநானூற்று பாடல்களில் அறவாழ் வியல் கூறுகள்', வல்லினம் மின்னிதழ், 07.12. 2022).

புறநானூற்றில் அதிக பாடல்களைப் பாடியவர்களில் ஔவையார் (33) இடம்பெறுகின்றார். அடுத்துக் கபிலர் (28) இடம்பெறுகின்றார். முதலில் முடிமன்னர் மூவர் பற்றிய பாடல்கள், அடுத்துக் குறுநில மன்னர் - வேளிர் பற்றிய பாடல்கள், பின்னர் போர் பற்றிய பாடல்கள், கையறுநிலைப் பாடல்கள், நடுகல் பற்றிய பாடல்கள், மகளிர் உடன்கட்டை ஏறல்தொடர்பானபாடல்கள்என்றவாறுஓர்ஒழுங்கமைப்பில் நூல் தொகுக்கப்பட்டுள்ளது. அக்காலத்துத் தமிழ் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, கலைவளர்ச்சி, நாகரிகம், பண்பாடு, வீரம், கொடை, ஆடை, நட்பு, அணிகலன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கவழக்கங்கள், வாணிபம் முதலானவற்றை எல்லாம் புறநானூற்றில் கண்டுகொள்ள முடிகின்றது. அக்காலச் சமூக நிலையின் ஒருபகுதியாகப் பெண்கள் மங்கல அணி அணிதல், இறந்தபின் தாழியில் கவித்தல், நடுகல் நடுதல், நட்ட கல்லைச் சுற்றி மயில்பீலி அணிவித்து மது வார்த்தல், கணவனை இழந்த பெண்கள் அணி கலன்களைத் துறந்து கைம்மை நோன்பு நோற்றல், உடன்கட்டை ஏறல் போன்ற வழக்கங்களையும் புறநானூற்றில் தரிசிக்க முடியும். 10 வகையான ஆடைகள், 28 வகையான அணிகலன்கள், 30 வகையான படைக்கலன்கள், 67 வகையான உணவுகள் பற்றிப் புறநானூறு குறிப்பிடுவதாக ஆய்வாளர்கள் கருதுவர். குழந்தைக்குக் கையிலே வேல் கொடுத்துப் போருக்கு அனுப்பும் மகளிர், முறத்தால் புலியை விரட்டும் மகளிர் எனப் பெண்களின் வீரம் பேசப்படுகின்றது.

அக்காலச் சமூக நிலையைச் சுட்டிக்காட்டும் கண்ணாடியாகப் புறநானூற்றைக் கருதலாம். பாண்டியன் நெடுஞ்செழியன் முதலான பதினெட்டுப் பாண்டிய மன்னர்களைப் பற்றியும், கரிகால் சோழ மன்னன் முதலான பதினெட்டுச் சோழ மன்னர்கள் பற்றியும், இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் முதலான பதினெட்டுச் சேர மன்னர்களைப் பற்றியும் சிறப்பித்துப் பாடப்பட்ட வரலாற்றுக் குறிப்புக்கள் இந்நூலில் உள. பழைய போர்க்களங்களில் வெண்ணிப் பறந்தலை, வாகைப் பறந்தலை, கழுமலம், தகடூர், தலையாலங்கானம், கானப்பேரெயில் முதலானவை குறிக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் ஜோர்ச் எல். அகார்ட் என்பவர், ஆங்கிலத்தில் 'The Four hundred Songs of War and Wisdom: An Anthology of poems from Classical Tamil, the Purananuru' (1999) என்ற தலைப்பில் புறநானூற்றை மொழிபெயர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய கிரேக்கப் பழங்கவிதைகளுடன் புறநானூற்றுப் பாடல்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்த பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள், புறநானூற்றுக் கவிதைகளை 'வீரயுகக் கவிதைகள்' என்று குறிப்பிட்டுள்ளார். ஜி.யு. போப் எனும் பெரியார், புறநானூற்றின் பல பாடல்களை 'Extracts from purananuru And purapporul venbamalai' என்ற பெயரில் மொழிபெயர்த்தார். மகாவித்துவான் உ.வே. சாமிநாதையர், 1894 இல் பழைய உரை மூலத்துடன் (முதல் 266 பாடல்களுக்கு மட்டும் பழைய உரை கிடைத்துள்ளது) மிகுதிப் பாடல்களுக்கும் குறிப்புக்கள் எழுதிப் பதிப்பித்தார். புறநானூற்று நூலானது, தமிழ்ச் சமூகத்தினால் இன்று வரையும் பண்பாட்டுப் பெட்டகமாகப் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## 1.4. புறநானூற்றில் காணப்படும் அறம் பற்றிய கருத்துக்களும் செய்திகளும்

சங்க இலக்கியமான புறநானூற்றுப் பாடல்களில் அதிகமானவை போர் பற்றிய செய்திகளுக்கே முதன்மை அளித்துள்ளன. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமக்குள் மாறுபட்டு ஒருவரோடு ஒருவர் பொருதிக்கொண்ட வரலாற்றுச் செய்திகள் இவற்றுள் அடங்குகின்றன. இயற்கை வளமும், மனித வளமும் மிக்குற்றிருந்த ஒரு நாட்டினின் மீது படையெடுத்து, அதனை நிர்மூலமாக்கி அழித்து, பொருள்களைச் சூறையாடி – அபகரித்து, வெற்றிக்கொடி நாட்டி மீண்ட மன்னனின் வீரப் பிரதாபங்களையும், போர் வெற்றிகளையும் புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். இங்கே நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், மூவேந்தர்கள் எல்லோரும் தமிழர்கள் என்பதும், அவர்கள் ஆட்சி செய்த நாடுகளும், பிரதேசங் களும் தமிழ் நாட்டிற்கு உரித்தானவை என்பதுமாகும். ஆகவே சகோதரச் சண்டையைப் பற்றிய, ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனுக்காகச் சார்பு நிலையில் நின்று பாடிய பாடல்கள் புறநானூற்றில் ஏராளம் காணப்படுகின்றன.

வெற்றிபெற்ற மன்னனின் கீர்த்தியானது, அவனால் சூறையாடப்பட்ட எதிரி நாட்டின் பொருட் செல்வங்களை இரவலர்க்கும் புலவர்களுக்கும் வாரி வழங்குவதிலும் தங்கியிருந்தது. இதற்கு அப்பால் புலவர்களே மன்னர் களினதும், வள்ளல்களினதும் வள்ளன்மையை வியந்து பாராட்டிய பாடல்களும் காணப்படுகின்றன. அத்துடன் புலவர்கள்அரசனுடனானநட்பினைவலுப்படுத்திக்கொண்டு அவனுக்குக் கூறிய அறிவுரை களும், நீதிப்போதனைகளும் சமூகம் தழுவிய அறக் கருத்துக்களும் புறநானூற்றுப் பாடல்களில் ஆங்காங்கே தென்படுகின்றன. இந்நூ லிலுள்ள அறம் சார்ந்த பாடல்களில் விருந்தோம்பலும், கொடைத்திறமும் பெரிதும் போற்றப் பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. தம்மை நாடி வந்த இரவலர்க்கு - புலவர்களுக்கு - பாணன், விறலி, கூத்தன், கூத்தி முதலான கலைஞர்களுக்கு, அவர்களது பசியைப் போக்கிய பசிப்பிணி மருத்துவர்களாக மன்னர்களும், வள்ளல்களும் திகழ்ந்தமை பற்றியும், அவர்களது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுத் தேர்கள், யானைகள், குதிரைகள், பொன்னணிகள் முதலான பல வற்றையும் புரவலர்கள் வாரி வழங்கியமை பற்றியும் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன. இத்தகைய புறப்பாடல் களினூடாகப் பண்டையத் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வியல் பற்றியும், அதன் செல்நெறிகள் பற்றியும் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

### 1.4.1. கொடையும், விருந்தோம்பலும்

புறநானூற்றுப் பாடல்களில் அதிகமானவை போர், வீரம் பற்றிய செய்திகளுக்கே முதன்மை அளித்துள்ளன. ஆகையால் அவற்றோடு தொடர்புடையனவாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடையும், விருந்தோம்பலும் இணைத்துக் கூறப்பட் டுள்ளன. எந்த மன்னனை, வள்ளலைப் புலவர் புகழ்ந்து பாடுகின்றாரோ, அவனது போர்த்திறம், போர் வெற்றி ஆகியவற்றுடன், அவனை நாடிவரும் இரவலர்க்கு அவர்களது பசியைப் போக்கி, அவர்கள் வாழ்வதற்கு உதவும் வகையில் கொடைப் பொருள்களை நல்கியமை பற்றியும் கூடவே எடுத்துக் கூறியுள்ளனர். பொதுவாக நோக்கினால், விருந்தளித்தலின்போது, சோறு, இறைச்சி, மீன் முதலான உணவு வகைகளையும், மதுவையும் கொடுத்தல் பற்றியும், யானைகள், குதிரைகள், தேர்கள், பொன்னணிகள் முதலான பலவற்றையும் தாராளமாகக் கொடையாக வழங்குதல் பற்றியும் அறிய முடிகின்றது. சில சந்தர்ப்பங்களில் பரிசில் நீட்டித்தபோது (தாமதமானபோது) புலவர்கள் அவற்றை ஏற்காது புறம் தள்ளியதும் உண்டு. தம்மை மதித்து வரவேற்று, உபசரித்துக் கொடை வழங்கும் உயரிய மாண்பினையே புலவர்கள் கருதி நின்றனர். மன்னர் களும் அவர்களின் இயல்பறிந்து, முகங்கோணாது வாரி வழங்கினர். விதிவிலக்காகச் சில சந்தர்ப்பங்கள் அமையும் போது புலவர்கள், மன்னர்களுக்கு அறவழியில் செயற் படுவதன் அவசியத்தையும் எடுத்துரைத்தனர்.

"எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே!" (புறம்: 206) என்று ஔவையார் பொது வழக்காக அதியமானுக்குக் கூறியதும் இதனைத்தான். பிற்காலத்தில் "மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ? உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன். என்னை, விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்து ண்டோ? உண்டோ? குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு" என்று கம்பர் பாடியதும் இதனையே உணர்த்துகின்றது. இனிப் புறநானூற்றில் இடம் பெற்றிருக்கும் கொடைத்திறம் பற்றியும், விருந்தோம்பல் சிறப்புப் பற்றியும் நோக்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தண்டா ஈகைத் தகைமாண்..."

*(புறம் 06: 26)*

"...வாழிய குடுமி! தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வையிரியர்க்கு ஈத்த"

*(புறம் 09: 08 – 09)*

"பாணர் தாமரை மலையவும், புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்"

*(புறம் 12: 1 – 2)*

"பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும், குருசில்
வலிய ஆகும்நின் தாள்தோய் தடக்கை"

*(புறம் 14: 10 – 11)*

"புறவின் அல்லல் சொல்லிய, கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோல்நிறை துலாஅம் புக்கோன் மருக!"

*(புறம்: 39: 1 – 3)*

"தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க"

*(புறம்: 43: 6 – 7)*

மேலே காட்டப்பட்ட பாடலடிகள், புறநானூற்றில் காணப்படும் கொடைச்சிறப்பினை வெளிப்படுத்துவனவாகும்.

"ஒருநாள் செல்லலம், இருநாள் செல்லலம்,
பன்னாள் பயின்று, பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூண் யானை இயல்தேர் அஞ்சி
அதியமான், பரிசில் பெறாஉங் காலம்
நீட்டினும், நீட்டா தாயினும், யானைதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் தது அது, பொய்யா காதே!
அருந்தே மாந்த நெஞ்சம்!
வருந்த வேண்டா, வாழ்க, அவன் தாளே!"

(புறம்: 101)

அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைச் சிறப்பினை ஔவையார் இவ்வாறு விதந்து போற்றியுள்ளார். ஒருநாள், இருநாள் அல்ல, பலநாட்கள் மீண்டும் மீண்டும் சென்றாலும் முதல்நாளினைப் போலவே விருப்புடன் உதவும் பண்பாளன். யானையும், தேரும் உடையவன். யானைக் கொம்பினிடையே வைத்த கவளம் போல, ஒரு நாளும் தவறாதது அவன் தரும் பரிசில். ஆகவே அது நம் கையிலேயே உள்ளது. அது தப்பாமல் கிடைப்பது. நெஞ்சமே! நீ வருந்தாதே. வாழ்க அவன் தாள்கள்! என்று பொருள் தரும் இப்பாடல் மூலம், எவ்வேளை சென்றாலும் முன்னர் பரிசில் வாங்கியிருந்தாலும் தவறாமல் கிடைக்கக் கூடியது அதியமானின் கொடை என்பதை அழகாக எடுத்துக் காட்டியுள்ளார் ஔவையார்.

எவரும் வருவதற்கு எண்ணாத பயங்கலந்த வழியினூடு, நின்னைக் காணும் விருப்பத்தினால் இரவலர்கள் வருகின்றனர். அவர்களது மனக்குறிப்பை முகத்தோற்றத்தாலேயே கண்டுணர்ந்து, அவர்களது வறுமையைத் தீர்க்கும் நின்வள்ளன்மையால் தான், அவர்கள் நின்னைத் தேடி வருகின்றனர் என்று பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதியின் கொடைச் சிறப்பைப் போற்றுகின்றார் இரும்பிடர்த்தலையார் என்னும் புலவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நின்நசை வேட்கையின் இரவலர் வருவர்! அது
முன்னம் முகத்தின் உணர்ந்து, அவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே"

(புறம் 03: 24 – 26)

எத்தகைய ஆபத்தையும் பொருட்படுத்தாமலும், பெரும் பெயர் வழுதியைக் காணும் ஆவலினாலும் அவனிடம் சென்றால், வேண்டிய பொருட்களைத் தந்துதவுவான் என்ற நம்பிக்கையாலும் இரவலர்கள் செல்கின்றனர் என்ற கருத்து இப்பாடலடிகளில் மேம்பட்டு நிற்கின்றது. மேலும், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடிய செய்யுளொன்று, ஆய் அண்டிரன் என்ற வள்ளல்மீது விறலியை ஆற்றுப் படுத்தியதாக அமைந்துள்ளது.

"மெல்லியள் விறலி!நீ நல்லிசை செவியிற்
கேட்பின் அல்லது, காண்பறி யலையே,
காண்டல்சால வேண்டினை யாயின், மாண்டநின்
விரைவளர் கூந்தல் வரைவளி உளரக்,
கலவ மஞ்ஞையின் காண்வர இயலி,
மாரி யன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே!"

(புறம்: 133)

இப்பாடலில் "மாரி யன்ன வண்மைத் தேர்வேள் ஆயைக் காணிய சென்மே" எனக் கூறப்படுவதன் மூலம், மழைபோன்று கொடை வழங்கும் ஆயைக்காண இப்போதே செல்வாயாக! மழையினால் பல நல் விளைவுகள் ஏற்படுவது போல, அவனது கொடையினால் நீயும் வளம்பெற்று வாழ்வாய்! என ஆற்றுப்படுத்துவதைக் காண முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே மலையமான் திருமுடிக்காரியின் கொடையைப் புகழ்ந்து கபிலர் பாடிய பாடலாகப் புறநானூற்றின் 123ஆம் பாடல் அமைந்துள்ளது.

"நாட்கள் உண்டு, நாள்மகிழ் மகிழின்,
யார்க்கும் எளிதே, தேர் ஈதல்லே,
தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழாது ஈத்த இழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி உறையினும் பலவே."

(புறம்: 123)

மதுமயக்கத்தில் இருப்போர் அரச சபையிலே மகிழ்வுடன் இருக்கும்போது, தம்மை அறியாமலேயே தேரையும் இரவலர்க்கு வழங்கிவிடுவார். அது மிகவும் எளிதாக நிகழ்ந்து விடும். ஆனால் காரியோ, அவ்வாறு மதுமயக்கம் எதுவும் இன்றியே உள்ளத்தில் விருப்பத்துடன், தன்னிடம் வரும் இரவலர்களுக்கு தேர்களாகவே வழங்கு கின்றான். அவையும் ஒன்றிரண்டல்ல. முள்ளூர் மலையில் வீழும் மழைத்துளிகளிலும் அவன் வழங்கிய தேர்கள் பல வாகும் என்பது இச்செய்யுளின் பொருளாகும். கடையெழு வள்ளல்களில் ஒருவனான காரியின் கொடைத்தன்மையை இவ்வாறு உயர்வு நவிற்சியாகப் பாடியுள்ளார் கபிலர். இங்கே ஈகையின் பெருஞ்சிறப்பு உணர்த்தப்பட்டுள்ளது. இதேபோன்று மலையமான் திருமுடிக்காரியைப் பற்றிய இன்னோர் பாடலையும் (புறம்: 124) கபிலர் பாடியுள்ளார்.

"நாளன்று போகிப், புள்ளிடைத் தட்பப்
பதனன்று புக்குத், திறனன்று மொழியினும்,
வறிது பெயர்குநர் அல்லர், நெறிகொளப்
பாடுஆன்று, இரங்கும் அருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே."

(புறம்: 124)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் நல்ல நாள் பாராது, புள் நிமித்தம் பாராது, மன்னனைச் சந்திப்பதற்குரிய காலம் பாராது சென்று, தம் திறனற்ற சொற்களால் காரியைக் கண்டு பாடியவருங்கூட வெறுங்கையோடு திரும்பார். அவனது வள்ளன்மையின் சிறப்பு அத்துணைபெரியது என்று கபிலர் பாடியமையையும் நோக்க முடிகின்றது.

வேள்ஆய் அண்டிரன் என்பவனை உறையூர் ஏணிச் சேரி முடமோசியார் பாடிய இன்னொரு பாடல், "களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்..." (புறம்: 127) எனத் தொடங்குகின்றது. ஆய்வேளே! இனிய அடிசிலைப் பிறர்க்குத் தந்து உதவாதவர் சிலர்; தாமே உண்டு வயிற்றை நிறைப்பவர் அத்தகையோர்; புகழற்ற முரசு விளங்கும் அருளற்ற அரசர்கள் அவர்கள்; ஆனால் நீயோ, உனது யானைகள் அனைத்தையும் பரிசிலர்க்கு வழங்கி விட்டாய்; கொடுக்கவியலாத மங்கல அணி மட்டுமே நின் மனைவி அணிந்துள்ளாள்; பிறவெல்லாம் பரிசிலர் பெற்றுச் சென்று விட்டனர். வள்ளன்மை நிறைந்த ஆயே! நின் கோயில் மற்றையோன் நகரினும் மேன்மையுறுவதாக! என்று இப் பாடல் பொருள் தருகின்றது. இங்கே தன்னிடம் உள்ள யாவற்றையும் (மனைவியின் மங்கல நாணைத்தவிர) இரவலர்க்கு ஈயும் ஆய்அண்டிரனின் ஈகை உள்ளம் புலப் பட்டுள்ளது. இந்த அரசன்மீதான இன்னோர் பாடலையும் (புறம்: 130) உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரே பாடியு ள்ளார். இதில், நீ இரவலர்களுக்குக் கொடுத்த யானைத் தொகையை எண்ணினால், கொங்கரை, மேற்கடற் கரை யிடத்தே நீ போரிட்ட காலத்தில் நினக்குத் தோற்றோடிய கொங்கர் படையினர், தம் கையினின்றும் எறிந்து சென்ற வேல்களிலும் பார்க்கப் பலமடங்காகும் என்று கூறியதன் மூலம், ஆய் அரசனின் வள்ளன்மையைச் சிறப்பித்துள்ளார்.

இப்புலவரே வேள்ஆயினது கொடை வெற்றியைப் (புறம்: 129) பாடிய பாடலொன்று உயர்வு நவிற்சியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. அதில் ஆய்அண்டிரன் இரப்போர்க்கு வழங்கிய யானைகள் மிகப் பலவாகும். வானிலே நிறைந்திருக்கின்ற விண்மீன்களின் எண்ணிக்கையிலும் பார்க்க அவை அதிகமானதாகும் எனப் புகழ்ந்து ஏற்றி யுள்ளார். இதே ஆய்அண்டிரனை ஔவையாரும் புறம் 140ஆம் பாடலில், அவனது கொடையின் பெருமையைப் புகழ்ந்து பாடியமையைக் காணமுடிகின்றது. மன்னனைக் குறை கூறுவதுபோலப் புகழ்ந்து கூறிப்பாடியது இப் பாடலாகும்.

"தடவுநிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்
மடவன், மன்ற செந்நாப் புலவீர்!
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை ஆக, யாம்சில
அரிசி வேண்டினெம் ஆகத், தான்பிற
வரிசை அறிதலின், தன்னும் தூக்கி,
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னஓர்
பெருங்களிறு நல்கி யோனே! அன்னதோர்
தேற்றா ஈகையும் உளதுகொல்?
போற்றார் அம்ம, பெரியோர் தம்கடனே? (புறம்: 140)

செவ்விய நாவை உடைய புலவர்களே! பலாக்கள் நிறைந்த இந்நாஞ்சில் மலைவேந்தன் அறியாமை உடைய வனாக இருக்கின்றான். விறலியர் பறித்த இலை உணவின்மேல் தூவுவதற்குச் சில அரிசியே வேண்டினோம். அவனோ எமது வறுமையைக் கருதாமல் தன் மேம் பாட்டினை எண்ணியவனாக மலைபோன்ற பெரிய யானையை எமக்கு அளித்தான். இவ்வாறு தெளியாது கொடுக்கும் கொடையும் உலகில் உள்ளதோ? பெரியோ னாகிய அவன், முறையறிந்து இதனைச் செய்தானோ? என்பது இப்பாடலின் பொருளாகும். இங்கே கேட்டதிலும் பார்க்க மிகப்பெரிய கொடையை அளித்த ஆய் மன்னனை இகழ்வதுபோலப் புகழ்ந்திருக்கின்றார் ஔவையார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூற்றின் 142ஆம் பாடல், வையாவிக்கோப் பெரும் பேகனைப் பரணர் பாடியதாகும். பேகனின் கொடை மடம் படுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது. வயலிலும், குளத்திலும், உவர் நிலத்திலும் ஒரே மாதிரிப் பெய்யும் மழைபோன்று, இரவலர் எத்தன்மையராயினும் வரையாது வாரி வழங்கும் இயல்பினன் பேகன். கொல் யானையும் வீரக்கழலையும் உடைய அவன், கொடையின் கண்ணே இவ்வாறு மடமை உடையவன். ஆனாலும், போரில் தன்னொத்த வீரருடன் பொருதுபவனே அன்றி, தனக்குத் தகுதி அற்றோருடன் பொருதும் அறியாமை உடையோன் அல்ல என்று பேகனின் கொடைமடம், படைமடம் ஆகியன பற்றி எடுத்துக்கூறிப் பேகனின் கொடைச்சிறப்பையும், போர்ச் சிறப்பையும் புரிய வைக்கிறார் பரணர். அந்தப்பாடல் வருமாறு.

"அறுகுளத்து உகுத்தும், அகல்வயல் பொழிந்தும்,
உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்,
வரையா மரபின் மாரி போலக்,
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது,
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே"
(புறம்: 142)

பரணரின் சொல்லாட்சியும், பொருளாட்சியும் நிறைந்த இனிய பாடல் இதுவாகும். அறியாமையால் செய்கின்றானோ? எனக் கருதுமளவிற்கு, இரவலர்க்குக் கொடையை வாரி வழங்குதல் ஒருநிலையாகவும், போரில் தனக்குத் தகுதியானவருடனேயே போரிடும் அறிவு நிறைந்தவன் பேகன் என்பதை இன்னொரு நிலையாகவும் இப்பாடல் உணர்த்துகின்றது. இதேபோன்றதாகப் பேகனைப் பரணர் பாடிய புறம் 141ஆம் பாடல், அவனது கைவண்மையானது (கொடை) மறுமை நோக்கிற்றன்று, பிறர் வறுமை நோக்கிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கூறிப்பாணரை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனையே,

"எத்துணை ஆயினும் ஈதல் நன்றுஎன
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர்வறுமை நோக்கின்று, அவன் கைவண்மையே"

*(புறம் 141: 13 – 15)*

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. புறநானூற்றில் 29ஆம் செய்யுள், சோழன் நலங்கிள்ளியைப் புகழ்ந்து உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடியதாகும். "அழல் புரிந்த அடர் தாமரை..." (புறம்: 29) எனத் தொடங்கும் இச்செய்யுள் 26 அடிகளைக் கொண்டது. பொன்னால் செய்த தாமரைப் பூவைத் தட்டித் தட்டி, கம்பியாகச் செய்த வெள்ளி நூலிலே கோர்த்து அணியாக்கி, தம் கரிய தலையில் பொலிவு பெறச்சூடிய பாணர்சுற்றம் நின் நாள்மகிழிருக்கையைச் சூழுவதாக! எனக் கூறுவதன்மூலம் இரவலராகிய பாணர்கள் பெறக்கூடிய அணிகலன்களின் சிறப்பு இச்செய்யுளில் கூறப்பட்டுள்ளது. அதேபோன்று இனிய முரசம் ஒலிக்கக் கொடியோரை ஒறுத்தலும், செவ்வியோரைக் காத்தலும் ஆகிய முறையான அற நெறியில், நாளும் சோம்பலின்றி நீ இருப்பாயாக! எனவும் கூறப்பட்டுள்ளது. நல்லதன் நன்மையும் தீயதன் தீமையும் இல்லையென்பாரோடு சேராதிருப்பாயாக! என அறநெறி உரைக்கப்பட்டுள்ளது.

"...என்றும்
உண் டாயின் பதம் கொடுத்து,
இல் லாயின் உடன் உண்ணும்,
இல்லோர் ஒக்கல் தலைவன்"

*(புறம் 95: 5 –8)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல், புறம் 95இல் அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடிய பாடலாகக் காணப்படுகின்றது. உண்டானால் உணவளித்தும், இல்லையானால் உள்ளதைப் பகர்ந்தளித்தும், மகிழும் வறியோர் தலைவ னாகிய எம் அரசன் என்றவாறு அஞ்சியின் கொடையையும், விருந் தோம்பலையும் ஔவையார் ஒருசேரப் புகழ்ந்து ள்ளார். மேலும், சோழன் நலங்கிள்ளியிடமிருந்து இளந்தத்தன் எனும் புலவனைக் காத்தருளிய, கோவூர்கிழாரால் பாடப்பட்ட செய்யுளொன்று புறநானூற்றில் 47ஆம் செய்யுளாக அமைந்துள்ளது. ஒற்றர்வேலை பார்த்தான் எனக்கருதிப் புலவர் இளந்தத்தனைக் கொல்லப் புகுந்த வேளையில், அதனைச் சந்து செய்து வறிய புலவர்களின் இயல்பினை எடுத்துக்கூறி, நலங்கிள்ளியிடமிருந்து புலவரின் உயிரைக் காத்த புலவராகக் கோவூர்கிழார் விளங்கியுள்ளார்.

"வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளின் போகி,
நெடிய என்னாது, சுரம்பல கடந்து,
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்,
பெற்றது மகிழ்ந்து, சுற்றம் அருத்தி,
ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி,
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றே?இன்றே, திறப்பட
நண்ணார் நாண, அண்ணாந்து ஏகி,
ஆங்குஇனிது ஒழுகின் அல்லது, ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே."

(புறம்: 47)

பழமரத்தை நாடிச் செல்லும் பறவையினம்போல, நீண்ட அரியவழியைக்கடந்து,தமக்குக்கொடை வழங்குவோரை நாடிச் செல்பவர்கள் பரிசிலர்களாகிய புலவர்கள். அங்கு தமது வல்லமைக்கு ஏற்றவாறு பாடிப் பெறும் பரிசிலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்பவர்கள். அப்பொருள்களைக் கொண்டு தமது சுற்றத்தை உணவளித்து வாழ்விப்பவர்கள். பொருளை மிகுத்துக் காப்பது இவர்களின் இயல்பன்று. தாமும் உண்டு பிறர்க்கும் மகிழ்வுடன் வழங்குபவர்கள். தம்மைக் காப்பவர்களால் பெறும் கொடைச்சிறப்புக்காக, இவ்வாறு வருந்தி நாளும் அலைவதே இப்பரிசிலர் வாழ்க்கையின் இயல்பாகும். பிறர்க்குக் கொடுமை செய்ய அறிந்தவரோ எனின் இல்லை எனலாம். கல்வியால் தம்முடன் மாறுபட்டவரை, அவர் நாண வென்று தலைநிமிர்ந்து நடந்து அவ்விடத்தில் இனிமையாக ஒழுகுபவர். வேந்தனே! அவ்வாறு நிகழும்போது, 'ஓங்கு புகழுடன் நிலமாளும் நம்போன்ற சீரும் உடையோர் இவராவர்!' என்பது இச்செய்யுளின் பொருளாகும். இதன்மூலம் புலவர்களான இரவலர்களின் தன்மையை எடுத்துக்கூறி, மன்னனின் கருத்தை மாற்றிப் புலவரை விடுவித்துள்ளார் கோவூர்கிழார். இந்த அரிய பாடலில், இரப்போராகிய புலவர்களின் வறுமை நிறைந்த வாழ்வியல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் புரவலர்களாகிய மன்னர்களை–வள்ளல்களை நம்பியே இருக்கின்றார்கள் என்ற உண்மையும் இங்கு வெளிப் படுகின்றது.

புறநானூற்றின் 149ஆம் பாடல், கண்டீரக்கோப்பெரு நள்ளியை, வன்பரணர் பாடியதாக அமைந்துள்ளது. மாலை வேளையில் மருதப்பண் வாசிப்பதையும், காலையில் செவ்வழிப்பண் இசைத்தலையும் எமது பாணரும் மறந்தனர். அவர்களை மறக்கச் செய்தவன் நீயே! கொடுத்துக் காத்தலைக் கடனாகக்கொண்டு அவர்க்குப் பெருநிதி வழங்கிய நின்வண்மையினாலேயேதான், அவர், பரிசிலுக்கு வேண்டிப் பாடும் தம் வழக்கத்தை அறவே மறந்து இவ்வாறா கினர்! என்று இப்பாடலில் கூறப் பட்டுள்ளது. அதாவது, பண்ணை இசைத்துப்பாடி பரிசில் பெறும் பாணர்கள், கோப்பெருநள்ளியின் கொடைத்திறத்தினால் அவற்றைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட மறந்துவிட்டனர் என்று அவனது கொடையின் சிறப்பை உயர்வாகப் பாடியுள்ளார் புலவர். இதே புலவர் பாடிய வல்வில் ஓரி மீதான பாடல், புறநானூற்றில் 152ஆவதாகும். அதில் மான் தசையும் பசுநெய்போன்ற மணமுள்ள மதுவும் கலந்தூட்டி, பொன்னும் மணித்திரளும் இடைவழியிலேயே எமக்கு வழங்கினான்! வரையாத ஈகையினை உடையவன் அவன்! என்று விறலியை விளித்துக் கூறுவதான வரிகள், ஓரியின் விருந்தோம்பலையும், கொடையையும் எடுத்துக் காட்டி உள்ளன. இப்பாடல் "வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி" (புறம்: 152) எனத்தொடங்கி 32 அடிகள்வரை நீண்டுள்ளது. இதே மன்னனை வன்பரணர் பாடிய பாடல், புறநானூற்றில் 153ஆவதாகக் காணப்படுகின்றது. ஓரியின் கொடைத் தன்மையைப் போற்றுகிறது அப்பாடல். இவரிடம் பரிசில் பெற்றவர்கள் அந்த வளமிகுதி காரணமாக, பாடலும் ஆடலும் செய்யார் என்று கூறுகின்றார் புலவர். அதாவது, தமது கலைத்தொழிலையே செய்ய மறுத்துவிட்டனர் என்ற கருத்து இங்கு புலப்படுகின்றது. இதற்குக் காரணம் ஓரி மன்னன் அளித்த பெருங்கொடையே ஆகும். அவர்கள் பசி தீர்ந்து, பேருண் உண்டு களித்தனர் எனவும் பாடலில் கூறப்பட்டுள்ளது. "மழையணி குன்றத்துக் கிழவன், நாளும்..." (புறம்: 153) எனப் பாடல் தொடங்குகின்றது. இவற்றினூடாக வல்வில் ஓரியின் கொடை, விருந்தோம்பல் சிறப்பினைக் காணமுடிகின்றது.

புறநானூற்றுப் பாடல்களில் சிலவற்றில் மன்னர்கள்–வள்ளல்கள் ஆகியோரின் கொடைச்சிறப்பு மட்டும் கூறப்பட்டுள்ளது. மற்றும் சில பாடல்களில் விருந்தோம்பல் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. இன்னும் சில பாடல்களில் இரண்டும் கலந்து கூறப்பட்டுள்ளது. கொடையும் விருந்தும் இணைத்துக் கூறப்பட்ட பாடல்களே அதிகம். இவை அனைத்தும் கூடுதலான பாடல்களில் பாடப்படுவோனின் இயல்பையும், போர் வெற்றியையும் கூறுமுகத்தால் உடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்தே கூறப்பட்டனவாகும். அரிதாகவே சில பாடல்களில் மட்டும் கொடை அல்லது விருந்தோம்பல் தனித்துக் கூறப்பட்டுள்ளமையை நோக்கலாம். வாட்டாற்று எழினியாதன் மீது மாங்குடிகிழார் என்னும் புலவர் பாடிய பாடல், புறநானூற்றில் 396ஆவது ஆகும். அதில் எழினியாதனின் அருள் செறிந்த கொடைப் பண்பின் சால்பை வியந்து பாடியுள்ளார். யாம் அவனுடைய கிணைப் பொருநராவோம். அவனளித்த சூட்டிறைச்சியினைச் சொல்வேனோ? அவன் தந்த கள்ளைச் சொல்வேனோ? முயல் கறியிலே ஆக்கித்தந்த நெய்ச்சோற்றைச் சொல்வேனோ? நெற்கரிசையைத் (நெல் சேமித்து வைக்கும் இடம்) திறந்துவிட்டு, வேண்டுமளவு எடுத்துக் கொள்ளுங்கள்! என்றானே அதனைச் சொல்வேனோ? எதனைச் சொல்வேன்? அவ்வாறு அவன் தந்தவையோ பல பல. என்சுற்றம் பசிதீர்ந்து இன்புற அருளோடு மீண்டும் மீண்டும் கொடுத்திட்ட அருளாளன் அவன். அவன் புகழ் விண்மீன்களுக்கு நடுவே விளங்கும் நிலவுபோன்று விளங்குக! புலவர் போற்றிப் பாடும் புகழுடைய அவன் செல்வம் நாளும் பெருகுக! என்று எழினியாதனிடம் பெற்றுக்கொண்ட கொடை அனுபவத்தை விபரித்துள்ளார் மாங்குடிகிழார். தமிழர் பண்பாட்டில் எத்தகைய உணவு வகைகள் பேணப்பட்டன என்பதையும் இதன்மூலம் அறிய முடிகின்றது. பாடலின் தொடக்கத்தில் எழினியாதனின் நாட்டு வளம், பகைவரை அழிக்கும் திறன் ஆகியவற்றைக் கூறிய புலவர், பிற்பகுதியில் அவனது வள்ளன்மையின் உயர்வைக் காட்டியுள்ளார். மிகவும் சுவை மிகுந்த பாடல் இதுவாகும்.

குமண வள்ளலை, புலவர் பெருஞ்சித்திரனார் புகழ்ந் தியற்றிய செய்யுளானது, புறநானூற்றில் 158 ஆவதாக அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முரசுகடிப்பு இகுப்பவும், வால்வளை துவைப்பவும்,
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்,
கறங்குவெள் அருவிகல் அலைத்து ஒழுகும்
பறம்பின் கோமான் பாரியும், பிறங்குமிசைக்,
கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்,
காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த,
மாரி ஈகை, மறப்போர் மலையனும்,
ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக், கொடும்பூண் எழினியும்,
ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கும் நளிமுழை,
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப்,
பெருங்கல் நாடன் பேகனும், திருந்துமொழி
மோசி பாடிய ஆயும், ஆர்வமுற்று
உள்ளி வருநர் உலைவுநனி தீரத்,
தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்,
கொள்ளார் ஓட்டிய நள்ளியும், எனஆங்கு
எழுவர் மாய்ந்த பின்றை, அழிவரப்
பாடி வருநரும் பிறரும் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கென, விரைந்துஇவண்
உள்ளி வந்தனென், யானே விசும்புஉறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி,
ஆசினிக் கவினிய பலவின் ஆர்வுற்று,
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிருஉப் பயிரும்,
அதிரா யாணர், முதிரத்துக் கிழவ!
இவண்விளக்கு சிறப்பின் இயல்தேர்க் குமண!
இசைமேந் தோன்றிய வண்மையொடு,
பகைமேம் படுக, நீஏந்திய வேலே!"

*(புறம்: 158)*

வள்ளல்கள் ஏழு பேரும் இறந்து விட்டனர். அவர்கள் இல்லாததனால் துன்பப்படும் இரவலர்களின் வறுமையைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்க, நீ ஒருவன் உள்ளதால் நின்பால் விரைந்து வந்தேன்! என்று குறிப்பிடுகின்றார் பெருஞ்சித்திரனார். குமணன் ஆட்சி செய்கின்ற நாடு, முதிரமலை எனப்படுகின்றது. அந்த மலைச் சாரலில் பலாக்கனிகளைக் கண்ட கடுவன் குரங்கானது, தான் உண்பதுடன் தனது துணையான மந்தி யையும் கைதட்டி அழைக்கும் வளமுடையது எனக் குமணனின் நாட்டைப் புகழ்ந்தேற்றுகின்றார். அப்படிப்பட்ட வளமுடைய நாட்டுத்தலைவனே! குமணனே! நின் வேலானது பகைவரை வென்று உயர்வதாகுக! என்று வாழ்த்துகின்றார். குமண வள்ளலின் வரலாற்றில் பெருந்தலைச் சாத்தனாரும் முக்கியம் வாய்ந்த ஒரு புலவராவார். அண்ணன் குமணனின் ஆட்சியுரிமையைப் பறிப்பதற்காகத் தம்பி இளங்குமணன் சதி செய்தான். அண்ணனைக் காட்டிற்குத் துரத்திவிட்டான். அந்த நிலையிலும் தன்னைத் தேடிவந்து இரந்த பெருந்தலைச் சாத்தனாருக்கு, 'என்தலையைக்கொண்டுவருபவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் தருவதாக என் சகோதரன் அறிவித் துள்ளான். இதோ இங்கிருக்கும் வாளினால் எனது தலையை அரிந்து கொண்டுபோய் அவனிடம் நீ கொடுப் பாயானால், அந்தப் பொற்காசுகளை பெற்றுக் கொண்டு வளமாக வாழலாம்' எனப் புலவரிடம் கூறினான் குமண வள்ளல். துடிதுடித்துப்போன புலவர், அந்த வாளினை மாத்திரம் பெற்றுக்கொண்டு உடனேயே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றதுடன், குமணனின் தலையைப்போன்ற ஒரு தலையைச் செயற்கையாகச் செய்வித்து, இரத்தம் தோய்ந்த நிலையில் குமணனின் சகோதரனிடம் எடுத்துச் சென்று காட்டி, 'இதோ நின் அண்ணனின் தலையைக் கொண்டு வந்திருக்கிறேன். பொற்காசுகளைத் தருவாயாக!' எனக்கூறவும், பதறிப்போன மன்னன் கதறி அழுதபடி செய்வதறியாது புலம்பினான். அவனது சகோதர பாசத்தைக் கண்டுணர்ந்த புலவர், உண்மையை விளக்கினாரெனக் கதைவழியாகக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் இங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள பாடலில், இரப்போர்க்கு உதவுவதற்குக் குமணன் ஒருவனே இருப்பதாகக் கூறி, அவனை வாழ்த்தி உள்ளார். இது குமணன் மலைப் பிரதேசத்தை ஆட்சி செய்த காலத்தில் நடந்ததாக இருக்கக்கூடும்.

மேலும் இப்புறப்பாடலில் வள்ளல்களான பாரி, வல்வில் ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி ஆகிய எழுவரும் மாய்ந்தனர் என்றும், அவர்கள் இரவலர்களின் குறைகளை வேண்டியாங்கு தீர்த்து வைத்தனர் என்றும், பெருஞ்சித்திரனார் பாடியுள்ளதை அறிய முடிகின்றது. இந்த வள்ளல்களின் ஈகைத்திறன் பற்றிப் புறப்பாடல்கள் பல எடுத்துக்காட்டியுள்ளன. பெருஞ்சித்திரனார் பாடிய மேலே உள்ள பாடலில், இறந்துபோன ஏழு வள்ளல்கள் பற்றிக் கூறப்பட்டிருப்பினும், பின்னர் தமிழிலக்கிய உலகில் பெருவழக்காயிருந்த கடையெழு வள்ளல்கள் பற்றி நோக்குகையில், ஆரியர் ஆட்சியின் செல்வாக்குத் தமிழகத்தில் ஏற்படுத்திய தாக்கந்தான் இதுவென ஆய்வாளர்கள் சிலர் கருதுவதுண்டு. பெருஞ்சித்திரனாரின் பாடலில் காணப்படாத ஓரிருவர் கடையெழு வள்ளல்களின் பட்டியலில் இடம்பெறுவதையும் காணலாம்.

பெருஞ்சித்திரனார் கூறிய வள்ளல்களில் அதியமான் இடம்பெறாமல் அவனது குடும்ப முன்னோனான எழினி என்பவன் இங்கு இடம்பெற்றுள்ளமை இங்கு கருதத்தக்கது. பறம்பு மலையை ஆட்சி செய்த குறுநில மன்னனாகிய பாரி, வள்ளன்மையில் சிறந்தவன். கடையெழு வள்ளல்களில் ஒருவன். கொழுகொம்பின்றிக் கிடந்த முல்லைக்கொடிக்குத் தனது தேரை ஈந்தவன். புலவர் கபிலருடன் நட்புக்கொண்டு விளங்கியவன். மூவேந்தர்களால் வஞ்சகமாக அழிக்கப் பட்டவன். 105 – 120, 158, 176, 236 ஆகிய புறநானூற்றுப் பாடல்களில் இவன் புகழப்பட்டுள்ளான். வல்வில் ஓரி, கொல்லி மலைக்கும் அதனைச் சேர்ந்த பகுதிகளுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனாக விளங்கியவன். கடையெழு வள்ளல்களில் ஒருவனாகப்போற்றப்பட்டவன். மலையமான்திருமுடிக்காரி என்பவன் படையோடு வந்து இவனை அழித்தான் என்பது வரலாறு. புறநானூற்றின் 152, 153, 158, 214 ஆகிய பாடல்கள், இவனது கொடையைப் புகழ்ந்து பாடப்பட்டவையாகும். வன்பரணர், கழைதின்யானையார் இவனைப் பாடியுள்ளனர். கடையெழு வள்ளல்களில் ஒருவனாகக் கருதப்படும் எழினி என்பவன், குதிரை மலையை ஆட்சி செய்தவன். அதிய மானின் முன்னோர்களில் ஒருவன். புறநானூற்றின் 158, 230 ஆகிய பாடல்களில் இவன் போற்றப்பட்டுள்ளான்.

கடையெழு வள்ளல்களில் ஒருவனாகக் கருதப்படும் பேகன் என்பவன், வையாவிக்கோமான் பெரும்பேகன் என்னும் சிறப்பினை உடையவன். குளிரால் நடுங்கிய மயிலுக்குப் போர்வை தந்தவன். இவன் தன் மனைவியாகிய கண்ணகியைப் பிரிந்து வாழ்ந்தவன். சான்றோர் கூறிய கருத்துக்களைக்கேட்டு மீண்டும் அவளுடன் கூடி வாழ்ந்தவன். பரணர், கபிலர், வன்பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் முதலியோர் புறநானூற்றில் இவனைப் பாடியுள்ளனர். ஆய்அண்டிரன் கொடையால் சிறந்த வேளிர் தலைவர்களில் ஒருவன். பொதியில் மலைப்பகுதிக்குத் தலைவனாக விளங்கியவன். கிடைத்த அரிய ஆடையினை சிவன்மீது கொண்ட பக்தியினால் இறைவனுக்கு அளித்த சிறப்பினை உடையவன். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார், துறையூர் ஓடைகிழார், குட்டுவன் கீரனார், பரணர், பெருஞ்சித்திரனார், காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் ஆகியோர் புறநானூற்றில் இவனைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இந்நூலில் 127 – 136, 240, 241, 374, 375 ஆகிய பாடல்கள் இவனைப்பற்றியனவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய மலையமான் திருமுடிக்காரி, புறநானூற்றில் 121, 124, 126 ஆகிய பாடல்களில் போற்றப்பட்டுள்ளான். கபிலர், மாறோக்கத்து நப்பசலையார் ஆகியோர் இவனைப் பாடியுள்ளனர். பெருங்கொடையாளியான இவன் முள்ளூர் மலையை ஆட்சிசெய்தவன். சோழருக்கும், சேரருக்கும் படைத் துணையாக விளங்கியவன். கடையெழு வள்ளல் களில் ஒருவனாக நள்ளியும் சொல்லப்படுகின்றான். இவன் கண்டீரக்கோப்பெருநள்ளி என அழைக்கப்பட்டான். தோட்டி மலைக்கும் அதனைச்சார்ந்த பகுதிகளுக்கும் தலைவனாக விளங்கினான். புறநானூற்றில் 148, 149, 150, 151, 158 ஆகிய பாடல்களில் போற்றப்பட்டுள்ளான். வன்பரணர், பெருந்தலைச் சாத்தனார், கபிலர், காக்கைபாடினியார், நச்செள்ளையார், பரணர், பெருஞ்சித்திரனார் இவனைப் பாடியுள்ளனர். ஆற்றுப்படை இலக்கியங்களில் ஒன்றான சிறுபாணாற்றுப் படை நூலும், கடையெழு வள்ளல்கள் ஏழுபேரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. அதில் பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரி ஆகியோர் செய்த அருங்கொடைகள் விளக்கப்பட்டுள்ளன.

ஆலத்தூர்கிழார் என்னும் புலவர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் இயல்பை வியந்து பாராட்டிப் பாடிய செய்யுள் ஒன்று, புறநானூற்றில் 34ஆம் பாடலாக அமைந்துள்ளது. இதில், 'செய்ந்நன்றி கொன்றவர்க்கு உய்வில்லை' என்ற அறநெறி எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. ஆயிழை நல்லாளின் கணவனே! ஆவின் மடியினை அறுத்தும் மங்கல மகளிரின் கருவினைச் சிதைத்தும், அறிவூட்டிய ஆசானையே பழித்தும் கொடுமை செய்தவர்களுக்குக்கூட கழுவாய் (பரிகாரம்) உண்டு. ஆனால் உலகமே தலைகீழாகப் போனாலும் ஒருவர் செய்த நன்றியை அழிக்க முயன்றவர்க்கு உய்வே கிடையாது என்று அறவோர் கூறுவர் என்ற அறக்கருத்தினை இச்செய்யுள் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்,
மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்,
புரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்,
வழுவாய் மருங்கின் கழுவாயும் உளவென,
நிலம்புடை பெயர்வ தாயினும், ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்என
அறம் பாடின்றே ஆயிழை கணவ!"

(புறம் 34 : 1 – 7)

மேலே உள்ள பாடலடிகள், நன்றி மறவாமையை வலியுறுத்துவதுடன் நன்றி கொன்றவர்க்குப் பிராயச்சித்தம் இல்லை என்பதையும் உணர்த்தியுள்ளன. மிகக்கொடுமையான செயல்களைப் புரிந்தவர்க்கும் அதாவது பசுவை அறுத்துக் கொலை செய்தவர்கள், பெண்களின் கருவைச் சிதைத் தவர்கள், ஆசிரியரையே பழித்தவர்கள், கழுவாய் தேடினாலும் நன்றி கொன்றவர்க்குப் பிராயச்சித்தம் கிடையவே கிடையாது என்பதனை இப் பாடலடிகள் உணர்த்தியுள்ளன. இச்செய்யுளானது மேலும் தொடர்கிறது.

"காலை அந்தியும், மாலை அந்தியும்,
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கம் தேனொடு மயங்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த ஒக்கலொடு,
இரத்தி நீடிய அகன்தலை மன்றத்துக்,
கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி,
அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன்,
எங்கோன் வளவன் வாழ்க! என்றுநின்
பீடுகெழு நோன்தாள் பாடேன் ஆயின்,
படுபறி யலனே, பல்கதிர்ச் செல்வன்
யானோ தஞ்சம், பெரும!இவ் வுலகத்துச்
சான்றோர் செய்த நன்று உண்டாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமயத்து ஈண்டி, இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பல் துளியினும் வாழிய பலவே!"

(புறம் 34 : 8 – 23)

காலையும் மாலையும் புறாவின் முட்டையைப் போன்ற புன்செய் நிலத்தில் விளைந்த வரகைப் பாலிட்டுச் சமைத்துத் தேனுடன் கலந்தும், அதனுடன் கொழுத்த முயலின் சூடான இறைச்சியைச் சேர்த்தும் உண்ணுவர் என் சுற்றத்தார். அவரோடு இலவமரம் ஓங்கி வளர்ந்துள்ள பரந்த வெளியில், கரவறியாத உள்ளத்தோடும் நினைத்தவற்றை யெல்லாம் பேசிப்பேசி, பெரிய சோற்றுக் கட்டிகளைப் பாணர்கள் உண்டு மகிழ்வர். இவர்கள் இதுவரை அறியாத செல்வம் முழுவதும் அடையுமாறு செய்தவன் எம் கோமானாகிய வளவன் நீயல்லவா! 'வாழ்க என்று' நின் பெருமை மிகுந்த வலிய திருவடிகளைப் பாடேனாயின் கதிரவனும் தோன்றான். பெருமானே, யானோ எளியவன். இவ்வுலகத்தில்சான்றோர்செய்தநன்மைகள்இருக்குமானால், இமய மலைச்சாரலில் திரண்டு, இனிய இடியோசையைச் செய்துமேகங்கள்பொழியும்நுண்ணியமழைத்துளிகளிலும் பார்க்க பல ஆண்டுகள் மேலாக நீ வாழ்வாயாக! இவ்வாறு சோழனின் கொடையைப் புகழ்ந்து அவனை வாழ்த்தி யுள்ளார் புலவர். மிகவும் இனிமையான இச்செய்யுளில், பாணரையும் அவர்தம் சுற்றத்தினரையும் விருந்தோம்பல் செய்து, அவர்களது பசியைத் தீர்த்து, என்றுமில்லாதவாறு பெருஞ்செல்வத்தை ஈந்து அந்த இரவலர்களின் வாழ்விற்கு ஒளி தேடித்தந்த கிள்ளி வளவனின் பண்பு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கூடவே செய்யுளின் முற்பகுதியில் 'செய்ந்நன்றி கொன்றவர்க்கு உய்வில்லை' என்ற அறக் கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. கட்டிறுக்கமான சொற்களைக் கையாண்டு கருத்தாழமும், உணர்ச்சிச் செறிவும் மிக்கதாகக் கவிதையைப் படைத்துள்ளார் புலவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடையறம், விருந்தறம், நன்றி பேணலறம் ஆகியன இச்செய்யுளின் அடிப்படைகளாகும்.

ஆவூர்மூலங்கிழார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய பாடலும் (புறம்: 38) புறநானூற்றில் காணப்படுகின்றது. செய்யுளின் தொடக்கத்தில் கிள்ளிவளவனின் படைத்திறத்தையும், அவன் விரும்பியதைச் செய்து முடிக்கும் வலிமையையும் வியந்து பாராட்டியவர், பின்னர் விண்ணுலகில் தாம் செய்த நல்வினைக்கேற்ப இவ்வுலகத்தார் இன்புறுவர் என்பத னையும், அத்துடன் செல்வந்தர், வறியோர்க்கு வழங்கலும், வறியோர், பரிசை நாடிச் செல்வரிடம் செல்வதும், அவ்வுலகில் கிடையாது என்றும், அது நின் நாட்டிலேயேதான் நிகழும் எனவும் கூறியுள்ளார். ஆதலால் பகைவர் நாட்டுப் பரிசிலரும், அந்த விண்ணுலகத்திலும் இல்லாத இன்பம் நின் நாட்டில் உள்ளதெனக் கருதியவராக, நின் நாட்டையே நினைத்துக் கொண்டிருப்பார். அவ்வாறிருக்க நின் நிழலிலேயே பிறந்து, வளர்ந்த, எம் நினைவின் எல்லையைப் பற்றி எதுவும் அளவிட்டுச் சொல்ல முடியுமா? என்று கேட்டுச் செய்யுளை நிறைவு செய்துள்ளார்.

"...இன்நிலைப்
பொலம்பூங் காவின் நன்னாட் டோரும்
செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை,
உடையோர் ஈதலும், இல்லோர் இரத்தலும்
கடவ தன்மையின், கையறவு உடைத்து,என
ஆண்டுச் செய்நுகர்ச்சி ஈண்டும் கூடலின்,
நின்நாடு உள்ளுவர், பரிசிலர்,
ஒன்னார் தேஎத்தும், நின்னுடைத் தெனவே."

(புறம் 38: 11 – 18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுலக இன்பத்தை உன் ஆட்சிக்கு உட்பட்ட மண்ணுலகிலே கண்டு பரிசிலர்களும் – பகைநாட்டுப் பரிசிலர்களும் கூட நினைத்துக் கொள்வார்களானால், உன் நிழலிலேயே வாழ்க்கை நடத்தும் எம்போன்றவர்கள் உன்னை எப்போதுமே நினைத்துக்கொண்டிருப்பார்கள் என்றவாறு ஆவூர்மூலங்கிழார் குறிப்பிட்டுள்ளார். மேலும், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் (மதுரை மருதன் இளநாகனார்) பாடிய செய்யுளொன்று, பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை, வெங்கதிர்ச் செல்வனோடு உவமித்துக் கூறியுள்ளது. இச்செய்யுள் "ஏற்று வலன் உயரிய எரிமலை அவிர்சடை..." (புறம்: 56) எனத் தொடங்குகின்றது.

"இரவலர்க்கு அருங்கலம் அருகாது ஈயா,
யவனர்நன் கலம்தந்த தங்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி, நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப, மகிழ்சிறந்து"

(புறம் 56: 17 – 20)

இரவலர்க்கு, பெறுதற்கு அரிய அணிகலன்களை வழங்குகின்றாய். யவனர்களின் கலங்கள் ஏற்றிக்கொண்டு தந்த மதுவை, பொற்கலனில் நாள்தோறும் இளம்பெண்கள் வார்த்தூட்ட உண்டு மகிழுகின்றாயே! எனக்கூறுவதன் மூலம், பாண்டியன் நன்மாறனின் கொடைச் சிறப்பையும், நாட்டு வளத்தையும், மகிழ்வான வாழ்வையும் எடுத்துக் காட்டியுள்ளார் புலவர்.

ஆலந்தூர்கிழார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடும்போது, பாணனே! யாழ் கையிலே, பசி வயிற்றிலே, தைத்த பழங்கந்தை இடுப்பிலே, பெரிய சுற்றத்துடனே உலகமெலாம் சுற்றி வந்தோம். வறுமை தீர்ப்பவர் யாரெனக் கேட்கின்றாய்! என்று பாணன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனை விளித்துக் கூறுவதுடன், கிள்ளிவளவனின் பெருமையையும் குறிப்பிட்டு, அவனிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்துகின்றார். அவனைக் காண்பதற்குக் காலம் பார்க்க வேண்டியதில்லை. பகலில் வரும் பரிசிலர்க்குத் தேரினை வழங்கிக்கொண்டே இருக்கும் அவனைக் கண்ட பின், நீ பொற்றாமரைப் பூச்சூடி மகிழும் பேற்றினை உறுதியாகப் பெறுவாய்! எனக்கூறி பாணனை வழிகாட்டி யுள்ளார். "கையது கடன்நிறை யாழே, மெய்யது.." (புறம்: 69) எனத்தொடங்கும் செய்யுளில் இதனைக் காண முடிகி ன்றது. இதேபோன்று, கிள்ளி வளவனைக் கோவூர் கிழார் பாடிய பாடல், (புறம்: 70) பாணனை ஆற்றுப் படுத்துவதாக அமைந்துள்ளது.

"தேஎம் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண,
'கயத்துவாழ் யாமை கால்கோள் தன்ன
நுண்கோல் தகைத்த தெண்கண் மாக்கிணை
இனிய காண்க, இவண்தணிக' எனக்கூறி,
வினவல் ஆனா முதுவாய் இரவல!"

(புறம் 70: 01 – 05)

சிறிய யாழை உடைய பாணனே! குளத்து ஆமையை அம்பிலே கோர்த்தால்போன்ற உடுக்கையின் இசையைக் கேட்டு, இளைப்பாறிச் செல்க! முதிய இரவலனே! என, என்னைப் பலவாறும் கேட்கின்றாய்! என்று செய்யுள் தொடங்குகின்றது.

"தைஇத் திங்கள் தண்கயம் போலக்,
கொளக்கொளக் குறைபடா கூழுடை வியனகர்,
அடுதீ அல்லது சுடுதீ அறியாது
இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்"

(புறம் 70: 06 – 09)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பனியால் குளிர்ந்த குளத்தில் நிறைந்திருக்கும் தெளிந்த நீர்போல, கொள்ளக்கொள்ளக் குறைவில்லாத சோறுடையது அவனுடைய நகர். அடு நெருப்பு அல்லது சுடுநெருப்பு அறியாதது அது. குளிர் நீரையும், குறையாத சோற்றையும் எப்போதும் கொண்டிருப்பது அவனுடைய நாடு. இவ்வாறு கிள்ளிவளவனின் கொடைச்சிறப்பையும், நாட்டுவளச்சிறப்பையும் சேர்த்துக்கூறிய புலவர், மேலும் அவனது கொடை பற்றியும் எடுத்துச்சொல்லிப் பாணனை ஆற்றுப்படுத்துகின்றார்.

"கிள்ளி வளவன் நல்லிசை யுள்ளி
நாற்ற நாட்டத்து அறுகால் பறவை
சிறுவெள் ளாம்பல் ஞாங்கர் ஊதும்
கைவள் ஈகைப் பண்ணன் சிறுகுடிப்
பாதிரி கமழும் ஓதி, ஒண்ணுதல்,
இன்னகை விறலியொடு மென்மெல் இயலிச்
செல்வை ஆயின், செல்வை ஆகுவை,
விறகுஒய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்,
தலைப்பாடு அன்று, அவன் ஈகை,
நினைக்க வேண்டா, வாழ்க அவன்தாளே!"

*(புறம் 70: 10 –19)*

கிள்ளிவளவனின் புகழை நினைத்தவனாக, இனிய நகைதவழும் விறலியோடும் மெல்ல மெல்ல நடந்து அவனிடத்தில் செல்வாயாக! சென்றால் நீ பெருஞ்செல்வம் பெறுவாய். விறகு வெட்டக் காட்டுக்குச் சென்றவனுக்குப் பொன் கிடைத்ததுபோல, எதிர்பார்த்துக் கிடைப்பதல்ல அவன் கொடை. உறுதியாக நீ நம்பிக்கையுடன் செல்லலாம். அவன் திருவடிகள் வாழ்க! என்றவாறு செய்யுள் நிறைவு பெறுகின்றது. மிகவும் செம்மை வாய்ந்த செய்யுள் இதுவாகும். சோறும் தண்ணீரும் எப்போதும் தவறாது கிடைக்கும் என்பதை "இருமருந்து விளைக்கும்" என்ற தொடரினால் சிறப்பாகக் கூறப்பட்டிருப்பது கருதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கதாகும். ஒரு பாணனை ஆற்றுப்படுத்துவதனூடாகக் கிள்ளிவளவனின் விருந்தோம்பலையும், கொடை அறத்தையும் இணைத்துப் பாடியுள்ளார் புலவர். புறநானூற்றுப் பாடல்களில் பொதுவழக்காகக் காணப்படும் ஆற்றுப் படுத்தல் மரபில் இச்செய்யுள் காலக் கண்ணாடியாக விளங்குகின்றது.

அதியமானைப் புகழ்ந்து ஔவையார் பாடிய புறம் 235ஆம் பாடலானது, அதியமானின் இழப்புக் குறித்து வருந்துவதாக அமைந்துள்ளது.

"சிறியகட் பெறினே, எமக்கீயும், மன்னே!
பெரியகட் பெறினே,
யாம்பாடத், தான்மகிழ்ந்து உண்ணும், மன்னே!
சிறுசோற்றானும் நனிபல கலத்தன், மன்னே!
பெருஞ்சோற்றாலும் நனிபல கலத்தன் மன்னே!
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும், மன்னே!
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தான்நிற்கும்மன்னே!
நரந்தம் நாறும் தன்கையால்,
புலவு நாறும் என்தலை தைவரும் மன்னே!
அருந்தலை இரும்பாணர் அகன் மண்டைத் துளையுரீஇ,
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர,
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்று, அவன்
அருநிறத்து இயங்கிய வேலே!
ஆசாகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ?
இனிப், பாடுநரும் இல்லை, பாடுநர்க்குஒன்று ஈகுநரும் இல்லை
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகியாங்குப், பிறர்க்கு ஒன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே!"

(புறம்: 235)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயகோ! அஞ்சியின் அரிய மார்பில் தைத்தவேல், பாணரின் உண்கலங்களைத் துளைத்து, இரப்போர் கைகளை ஊடுருவி, அவர்கள் சுற்றத்தின் கண் ஒளியினை மழுங்கச்செய்து, நுண்ணிய அறிவால் சிறந்தவர்களின் நாவில் சென்று தைத்ததே! சிறிய அளவு மது கிடைத்தால் அதனை எமக்கே தந்துவிடுவான். பெரிய அளவு கிடைத்தாலோ, யாம் பாட எமக்கு அளித்து அவனும் உண்பான். குறைந்தளவு சோறு என்றாலும், பலரோடு உண்பான். பெருஞ்சோறு என்றால் மிகப்பலரோடு உண்பான். எலும்பும் தசையும் உடைய வேட்டைப் பொருள்களை எமக்களித்து, அம்பும் வேலும் நுழையும் போர்க்களமெல்லாம் தானே மேற்கொள்வான். நரந்தம் நாறும் தன் கையால், புலால் நாறும் எம் தலையிலே அன்போடு தடவி மகிழ்வான். அவனோ இறந்துவிட்டான். எமக்குத் தந்தையாக இருந்து எம்மைக் காத்தவன் எங்கே உள்ளான்? இனிப் பாடுவோர்க்கு ஒன்றேனும் தருவாரும் இல்லையே, நீர்த்துறையில் உள்ள பகன்றைப் பெரும்பூ எவர்க்கும் பயன்படாது போவதுபோல, வறுமையால் மாய்ந்து போகும் உயிர்களே இனிப் பலவாகும். இவ்வாறு பாடியுள்ள ஔவையார், அதியமானின் இறப்பு ஏற்படுத்திய துயரங்களின் பட்டியலை முன்வைத்துள்ளார். அவன் மார்பில் தைத்த வேல், அதாவது அவனது இறப்பு வறியவர்களையும், அவர்தம் சுற்றத்தையும் எவ்வாறு பாதித்தது? இரவலர்க்குத் தந்தையாக விளங்கிய அவனது இழப்பால், இனிமேல் இரவலர்கள் எதிர்கொள்ளப்போகும் அபாயநிலை என்ன? என்பவற்றையெல்லாம் ஏக்கத்தோடும், உணர்ச்சியோடும், கழிவிரக்கத்தோடும் பாடியுள்ளார் ஔவையார். இரவலரை ஆதரித்துக் காத்த அதியமானின் பேரன்பை நினைத்துக் கையறுநிலையில் புலம்புகின்றார். அவனது விருந்தோம்பல் சிறப்பு, கொடைச்சிறப்பு, இரக்கத்தின் மேன்மை அத்தனையும் நினைவில் வந்து நிழலாடுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூற்றின் 261ஆம் பாடல், ஆவூர்மூலங்கிழார் பாடியது. கரந்தை மறவன் என்னும் வள்ளல், போரில் இறந்து நடுகல்லாகியது கண்டு, கையறுநிலையில் இரங்கிப்பாடியதாகும். நெய் சொரிந்த ஆட்டிறைச்சியைப் பொரித்து, இரவலர்க்கு வழங்கினான் என மறவனின் புகழ் இதிலே கூறப்பட்டுள்ளது. புறம் 313ஆம் பாடல், மாங்குடி மருதனார் பாடியது. கடல் எல்லைவரை பரவிய பெரிய நாட்டின் வேந்தனாக அவன் இருந்தாலும், அவனிடம் கைப்பொருள் என ஒன்றும் இல்லை. ஏனெனில் காணச் செல்லும் இரவலர்க்குக் களிறும், தேரும் வேண்டினாலும் தந்துவிடும் தகுதி உடையவன் அவன். உப்பினைக் கொண்டுசெல்லும் உமணர்களின் உப்பளங்களில் காணப் படும் உப்பளக் குன்றினைப் போன்று என்றும் குறைவின்றி வருவதும் போவதுமாக இருப்பது அவன் விரும்பும் பொருளுமாகும். இவ்வாறு வேந்தனொருவனின் வல்லாண்மையைக் கொடையோடு தொடர்புபடுத்திப் புலவர் பாடியுள்ளார். இதேபோன்று, புறம் 316ஆம் பாடலில், மதுரை கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார் என்னும் புலவர், மறக்குடித்தலைவனின் கொடையைப் பற்றியும், அவனிடம் சென்று உணவையும், அணிகளையும் பெற்றுக்கொள்ளுமாறும், விறலிக்கு உரைப்பதைக் காண முடிகின்றது. புறநானூற்றின் சில பாடல்களில், பாடியவர் பெயர், பாடப்பட்டவர்களின் பெயர் ஆகியன காணப்பட வில்லை. ஆனால் ஒரு அரசனை அல்லது நாட்டுத் தலை வனைப் புகழ்ந்து பாடியதாகச் சில பாடல்கள் அமைந்துள்ளன என்பதும் இங்கு கவனத்திற்குரியது.

வேம்பற்றூர்க் குமரனார் (புறம் 317), ஆலங்குடி வங்கனார் (புறம்: 319), வீரை வெளியனார் (புறம்: 320) ஆகியோர் பாடிய பாடல்களிலும் கொடைச்சிறப்பு, விருந் தோம்பல் சிறப்புப் பற்றி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பாடியவர், பாடப்பட்டவர் பெயர் அறியாத புறம் 323,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

328ஆம் பாடல்களிலும் தலைமகனின் கொடைச்சிறப்புக் காட்டப்பட்டுள்ளது. உறையூர் முதுகூத்தனார் இயற்றிய புறம் 331ஆம் பாடல், "கல்லறுத்து இயற்றிய வல்லுவர்க் கூவல்.." எனத் தொடங்குகின்றது. இதில் பாட்டுடைத் தலைவனின் கொடையைப் புகழ்வதுடன், அவனது மனைவியின் செயலையும் போற்றியுள்ளார் புலவர். நீண்ட நெடும் பந்தலின்கீழ் அனைவரையும் அமர்த்தி, அனைவருக்கும் பகிர்ந்து உணவூட்டி மகிழ்விப்பவள் அவள். அவளைப்போலவே அவனும் அவரவர் தகுதி நோக்கிக் கொடுப்பவன் எனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன், அனைத்தையும் இரவலர்க்குக் கொடுத்துத் தீர்ந்த காலத்திலும், தமது இடம் நாடி வந்த இரவலர்க்கு விதைத் தினையை உணவாக்கி அளிக்கும் மனைவியினது விருந்தோம்பல் சிறப்பினைக்கூறும் பாடல், புறம் 333ஆம் பாடலாகும். இதனைப் பாடியோர், பாடப்பட்டவர் பெயர் தெரியவில்லை. மதுரைத் தமிழக் கூத்தனார் இயற்றிய புறம் 334ஆம் பாடலிலும் தலைமகன், தலைமகள் ஆகிய இருவரதும், கொடைப்பண்பும், விருந்தோம்பல் பண்பும் வியந்து பாராட்டப்பட்டுள்ளது. புறம் 361ஆம் பாடலில், பாடப்பட்டோன்பெயர்தெரியாதபோதிலும், அப்பாட்டுடைத் தலைவனின் கொடைச்சிறப்புப் போற்றப்பட்டுள்ளது. வேள்வி ஆற்றிய அந்தணர்க்கு அருங்கலம்பல கொடுத்தல், பலருக்கும் தாயினும் பார்க்க உதவுதல், பாணருக்குக் குதிரையும், களிறும் வழங்கல் ஆகியன பற்றிய செய்திகளை அதில் அறிந்துகொள்ள முடிகின்றது.

ஓய்மான் நல்லியாதனை, புறத்திணை நன்னாகனார் பாடிய புறம் 376ஆம் பாடலானது, அரசன் கொடுத்தலில் சிறந்தோனாக விளங்கும் இயல்பின் மேம்பாட்டை எடுத்துக்கூறிப் போற்றுகின்றது. கூடவே பாணரது வறுமை நிலையும் காட்டப்படுகின்றது. புறம் 377, 378, 381ஆம் பாடல்கள்முறையே, உலோச்சனாரால்சோழன் இராசசூயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்ட பெருநற்கிள்ளியையும், ஊன்பொதி பசுங்குடையாரால் சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியையும், புறத்திணை நன்னாகனாரால் கரும்பனூர் கிழானையும் பாடிய பாடல்களாகும். இவற்றில் பொதுவான முறையில் புரவலர்களின் கொடைச்சிறப்புக் காட்டப் பட்டுள்ளது. புறநானூற்றின் 382, 383ஆம் பாடல்கள், அரசனின் வாயிலில் நின்று தமது வறுமையை எடுத்துக்கூறி, பரிசில் வழங்குமாறு இரவலர்கள் கேட்பதாக அமைந்துள்ளன. கோவூர்கிழாராலும், மாறோக்கத்து நப்பசலையாராலும் இவை முறையே பாடப்பட்டுள்ளன. புறநானூற்றின் பிற் பகுதியிலுள்ள 384,385,386ஆம் பாடல்கள் மன்னர் களைப் புகழ்ந்து கொடை வழங்கியமைக்காகப் பாடப்பட்டவை யாகும். இதேபோன்று 390 – 400 வரையான பாடல்களிலும் மன்னர்கள், வள்ளல்கள் ஆகியோர் புலவர்களுக்கும், இரவலர்களுக்கும் அளித்த கொடைகள் பற்றியும், புலவர்கள் வாழ்த்திப் பாடிய முறை பற்றியும் அறிய முடிகின்றது. புறம் 400ஆவது பாடலில், தன்பகை கடித லோடு தன்னைச் சேர்ந்தோர் பசிப்பகையைக் கடிதலிலும் வல்லவன் சோழன் நலங்கிள்ளி என்பதைக் கோவூர்கிழார் பாடியுள்ளார்.

"தன்பகை கடிதல் அன்றியும் சேர்ந்தோர்
பசிப்பகை கடிதலும் தல்லன் மாதோ"
(புறம் 400: 16 – 17)

இவ்வாறு போர்ப்பகையையும், பசிப்பகையையும் ஒழிப்பதில் வல்லவன் நலங்கிள்ளி என்பதைக் கூறியுள்ளார் புலவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.4.2. அன்பறமும் அருளறமும்

நரிவெரூஉத் தலையார் என்னும் புலவர், சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் என்பவன் மீது பாடிய பாடலொன்று அரசின் அருமையையும், அரசன் அருளுடையவனாக விளங்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரோடு ஒன்றாது காவல்,
குழவி கொள்பவரின் ஓம்பு மதி!"

(புறம் 5: 5 – 7)

அருளையும், அன்பையும் தம் வாழ்விலிருந்து நீக்கி விட்டவர், நீங்காத துயரத்திலே கிடந்து உழல்வர். அத்தகையரோடு நீ சேராதிருப்பாயாக! ஆனால் பெற்றதாய், குழந்தையைப் பேணுவதுபோல உனது நாட்டைப் பேணிப் பாதுகாத்து வருவாயாக! ஏனெனில் நாட்டுக்கு அரசனாவது, எளிதில் கைகூடுவதன்று. ஆகையால் அருளோடும், அன்போடும்நாட்டைக்காவல்செய்துஆட்சிநடத்துவாயாக! என்று அறிவுரை கூறியுள்ளார் புலவர். இதேபோன்று,

"வழிபடு வோரை வல்லறி தீயே!
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்,
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி
வந்து, அடிபொருந்தி முந்தை நிற்பின்,
தண்டமும் தணிதி, பண்டையிற் பெரிதே"

(புறம் 10: 1 – 6)

ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் பாடிய பாடலின் முற்பகுதி இதுவாகும். நினது வழியைப் பின்பற்றிச் செல்வோரை விரைவாகவே உணர்ந்து கொள்பவன் நீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர்பற்றிப் புறம் கூறுவோரின் சொற்களை நீ கேட்கவே மாட்டாய். கொடுமை என்று நீ மனதிலே கருதிய ஒன்றை ஒருவன் செய்யக் கண்டால், நீதிமுறை தவறாது நடு நிலைநின்று ஆராய்ந்து அவனுக்குரிய தண்டனையைத் தருவாய். ஆனால் அவனே வந்து, தனது தவறை உணர்ந்து, நின் திருவடிகளைப் பணிந்து நின்றால், அவனுக்கு அளித்த தண்டனையையும் குறைத்து, முன்னிலும் பார்க்க அவன்மீது பேரன்பைப் பாராட்டுவாய். இவ்வாறு சோழன் நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னியைப் புலவர் புகழ்ந்து கூறுவதன் மூலம், அவனது நடுநிலைநின்று தீர்ப்பளிக்கும் நீதியையும், தவறை உணர்ந்தவர்க்குத் தண்ணருள் காட்டி உள்ளமை யையும் வெளிப்படுத்தியுள்ளார். நெட்டிமையார் என்னும் புலவரோ, பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதியைப் பாடிய பாடலொன்று, (புறம்: 12) அவனைப் பழிப்பதுபோலப் புகழ்வதாய் உள்ளது.

"பாணர் தாமரை மலையவும், புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்,
அறனே மற்றுஇது விறல்மாண் குருமி!
இன்னா ஆகப் பிறர்மண் கொண்டு
இனியசெய்தி நின் ஆர்வலர் முகத்தே"

(புறம்: 12)

ஐந்தடிகளால் ஆன இவ் அகவற்பாவில், பாணர், பொற்றாமரைப் பூவைச்சூடினர். புலவர்கள், யானையின் தேரைப் பெற்றனர். வெற்றிச் சிறப்புடைய குடுமியே! மாற்றார் நிலத்தை அவர்க்கு உரிமையற்றதாக்கி நீ கவர்ந்து கொள்கின்றாய். ஆனால் உன்னிடத்தில் வரும் பரிசிலர்க்கு மட்டும் இனியவற்றையே செய்து வருகின்றாய். அதுதான் நீ செய்து வருகின்ற அறமோ? என்பதாகக் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் குடுமியின் அறத்தை இகழ்வதுபோல, அவனது வீரத்தையும் வள்ளன்மையையும் புகழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியுள்ளார் புலவர். போரில் எதிரிகளின் நிலத்தைப் பறித்தாலும், மறுதலையாக இரப்போர்க்கு வேண்டி யவற்றை வழங்கி இனியவை செய்யும் கொடைத்திறம் இங்கு போற்றப்பட்டுள்ளது. புறநானூற்றின் 50ஆவது பாடலில், புலவருக்கு அருள் செய்த மன்னனைத் தரிசிக்க முடிகின்றது. சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும் பொறை என்ற மன்னன், தனக்குரிய முரசுக் கட்டிலில், மோசிகீரனார் என்னும் புலவர் படுத்துறங்கியதைப் பார்த்துச் சினங்கொள்ளாது, அவருக்கு அருள் செய்யும் நோக்கத் துடன் கவரியை எடுத்துவீசி (விசிறி) "கவரி வீசிய காவலன்" எனப் பெருமை பெற்றதைக் காண்கிறோம்.

### 1.4.3. உழவுத்தொழில்சார் அறம்

புறநானூற்றின் 18ஆம் பாடலானது, பாண்டியன் நெடுஞ்செழியன் பற்றிக் குடபுலவியனார் என்னும் புலவர் பாடியதாகும். முப்பது அடிகளால் ஆன இப்பாடலில் வரும் பின்வரும் அடிகள், வேளாண்மைப் பெருக்கமே மன்னர்க்கு வலுவையும், புகழையும் தருமென்ற சிறந்த உண்மையை விளக்குகின்றன.

"மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞானம் காவலர் தோள்வலி முருக்கி,
ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல்இசை நிறுத்தல் வேண்டினும், மற்றதன்
தகுதி கேள், இனி மிகுதியாள!
நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே,
உண்டி முதற்றே உணவின் பிண்டம்,
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே,
நீரும் நிலனும் புணரியோர், ஈண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பும் உயிரும் படைத்திசி னோரே,
வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்குஉத வாதே, அதனால்
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண்தட் டோரே,
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே!"

*(புறம் 18: 12 – 30)*

குடபுலவியனார் இயற்றிய பாடலின் இறுதிப்பகுதி மேலே உள்ளதாகும். பழைமையான ஊரைத் தலைநகராகக் கொண்ட வலிமைமிக்க வேந்தனே! நீ, மறுமையின்பத்தை விரும்பினாலும், உலகம் முழுவதையும் ஒருசேர ஆள வேண்டுமென்று நினைத்தாலும், நிலையான புகழை விரும்பினாலும், அதற்குச் செய்ய வேண்டுவன யாவை? என்பதைக் கேட்பாயாக! நீரின்றி வாழாது உடல்; அவ் உடலுக்கு உணவு கொடுத்தவரே உயிர் கொடுத் தவராவர்; உணவால் வளர்ச்சி காணுவதுதான் மனித உடல்; உணவோ நிலத்திலிருந்து கிடைக்கின்ற பயிர் விளைச்சலாலும் நீரினாலும் ஆனது; ஆதலால் நீரையும் நிலத்தையும் ஒருங்கு சேர்த்து வேளாண்மை செழிக்க உதவுவாயாக! அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும், உடலையும் நிலைநிறுத்தி வாழச் செய்த வராவர். புன்செய் நிலமானது, அகன்றிருந்தாலும் பயிர் விளைச்சல் பெருகா விட்டால் பயனற்றதாகும். எனவே, செழியனே! இதனை நீ எண்ணிப்பார்க்க! நீர் பெருகக் குளம் அமைத்து, நின் நாடு எங்கும் பயிர் வளம் பெருக்குவாயாக! இவற்றைச் செய்தோர் மூவகை இன்பமும் பெற்றுப் புகழடைவர். இதனைச் செய்யாதவர்கள் புகழ் பெறாது மடிந்து போவர் என்பதை உணர்வாயாக! என்றவாறு மன்னனுக்கு அறிவுரை கூறி வேளாண்மை நலம் பெருகப் பாடுபடுமாறும், அதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநில உயிர்கள் சிறப்புற்று உடல் நலமும், உள நலமும் பெற்று வாழ்வதைக் காணலாம் என்றும் புலவர் அறிவுறுத்தியுள்ளார். இச் செய்தியானது ஆளுவோரை ஆற்றுப்படுத்தும் அறநெறி சார்ந்த செயற்பாடாகும்.

இதே கருத்தைத் தழுவியதாக உழவுத்தொழிலின் மேன்மையையும், உழவர் குடிகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி, உழவர் குடியில் பிறந்தவரான வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கு அறிவுரை கூறுவதாக அமைந்த பாடலொன்றும் (புறம்: 35) புறநானூற்றில் காணப்படுகின்றது. பாடலின் தொடக்கத்தில் மன்னனுடைய ஆட்சிச் சிறப்பைக் கூறியதுடன், பின்னர் அறக்கருத்துக்களை எடுத்தியம்பியுள்ளார் புலவர்.

"அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதின் பதன்எளியோர் ஈண்டு
உறைவேண்டு பொழுதில் பெயல் பெற்றோரே"

*(புறம் 35: 14 – 16)*

அறம் நிலவும் செங்கோல் ஆட்சியிலே, ஒருவர் நீதி வேண்டும்போது, அவர்க்கு எளிதிலே காட்சியுடையவனாதல் என்பது, மழைத்துளியை வேண்டும்பொழுது பெருமழையே பெய்தது போன்ற தகுதியுடையதாகும் என்பது மேலே உள்ள பாடலடிகளின் பொருளாகும். அதேபோன்று,

"ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பின் நடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே, கூர்வேல் வளவ"

*(புறம் 35: 17 – 21)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிற்றைச் சுமந்து திரிவனபோல முகில்கள் விளங்கும் வானத்தின் நடுவே, ஓங்கி விளங்கும் நின் வெண்கொற்றக்குடை, வெய்யிலை மறைப்பதற்கு உரிய தன்று. கூரிய வேல் ஏந்திய வளவனே, அது குடிகளின் வருத்தத்தினைப் போக்கி அருள் செய்வதன் அடையாளம் ஆகும் என்பது இப்பாடல் அடிகளின் கருத்தாகும். இதன் மூலம் மக்களின் துன்பங்களைத் தீர்ப்பதுவே மன்னனின் முக்கிய கடமை என்பதையும், அவன் ஏந்தியுள்ள வெண் கொற்றக்குடையானது வெறுமனே நிழல் தருவதற்கு அல்ல, குடிமக்களைப் பாதுகாத்து நிழல் தரக்கூடியதாகவே உள்ளது என்பதைப் புலவர், மன்னனுக்கு எடுத்துக் கூறியுள்ளார். மேலும்,

"வெளிற்றுப் பனந்துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்,
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை,
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்,
பொருபடை தரூஉங் கொற்றமும், உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"

(புறம் 35: 22 – 26)

என வரும் அடிகள், முற்றாத பனையின் துண்டங்களைப் போல ஆங்காங்கே தம்முடல் உறுப்புக்கள் கிடக்குமாறு பகைவரின் யானைத்தொகுதிகள் உம்முடன் பொருதிய காலத்தில், அகன்ற அப்போர் முனையில், உனது படை வீரர்கள் அவற்றினை வென்று, உனக்குத் தேடித்தந்த வெற்றியானது, ஏர்க்களத்தில் கொழுமுனை கிழித்த விளைவயலிலே விளைந்த நெல் விளைச்சலின் பயனாற்றான் உண்டாயிற்று என்பதை மறவாதே! என்று போர் முனையில் கிடைத்த வெற்றியானது, ஏர் முனையில் கிடைத்த நெல்விளைச்சலினால் ஏற்பட்டது என்பதை ஆணித்தரமாகக் கூறியுள்ளார் புலவர். அத்துடன் மழை இல்லையானாலும், நெல் விளைச்சல் குறைந்தாலும், இயற்கை அல்லாத தீமைகள்செயற்கையாகத்தோன்றினாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமானது ஒரு நாட்டை ஆளுகின்ற காவலனையே பழிக்கும். அதனை நீ அறிந்தவனென்றால் ஒன்றை மட்டும் கேட்பாயாக! மாறுபட்டோரின் பொது மொழியைக் கருத்தில் கொள்ளாதே. உழவர் குடியினை முதற்கண் பாதுகாத்து அதன்மூலம் ஏனைய குடியினரையும் பசி யின்றிக் காப்பாற்றுவாயானால் நின் ஆணைக்கு அடங் காதவர்கள்கூட நின் அடியிணைகளைப் பணிந்து நின்னைப் போற்றுவர் என உழவர் குடியினை முதலில் பாதுகாக்குமாறு தூண்டியுள்ளார்.

"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்,
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்,
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்,
அதுநற்கு அறிந்தனை யாயின் நீயும்
பொதும லாளர் பொதுமொழி கொள்ளாது,
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்,
குடிபுறந் தருகுவை யாயின் நின்
அடிபுறந் தருகுவர், அடங்கா தோரே!"

(புறம் 35: 27 – 34)

என்பது வெள்ளைக்குடி நாகனார் பாடலின் இறுதி வரிகளாகும். பொதுவாக நோக்கினால், ஒரு நாடு வாழ்வதற்கும் மன்னனின் ஆட்சி சிறப்பதற்கும் அங்கேயுள்ள மக்கள் மேற்கொள்ளுகின்ற வேளாண்மையே முக்கியமானது என்பதும், அதனூடாகவே முதலில் மக்களை உணவளித்துக் காப்பாற்ற முடியும் என்பதும் உணர்த்தப்படுவதுடன், உழவர் குடியினைப் பாதுகாப்பதே மன்னனின் முதற் கடமையாகின்றது என்றும் கூறப்படு கின்றது. அதன்மூலமே ஏனைய குடிகளைவாழச்செய்யவும், எதிர்த்து வரும் பகையை முறியடித்து வெற்றி காண இயலவும் முடியுமென இப்பாடல் தெளிவாக்கி யுள்ளது. "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை" என்ற கருத்தும் இங்கே வலியுறுத்தப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### 1.4.4. போர் அறம்

தலைசிறந்த புலவரான கோவூர்கிழார் என்பவர், சோழன் நெடுங்கிள்ளியைப் பாடிய பாடலில் (புறம்: 44) அறமும் மறமும் பற்றி எடுத்துரைத்துள்ளார். சோழனது நாட்டை நலங்கிள்ளி என்பவன் முற்றுகையிட்டிருந்தபோது, சோழன் நெடுங்கிள்ளியானவன் கோட்டைக் கதவுகளைத் திறக்காது உள்ளே ஒழித்திருந்தான். இதன் காரணமாகப் போர் யானைகளுடன் குழந்தைகள், மகளிர் யாவரும் பசியினாலும்குடிநீரின்றியும்வருந்தினர்.இந்நிலையில்தான் புலவர் மன்னனை நோக்கி, மன்னா! நீ ஆற்றல் மிகுந்த குதிரைகளை உடையவனானால் உனது கோட்டைக் கதவினைத் திறந்துவிடு. வீரமுடையவனானால் கதவைத் திறந்து எதிர்த்துச் செல். இரண்டையும் செய்யாது உள்ளே ஒளித்திருத்தல் வெட்கக்கேடானது என்று குடிமக்களைக் காப்பது பற்றியும், போர் அறம் பற்றியும் இடித்துரைத் துள்ளார்.

> "அறவை யாயின் 'நினது'எனத் திறத்தல்,
> மறவை யாயின் போரொடு திறத்தல்
> அறவையும் மறவையும் அல்லை யாகத்
> திறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்
> நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
> நாணுத்தக வுடைத்திது காணும் காலே"
>
> (புறம் 44: 11 – 16)

இவ்வாறு பாடலடிகள் நிறைவு பெறுகின்றன. கோவூர் கிழாரின் இன்னொரு பாடலானது, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கு அறிவுரை கூறுவதாகப் பாடப்பட்டுள்ளது. அருளே அரசினும் சிறந்தது என்பதை இப்பாடல் காட்டுகின்றது. வஞ்சித்திணைப் பாடலான இதில், எதிரி நாட்டின்மீது படையெடுத்து அடிமையாக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சிறுபிள்ளைகளைக் கொல்லா திருக்குமாறு அரசனைப் புலவர் தூண்டிய விதம் உருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

"நீயே, புறவின் அல்லல் அன்றியும், பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை!
இவரே, புலனுழுது உண்மார் புன்கண் அஞ்சித்,
தமதுபகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்!
களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி
விருந்திற் புன்கண்நோ வுடையர்!
கேட்டனை யாயின், நீ வேட்டது செய்ம்மே!"

(புறம்: 46)

புறாவின் துயரத்துடன் பிறர் துயரங்களையும் நீக்கியவர் மரபில் வந்தவன் நீ! இச்சிறுவர்களோ, கற்றோர் வறுமையடையாதவாறு தம் விளைபொருள்களைப் பகுத்து உண்ணும் இரக்கமுடையோரின் கீழே வாழும் மரபினர். யானையைக் கண்டதும் தமது இளமையால் மகிழ்வர். அழுகையையும் மறந்திடுவர். மிகவும் சிறிய பிள்ளைகள், கூடியிருப்போரைப் புதியவராகக்கண்டு வருத்தமடைவார். யான் சொல்வதைக் கேட்டனையாயின் நின் விருப்பப்படியே அவர்களைக் கொல்லாது அருள்செய்க! என்பது இப் பாடலின் உள்ளடக்கமாகும். இப்பாடலின் ஊடாகப் புலவரின் உள்ளத்திலே சுரந்த அன்பையும் அருளையும் அறியமுடிகின்றது. அதே வேளையில் ஆளும் அரசனிடம், அவன் ஆற்றவேண்டிய பணியை இரக்கத்துடன் மேற் கொள்ளுமாறு இடித்துரைக்கும் தன்மையையும் காண முடிகின்றது. புறநானூற்றுப் பாடல்களில் காணப்படும் அறக்கருத்துக்களை நாம் அவற்றில் காண்பிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்துடனும் பொருத்திப் பார்த்து நோக்க வேண்டும். இதற்கு முந்திய பாடலில், போருக்கு அஞ்சிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைக்குள் பதுங்கியிருந்த மன்னனை வழிப்படுத்திய முறையைப் பார்க்கிறோம். இப்பாடலில், பகைவர் தேசத்தைச் சேர்ந்தவரானாலும், சிறு பிள்ளைகள் மீது அன்பு கொண்டு அருள் செய்வதே நல்லாட்சியின் சிறப்பு என்பதனையும் காண முடிகின்றது.

### 1.4.5. நீதி அறம்

மதுரை மருதன் இளநாகனார் பாடிய பாடலொன்று (புறம்: 55), பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை அறிவுறுத்தியதாக அமைந்தது. மன்னனை வாழ்த்தும்போது, அவன் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று அறங்கள் பற்றி இப்பாடல் வலியுறுத்தியுள்ளது. மூன்று புரங்களை எரித்த இறைவனின் நெற்றிக்கண்ணைப்போல எல்லா மன்னர்களிலும் மேம்பட்டு விளங்கும் மாறனே! கொல்களிறு, விரைந்து செல்லும் குதிரை, கொடிபறக்கும் தேர் ஆகியவற்றுடன் அஞ்சாத போர்மறவர்களையும் உடையவனே! இவையாவும் உமக்குப் பெருமை தருவனவே என்றாலும், அறநெறியை முதலாக உடையதே அரசனது சிறப்பு என்று முதலில் கூறிய புலவர் தொடர்ந்து,

“அதனால், நமரெனக் கோல்கோ டாது,
‘பிறர்’ எனக் குணங் கொல்லாது,
ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்,
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்,
வானத்து அன்ன வண்மையும், மூன்றும்,
உடையை ஆகி, இல்லோர் கையற,
நீநீடு வாழிய நெடுந்தகை, தாழ்நீர்
வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்,
கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடுஆழ் எக்கர் மணலினும்பலவே.” (புறம் 55: 13 –23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுளின்இறுதிப்பகுதியை இவ்வாறுமுடித்துள்ளார். அதனால் 'நம்மவர்' என அறம் கோணாது, 'அயலார்' என அவர் நற்குணங்களை வெறுத்து அவரைக் கொல்லாது, வீரத்தில் ஞாயிறு போன்றும், அருளில் திங்கள் போன்றும், கொடையில் மழை போன்றும் நீ விளங்குவாயாக! இல்லாத வர்களுக்கு இரங்கி அவர்களது துயரினைத் தீர்ப்பாயாக! நெடுந்தகையே, திருச்செந்தூர்க் கடற்கரையில் பெருங் காற்றுத் திரட்டிக் குவித்திருக்கும் மணலினும் பார்க்க நெடுநாள் புகழுடன் நீ வாழ்வாயாக! என்பது மேலே உள்ள பாடலடிகளின் பொருளாகும். தமர், பிறர் என்று பாரபட்சம் காட்டாது, காட்டப்படவேண்டிய நீதியையும், வீரம், அருள், கொடை ஆகியவற்றைப்பேணி வறியவர்களின் துன்பத்தை நீக்கவேண்டிய கடமைப்பாட்டினையும், சிறந்த அறநெறி களாக மன்னனுக்கு இச்செய்யுள்மூலம் மதுரை மருதன் இளநாகனார் எடுத்துரைத்துள்ளதைக் காணமுடிகின்றது.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்பவர், ஆய்அண்டிரன் என்பவன்மீது பாடிய நான்கடிகளாலான செய்யுளில் (புறம்: 134), இம்மை, மறுமை ஆகிய இரண்டு இடங்களிலும்பயனை எதிர்பார்த்து, கொடையைச்செய்பவன் ஆய் அல்லன் என்றும், அவன் அறவிலை வணிகனும் அல்லன் என்றும் புகழ்ந்துள்ளதைக் காணமுடிகின்றது.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வணிகன் ஆஅய் அலன்;
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கைவண் மையே"

(புறம்: 134)

ஆய் என்பவனது கைவண்மை (கொடை), சான்றோர் சென்ற அறவழியிலேயே செல்லுதல் வேண்டும் என்ற நற்செயலைக்கடமைப்பாடாகக்கருதும் அற அடிப்படையை உணர்த்தியுள்ளது. இதுவே பயன்கருதாத பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைப் பகவத்கீதை குறிப்பிடும் நிஷ்காமிய கர்மம் எனவும் கருதலாம்.

பாண்டியன் அறிவுடைநம்பி என்பவன் சிறந்த புலவன். மக்கட் செல்வத்தின் மகிமை பற்றி ஓர் அருமையான செய்யுளைப் புறநானூற்றில் தந்துள்ளான். அத்தகையவன், தனது ஆட்சியில் குடிமக்களை வருத்தி, அதிகளவு வரி வசூலிக்கும் அறவழிக்குப் பொருந்தாத செயலை மேற்கொண்டபோது, அதனைத்தடுத்துநிறுத்தி உண்மையான ஆட்சி அறம் எது என்பதை உணர்த்துவதாகப் பிசிராந்தையார் பாடிய பாடல் (புறம்: 184) அமைந்துள்ளது.

"காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே,
மாநிறைவு இல்லதும், பன்நாட்கு ஆகும்,
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்,
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போலத்,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே!" (புறம்: 184)

ஒரு மாவுக்குக் குறைந்தளவு (சிறிய அளவு இடப்பகுதி) நிலமாயினும், அதில் விளைந்த நெல்லை அறுத்து, அரைத்துக் கவளம் கவளமாக யானைக்கு உண்ணக்கொடுத்தால், பல நாட்களுக்கு அது போதுமானதாகும். நூறு செய் அளவு நிலமாயினும் (பெரியளவு நிலம்) அதற்குள் யானை சென்று உண்ணப்புகுந்தால், அது உண்ட நெல்லிலும் பார்க்க, அதன் காலடிபட்டு அழிவடைந்த நெல்லே மிகுதியாகிவிடும். இதேபோன்று அறிவுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேந்தன், அறநெறி அறிந்து குடிமக்களிடம் வரியைப் பெற்றுக்கொள்வானாயின், கோடிக்கணக்கான செல்வத்தைப் பெற்று அவன் இன்புறுவதுடன் அவனின் நாடும் செழிப்படையும். அப்படி இல்லாமல், அறநெறி பற்றிய அறிவு இல்லாமல் அறியாமை உடையவனாகி, அவனுக்கு ஆலோசனை கூறுகின்ற மந்திரச்சுற்றமும் அறநெறியைக் கூறாது அவன் போக்கையே ஆதரித்து நின்றால், குடிகளை வருத்தி – வற்புறுத்திப் பெருந்தொகையாக வரியினைப் பெற முனைந்தால், அதனால் அவனது நாடும் அழியும். அவனுக்கும் கேடு சூழும். இதனையே புலவர் மேலேயுள்ள செய்யுளில் வலியுறுத்தியுள்ளார். இச்செய்யுள்மூலம் அறநெறிக்கோட்பாடு ஒன்றையே புலவர் தந்துள்ளார் எனலாம். குடிமக்களின் நலன்பேணி, அவர்களை வருத்தாது, அளவோடு வரி வசூலிப்பது ஒரு விதம். அவர்களது நன்மை கருதாது, அவர்களை வருத்திப் பேராசையுடன் கூடுலான வரியைப் பெற முயற்சிப்பது இன்னொருவிதம். முதலாவது வழியினால் மக்களும், நாடும், மன்னனும் சிறப்படைய முடியும். இரண்டாவது வழியினால் மன்னன், மக்கள், நாடு மூன்றும் அழிவடைய நேரிடும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பதை உணர்ந்து, அறநெறியில் ஆட்சி செய்தல், அளவோடு வரி வசூலித்தல் நன்மை தரும் என்பது புலவரின் சிந்தனை ஆகும். சமகாலத்தில் நாடுகளை ஆட்சி செய்கின்ற தலைவர்களுக்கும், இந்த அறநெறிக் கோட்பாடு மிகவும் பொருத்தமானதாகும்.

புறநானூற்றின் 185ஆவது பாடல் தொண்டைமான் இளந்திரையனால் பாடப்பட்டது. உலக இயற்கையை நிலைநிறுத்தி, நாட்டை வழிநடத்தும் அரசனே மாட்சிமை உடையவன். அப்போது உலக வாழ்வும், சான்றோர் வகுத்த அறநெறி வழியே நன்கு நடக்கும். அவ்வாறு காத்தல் இலனாயின் எந்நாளும் பகையென்னும் சேற்றிலே அழுந்தி அவன் கெடுவதுடன், அவனது குடிமக்களும் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்களுக்கு உள்ளாகிக் கெட்டழிவர் என்ற கருத்தை இந்த ஆறு அடியிலான "கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்.." எனத்தொடங்கும் பாடல் கூறுகிறது.

"நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்,
அதனால், யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே."

*(புறம்: 186)*

மோசிகீரனார் பாடிய பொதுவியல் திணைப்பாடல் இதுவாகும். நெல்லோ, நீரோ மட்டும் உயிர்களைக் காப்பதல்ல. மன்னனே உயிர்களுக்கு உண்மையான உயிராக விளங்குகின்றான் என்பதை அறிந்து, மன்னர்கள் தமது குடிமக்களைப் பேணி நடக்க வேண்டும் என்பது இச்செய்யுளின் அடிப்படையாகும். இதன்மூலம், ஒரு நாட்டின் வேந்தனே உயிர்களைக் காத்தலிலும், அவர்களின் வாழ்வினைச் செம்மையாக்குவதிலும், உயிர் போன்று விளங்குகின்றான் என்பது புலனாகின்றது. மேலும் புறநானூ ற்றின்"நாடாகொன்றோகாடாகொன்றோ" எனத்தொடங்கும் 187ஆவது பாடலில் ஔவையார், நாடாயிருந்தால் என்ன? காடாயிருந்தால் என்ன? மேடாயிருந்தால் என்ன? பள்ளமாயிருந்தால் என்ன? எவ்விடத்தே ஆடவர்கள் நல்ல வர்களாக விளங்குகிறார்களோ, அவ்விடத்து நிலமும் நன்றாக விளங்கும் எனக் கூறியிருப்பதும் இங்கு நோக்கத் தக்கது.

### 1.4.6. மனையறம்

புறநானூற்றின் 145ஆவது பாடல், கபிலரால் பாடப் பட்டது. வையாவிக் கோப்பெரும் பேகனுக்குக் கூறுவதாக அமைந்தது. அவன், பனியால் நடுங்கும் மயிலுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வை அளித்த புகழுடையவன். யாமும் எம் சுற்றமும் பசியினால் உன்னை நாடி வருவோம் அல்லோம். அறம் விரும்புபவனே, உம்மிடம் அறஞ் செய்வாயாகவென இரந்த பரிசிலும் எம் நன்மைக்காக அன்று. உன் பிரிவுத் துயரால் வாழும் மனைவியின் நோயை விரைந்து தீர்க்க அருள்செய்தலே நாம் விரும்பும் பரிசில் ஆகும் என்கிறது இப்பாடல். அதாவது, தமக்குக் கொடை செய்து அருள் செய்வதிலும் பார்க்க, பேகனானவன் அவனைப் பிரிந்து வாடும் மனைவியின் துயரைப்போக்க அருள் செய்வதே சிறந்தது என்ற கருத்து, இரவலராகிய பாணரிடம் காணப்பட்டதை இப்பாடல் உணர்த்துகிறது. இதுவும் ஒருவகை மனையறம் பேணலைக் குறிப்பதாகும். மயிலுக்கும் இரவலர்களுக்கும் உதவுகின்ற வள்ளல், தனது மனைவி மீதும் அருள்செய்ய வேண்டும் என்னும் கடமை உணர்வையும் சுட்டிக்காட்டுகின்றது. வையாவிக் கோப் பெரும்பேகன், தனது மனைவியான கண்ணகியைப் பிரிந்து வாழ்ந்திருந்த நிலையை அறிந்த புலவர், வள்ளலாகிய அவன் தங்களுக்கு அளிக்கும் கொடையை விடப் பெரிய கொடையாக விளங்குவது, அவன் தனது மனைவிக்கு அருள்செய்து அவளுடன் மீண்டும் சேர்ந்து வாழ்வதே என்று கூறுகின்றார். இதேபோன்றதாகவே கோப் பெரும் பேகன் மீது அரிசில்கிழார் பாடிய பாடலும் (புறம்: 146) அமைந்துள்ளது. இவற்றைப்போன்ற இன்னொரு பாடல், பேகனைப் பற்றிப் பெருங்குன்றூர்கிழார் பாடியதாக (புறம்: 147) அமைந்துள்ளது. இம்மூன்று பாடல்களிலும் இரவலர்கள் பேகனை நோக்கித் தமக்கு அளிக்கப்படும் கொடையிலும் பார்க்க, பேகன் தனது மனைவியின் பிரிவுத் துன்பத்தை நீக்கி அருள்செய்தலே சிறந்தது என்றும், அதுவே தமக்கு வழங்கப்படும் உயர்ந்த கொடையாகு மென்றும்கருதுவதாகக்கூறப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிசிராந்தையார் இயற்றிய இன்னொரு பாடல், இவ்வுலகத்தினர் பேணவேண்டிய வாழ்வியல் அறத்தைப் போதித்துள்ளது. புலவர், பேரன்புக்குரிய கோப்பெருஞ் சோழனைக் காண்பதற்காகச் சென்றிருந்தார். அவரைக் கண்ட மன்னரோடிருந்த சான்றோர் சிலர், புலவருடைய அனுபவத்தையும் வயதையும் ஆராய்ந்த பின், உங்களுக்கு வயதாகியும் நரை இல்லையே என்று கேட்க, அதற்கு அவர் தமக்கு அமைந்த செம்மையான வாழ்வே காரணமெனக்கூறி விளக்கமளித்த பாடல் இதுவாகும்.

"யாண்டுபல வாக, நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர்?என வினவுதிர்' ஆயின்,
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்,
யான்கண் டனையர்என் இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான், காக்கும், அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே (புறம்: 191)

நுமக்குச் சென்ற ஆண்டுகளோ பலவாயின. இருந்தும் நரையின்றி இருக்கின்றீர். எவ்வாறு இந்நிலை பெற்றீர் எனக்கேட்போரே! மாட்சிமை உடையவள் என் மனைவி. எனது பிள்ளைகளோ, அறிவு நிரம்பியவர்கள். எனது வேலைக்காரரோ, யான் காண்பது போன்றே எதனையும் காணும் இயல்புடையவர்கள். எமது அரசனும் அறமல்லாது எதனையும் செய்யாது, முறையே எம்மைக் காத்து வருகின்றான். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கல்வியால் நிறைந்து அதற்கு ஏற்றவாறு புலன் உணர்ச்சிகளை அவித்து, உயர்ந்த குறிக்கோள்களுடன் வாழும் சான்றோர் பலர், யாம் வாழும் ஊரின்கண் வாழ்கின்றனர் என்பது இப்பாடலின் பொருளாகும். இதன்மூலம், மேலேகுறிப்பிட்ட காரணிகளால் எனக்குக் கவலையற்ற வாழ்க்கை அமைந்துள்ளது. அதனால் எனக்கு நரை இல்லை என்று குறிப்பிட்டாரெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடிகின்றது. இப்பாடலினூடாக, புலவரின் குடும்பத்தினர், ஊரவர் ஆகியோருடன் ஆளுகின்ற அரசனாகிய பாண்டியன் அறிவுடைநம்பியின் செங்கோன்மைத் திறத்தையும் போற்றியுள்ளமையை அறிய முடிகின்றது. அறக்கோட்பாட்டின் அடிப்படையில் இப் பாடலை நாம் நோக்கினால், நல்ல மனைவி, நல்ல பிள்ளை, நல்ல வேலைக்காரர், அறவழியில் ஆட்சி செலுத்தும் அரசர், சான்றோர்கள் வாழும் ஊர் ஆகிய அனைத்தும் ஒருங்குசேர அமையப்பெற்றால், ஒருவர் கவலை இன்றியும், சுகமாகவும் இல்லறத்திலேயே நீண்ட காலம் வாழமுடியும் என்பதை உணர முடிகின்றது. மனையறம், புகழறம், தேச நலம் ஆகியவை சீருடன் இருந்தாலே தனி மனித வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் மேலுறும் என்ற அறக்கோட்பாட்டை நாம் புரிந்துகொள்ள முடிகின்றது.

### 1.4.7. பிறர்நலம் பேணும் அறம்

"உண்டால் அம்ம, இவ்வுலகம்; இந்திரர்;
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்"
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்,
புகழ்எனின், உயிருங் கொடுக்குவர்; பழியெனின்,
உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்,
தமக்கென முயலா நோன்தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே."

(புறம்: 182)

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாடிய இச்செய்யுள், பொதுவியல் திணையைச் சேர்ந்தது. இவ் வுலகமானது, தமக்கென வாழாது பிறருக்காக வாழுகின்ற நல்லவர்களாலேயே வாழ்கின்றது என்பதே இப்பாடலின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையான அறக்கருத்தாகும். இந்திரருக்கு உரிய அமுதம் கிடைப்பதாயினும், அது இனியது எனக்கருதித் தாமே தனித்து உண்ணுதல் இல்லாதவர்; சினமற்றவர்; பிறர் அஞ்சுவதற்கு தாமும் அஞ்சி வாழாது சோம்பி இருப்பவரும் அல்லர்; புகழெனில் உயிரையும் கொடுக்கத் துணிந்தவர். பழியெனில் உலகம் முழுவதையும் பெறுவதாயினும் அதனை ஏற்றுக் கொள்ளாதவர்; அயர்வு அற்றோர்; அத்தகைய மாட்சிமைப் பட்டவர்களாக வாழ்பவரே உயர்ந்தோராவர். அவர் தமக்கென எதுவும் செய்யாது பிறர்க்காக உழைக்கும் உண்மையான இயல்புடையவர். இவையே அவர் பெருந் தகுதிக்குக் காரணமாகும். இத்தகையவராலேயே இந்த உலகம் வாழ்கிறது என்பது இச்செய்யுளின் பொருளாகும். சுயநலமற்றவராக, பிறர்க்காகவே வாழ்பவராக, உழைப்பவராக விளங்குகின்ற மாந்தர்களாலேயே இவ்வுலகம் வாழ்கிறது என கூறியிருப்பதன்மூலம், மேலானதொரு அறக்கருத்தினை இளம்பெருவழுதி பதிய வைத்துள்ளார். பூமியில் வாழ்ப வர்கள் இயன்ற வரையில் தமது நலனைக் காட்டிலும் பிறர் நலனைப் பேணி வாழ்வதே சிறந்த அறம் என்பது இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அப்படிவாழ்பவர்களின் இயல்புகள் எத்தன்மை யானவை என்பதையும் புலவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

### 1.4.8. கல்விசார் அறம்

கல்வியின் பெருமையை எடுத்துக்கூறிக் கற்றவரின் சிறப்பினைச் சுட்டிக்காட்டுவது, புறநானூற்றின் 183ஆம் செய்யுளாகும். ஒருதாய் வயிற்றில் பிறந்த பல பிள்ளைகளுக் கிடையிலும், அவரவர் தனிப்பட்ட சிறப்பின் காரணமாக, பெற்றதாயும் ஓரளவிற்கு பாசத்திலே வேறுபடுவாள். ஒரு குடியில் பிறந்த பலருள்ளும் மூத்தோனை வருக! என்று அழையாது அறிவுடையோனே வருக! என்று அரசனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பான். வேறுபட்ட நால்வேறு வகையான மக்களுள்ளும் (வருணம்) கீழ்நிலையில் உள்ளவன் ஒருவன் கல்வி கேள்விகளில் வல்லவனாயின், மேல்நிலையில் உள்ளவனும் அவனுக்கு ஆட்பட்டு நடப்பான். இதனால் ஊறுபாடு நேர்ந்த விடத்து உதவிசெய்தும், மிக்க பொருளைக் கொடுத்தும், அதனால் ஏற்படுகின்ற இழப்பு, வருத்தம் போன்ற நிலைகளைக் கண்டு மனம் வேதனை அடையாமலும், முயற்சியுடன் அனைவரும் கற்ற அறிவுடையவராகி மேம்படுவதே நன்றாகும். அதனால் சிறப்பும், அறிவும், நூற்பயிற்சியும் பெற்று இவ்வுலகத்து வாழ்விலும் உயர்வு காணலாம். இத்தகைய கருத்தினைக்கூறுகின்ற பொதுவியல் திணைப்பாடலை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் மன்னன் பாடியுள்ளான். அந்தப் பாடல் பின்வருமாறு அமைகின்றது.

> "உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,
> பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!
> பிறப்பு ஓர்அன்ன உடன்வயிற்று உள்ளும்,
> சிறப்பின் பாலால், தாயும்மனம் திரியும்,
> ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,
> 'மூத்தோன் வருக' என்னாது, அவருள்
> அறிவுடை யோன்ஆறு அரசும் செல்லும்,
> வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,
> கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
> மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே."
>
> (புறம்: 183)

கல்வி கற்றோரின் சிறப்பைப்பற்றி ஏராளமான நூல்கள் எடுத்துக்கூறி இருப்பினும், மேலே உள்ள பாடல் மூலம், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடியிருக்கும் விதம், புதிய பார்வையைக் காட்டுகின்றது. சமூக ரீதியான சாதி அடுக்குகளில் கீழ் இருப்பவன்மேலே செல்லவும், மேலே இருப்பவன் கீழிறங்கவும் கல்வி காரணமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று, தனக்குப் பிறந்த எல்லாப் பிள்ளைகளிடமும் ஒரே பாசத்தைக் காட்டுபவள் தாயாக இருந்தாலும், சிலவேளைகளில் கல்வியில் சிறப்புடைய வரிடத்தில் அவள் கூடுதல் கரிசனை காட்டவோ அல்லது அக்கறை காட்டவோ கூடியதாக இருக்கும் என்பது யதார்த்தமாகும். நாட்டை ஆளுகின்ற மன்னன்கூட தனக்கு உதவியாக கல்வியில் சிறந்த ஒருவனைத்தான் அழைப்பான். அவன் மூலமே ஒரு செயலை நிறைவேற்றக் கருதுவான். இத்தகைய கருத்துக்களை முன்னிறுத்தி கல்வியின் உயர்வை எடுத்துக் காட்டும்போது, அத்தகைய கல்வியை எத்தனை விதமான இடையூறுகள் வந்தாலும் அவற்றை யெல்லாம் தாண்டி, வெற்றி கண்டு பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது. கல்விய லாளர்கள், கல்வியின் பெருமைபற்றிக் கூறும் போது, இந்தச் சங்கப்பாடலை மறக்காமல் நினைவூட்டுவர். அறம் சார்ந்த கருத்துக்களில் கல்வியென்பது, மனிதனுக்கு எக்காலத்தும் இன்றியமையாதது, முதன்மையானது என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.

### 1.4.9. இல்லறமும் மக்கட்பேறும்

இல்லறவாழ்வின் உயரிய பேறாகக் கருதப்படுவது மக்கட் செல்வமாகும். திருக்குறளில்கூட 'புதல்வரைப் பெறுதல்' என்ற ஓர் அதிகாரம் இடம்பெற்றுள்ளது. கணவனும், மனைவியும் மனையறம் பேணும்போது, அதற்குத் துணையறமாக அமைவது மக்கட்பேறாகும். அதன்மூலம் கிடைக்கின்ற மகிழ்ச்சியும், திருப்தியும் ஓர் இல்லறத்தின் இனிமையையும் செல்நெறியையும் தீர்மானிக்கும். இதனையே உலகில் உள்ள சான்றோரும், புலவர்களும், கவிஞர்களும், எழுத்தாளர்களும் காலத் திற்குக்காலம் வலியுறுத்தி வந்துள்ளனர். மக்கட்பேறு பற்றிப் பழந்தமிழ் இலக்கியமான புறநானூறு கூறும் பாடல் ஒன்றினை இங்கு நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,
இட்டும் தொட்டும், கவ்வியும், துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே." *(புறம்: 188)*

பாண்டியன் அறிவுடை நம்பி என்பவன், மக்கட் செல்வத்தின் மகிமை பற்றிப் பாடிய பாடல் இதுவாகும். எத்தகைய பெருஞ் செல்வராயிருந்தாலும், உறவினர்கள், விருந்தினர்கள் போன்றோரை ஒருங்கு சேர்த்துக் கூடியிருந்து, அறுசுவை உணவுகளை உண்பவராய் இருந்தாலும், அவ் விடத்தில் குறுக்கும் நெடுக்குமாக குறுகுறுவென்று நடந்து, அந்த உணவுப் பண்டங்களைத் தமது சிறுகைகளால் அள்ளியிட்டும், தொட்டுப்பார்த்தும், வாயினால் கவ்வி எடுத்தும், கையால் துழாவிப் பார்த்தும், நெய்கலந்த சோற்றினைத் தமது தேகத்தில் பூசியும், இன்ப மயக்கத்தைத் தருகின்ற மக்கட் செல்வம் இல்லாதவர் களுக்கு, அவர்க ளுடைய வாழ்நாட்கள் பயனற்றவை ஆகும். இவ்வாறு பாண்டியன் அறிவுடைநம்பி எடுத்துக் கூறிய அறம் சார்ந்த கருத்தானது, மானிட வாழ்வில் ஒருவருக்கு நிறைவாகக் கிடைக்கக்கூடியது பிள்ளைச் செல்வம் என்பதை உணர்த்தி யுள்ளது. இதனையே திருவள்ளுவர்,

"மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

*(குறள்: 65)*

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

*(குறள்: 66)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய குறள்களினால் வெளிப்படுத்தியுள்ளார். நளவெண்பா ஆசிரியர், "புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய் மக்களையிங் கில்லாதவர்க்கு" எனக் கூறிச்செல்வதும் குறிப்பிடத்தக்கது. இதேபோன்று ஏராளமான தமிழ்நூல்கள், இல்லறத்தான் ஒருவனுக்கு அவனது வாழ்வை நிறைவாக்குவது மக்கள் செல்வம் என்பதனை எடுத்து ரைத்துள்ளன. இதனை அறக்கோட்பாட்டில் வைத்துக்கருத முடியுமா? ஏன யோசித்தால், அறம் சார்ந்த மனித வாழ்க்கையில் இதுவும் ஒன்றெனக் கூறிவிட முடியும். முன் வினைப் பயனால், அருஞ்செல்வமாகப் பிள்ளைச் செல்வம் அமைகின்றது என்ற கருத்தும், ஒருவனை நன்னெறியில் துய்ப்பது நன்மக்கட்பேறு என்ற கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கது.

### 1.4.10. நிலையாமைசார் அறம்

மனிதவாழ்வானது நிலையற்றது. மனிதன் வருந்தித் தேடிய செல்வமும் நிலையற்றது. மனித உடலின் வனப்பும், இளமையும், வாழ்வும் நிலையற்றவை. இருந்தும் அவற்றை நிலையானவை எனக்கருதி மானுடன் மயங்குகின்றான். முடிசூடியாண்ட மாமன்னர்கூட, முடிவி லொரு பிடிசாம்பரா வதுண்டு. உறவும் ஊராரும், உற்றார் பெற்றாரும், நமது உயிர் பிரிந்தேகுமானால் கூடவரப் போவதில்லை. இதனை நன்கு புரிந்துகொண்ட பழந்தமிழ்ப் புலவர்கள், மன்னர்களை அறிவுரைகூறி ஆற்றுப்படுத்தியுள்ளனர். வீரமோ, வெற்றியோ, செல்வமோ, வல்லமையோ நீடித்து நிற்கமாட்டா. அறவழியில் ஆற்றிய செயல்கள் மட்டுமே நன்மை பயப்பனவாகும். மறுவுலகச் சொர்க்கத்திற்கு வழிகாட்டுவனவாகும் என்ற கருத்துச் சங்கப் பாடல்கள் சிலவற்றில் காணப்படுகின்றது. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் இயற்றிய பொருண் மொழிக்காஞ்சிப் பாடலொன்று, மனித வாழ்வு பற்றிய மேலானதோர் அறக்கருத்தை எட்டு அடிகளில் தந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்,
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே,
அதனால், செல்வத்துப் பயனே ஈதல்,
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே."

(புறம்: 189)

உலகம் முழுவதையும் தனது உரிமையென்று கூறி, ஒருகுடைக்கீழ் ஆட்சி செய்து வரும் அரசர்க்கும், இரவும் பகலும் துயிலாது விலங்குகளை வேட்டையாடக் காத்திருக்கும் வறியவனுக்கும், பார்க்கப்போனால் உண்ணப் படும் பொருள், நாழி அளவு தானியமே ஆகும். அதேபோன்று உடுக்கின்ற பொருள்களும் அரை ஆடை, மேலாடை என இரண்டுமே ஆகும். ஏனைய உடல், உள்ளத் தேவைகளும் இதேபோன்று ஒன்றாகவே விளங்கும். ஆதலால் செல்வத்துப் பயனாவது, இப்பொருள்கள் அற்ற வறியவர்க்கு விருப்பத்துடன் ஈதல் ஆகும். நாமே அனுபவிப்போம் என்று எண்ணி நடந்தால், அவற்றை அனுபவிக்கத் தவறியவர்கள் வாழ்க்கையே இவ்வுலகில் பலவாகும் என்கிறது இப்பாடலின் பொருள். இதிலிருந்து ஒருவன் தன்னிடம் பொருள் இருக்கும்போது, அதனை இல்லாதவர்களுக்குக் கொடுத்துப் பயனடைய வேண்டும். தவறினால் மற்றவர்க்கும் உதவாமல், அவனுக்கும் உதவாமல் அப் பொருளானது வீணாகிவிடும். பிறருக்கு ஈவதற்குரிய மனமும், குணமும் இருந்தாலே, அவை ஒருவனின் இம்மைக்கும், மறுமைக்கும் நன்மையான வைப்பாக மாறி விடும் என்பன இப்பாடலினூடாக வெளிப் படுத்தப்படும் அறக்கருத்துக்களாகும். வெறுமனே கருத்துக்களை முன்வையாது, அவற்றை ஒரு கோட்பாட்டின் அடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையில் முன்னெடுத்துச் செல்லும் அறவியல் நெறியினை இங்கு காணமுடிகின்றது.

பிரமனார் என்னும் புலவர் பாடிய பெருங்காஞ்சித் திணைப் பாடலானது, நிலையாமை பற்றிக் கூறுவதாகும். தான் வாழும் காலத்திலேயே புகழ் தரத்தக்க செயல்களை ஆற்றாதவன், மரணம் வந்துற்ற கால எல்லையில், அதை நினைத்து வருந்துவது ஏனோ? என்று கேட்கின்றார் புலவர். வாழ்க்கைக்குத் துணையான இல்லாள் அழுதரற்ற, கூற்றன் வந்து உயிரினைக் கவர்ந்து செல்லும் காலத்திலே, இவ்வுலகில் உடலை ஒழித்துப் புகழை நிலைநிறுத்துவதற்கு உரிய செயல்களை, தான் வாழும் காலத்திலேயே செய்திருக்க வேண்டும் என்பது பாடலின் அடிநாதமாகும்.

"குன்றுதலை மணந்த மலைபிணித் தியாத்தமண்,
பொதுமை சுட்டிய மூவர் உலகமும்
பொதுமை இன்றி ஆண்டிசி னோர்க்கும்,
மாண்ட வன்றே ஆண்டுகள்; துணையே
வைத்த தன்றே வெறுக்கை"

(புறம் *357: 1 – 5*)

பாடலின் முதற்பகுதி இதுவாகும். மூவேந்தருக்கும், பொதுமை என்று சுட்டிய நாட்டைத் தனித்துத் தாமொருவரே ஆண்ட மாமன்னருக்கும், வாழ்நாட்கள் இறுதியில் முடிவைத்தான் எய்தின. அவரிடம் திரண்ட செல்வமும் அதனைத் தடுக்கும் துணையாக அமையவில்லை என்பதை இப்பாடலடிகள் விளக்கியுள்ளன. எனவே அறச்செயல் ஒன்றே புகழை நிலைநிறுத்தும் சிறந்த துணையாகும் என்பது இங்கு உணர்த்தப்பட்டுள்ளது. "இக்கரை நின்று இவர்ந்து உக்கரை கொளலே.." என்று முடியும் இப்பாடலின் இறுதியடியானது, இம்மையில் முறைப்படி அறச்செயல் களை ஆற்றினால், மறுமையில் வீடுபேற்றின்பம் கிடைக்கும் என்ற சிந்தனையைத் தந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துவரும் வான்மீகியார் பாடிய புறநானூற்றின் 358ஆம் பாடலும், துறவற வாழ்விற்கு ஆதாரமாக அமைவது, இல்லற வாழ்வுதான் என்ற கருத்தைக் கூறியுள்ளது. நிலையாமையை உடையது இந்த உலகமாகும். உலகம், தவம் ஆகிய இரண்டையும் ஆராய்ந்தால், தவத்திற்கு ஐயவி (ஆகுதியில் இடப்படும் வெண்கடுகு) போன்றது உலக வாழ்வான இல்லறம். துறவறத்தினர்பால் செல்வம் சேராது. எனவே இல்லற வாழ்வு துறவறத்திற்கு உதவியாக அமையும் என்ற கருத்தை இங்கு காண முடிகின்றது. திருக்குறளில் உள்ள "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை" (குறள்: 41) என்ற குறளோடு இதனைப் பொருத்திப் பார்க்க முடியும்.

"நில்லா உலகத்து நிலையாமை நீ
சொல்ல வேண்டா தோன்றல், முந்துஅறிந்த
முழுதுஉணர் கேள்வியன் ஆகலின், விரகினானே"
(புறம் 361: 20 – 22)

நிலையாமை உடையது இவ்வுலகம் என்று நீ சொல்ல வேண்டாம். அவனே அதனை உணர்ந்து, இங்கே தன் புகழை நிலைநிறுத்தி, அது நிலைபெற்று நிற்குமாறும் செய்துவிட்டான் என்ற பொருளை மேலே உள்ள பாடலடிகள் தந்துவிட்டன. ஏற்கனவே இகழ்வான செயல்களைப் புரியாமல், தான் இறந்த பிறகும், தனது புகழ் நிலைநிற்றலுக்கு ஏற்ற அறச்செயல்களைச் செய்தவன், இந்தத் தலைவன். ஆகவே இந்த உலகம் நிலையில்லாதது என்பதை அவனுக்குச் சொல்லத் தேவையில்லை. அதனை அறிந்துதான் அவன் செயற்பட்டுள்ளான் என்கிறது பாடல். "கார்எதிர் உறுமின் உறறிக் கல்லென..." எனத் தொடங்கும் 22அடிகளால் ஆன இப்பாடலைப் பாடியவர், பாடப்பட்டோன் பெயர்கள் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவெண்டேரையார் பாடிய "ஞாயிற்று அன்ன ஆய்மணி மிடைந்த..." (புறம்: 362) எனத்தொடங்கும் செய்யுளானது, நிலையாமையை வலியுறுத்தி அறநெறி பேணுதலை அறிவுறுத்துவதாகும்: எதிர்த்துவந்த பகைவரைப் போரில் வெற்றிகொண்ட அவனது செயல், அருளாகாது. அது நான் மறைகளிலும் குறிக்கப்படுவது மன்று. புறத்துறை சார்ந்த பொருளாகலின் ஒழுக்க நூல்களிலும் குறிக்கப்பட்ட தன்று. அந்தணர்க்கு அவன் ஈந்து பார்த்த நீரோ, கடல் நீரளவு இருக்கும். இரவலர்க்கு ஊரும், சோறும் கொடுத்துப் பல அணிகலங்களும் சிறப்புறத் தந்தவன். எல்லாம் எதற்காக? இடுகாட்டிலே தனக்குரிய இடம் மெல்ல மெல்லத் தயாராகி வருவதை உணர்ந்து, உயர்ந்தோர் நாட்டிற்குப் (மேலுலகத்திற்கு) புகழுடம்போடு செல்வதற் காகவே அவன் இவ்வளவையும் செய்தான் என்பதை அறிவீராக! என்று பாடலின் உட்பொருள் அமைந்துள்ளது.

"சிறுவெள் என்பின் நெடுவெண் களரின்,
வாய்வன் காக்கை கூகையொடு கூடிப்
பகலும் கூவும் அகலுள் ஆங்கண்,
காடுகண் மறைத்த கல்லென் சுற்றமொடு
இல்என்று இல்வயின் பெயர; மெல்ல
இடஞ்சிறிது ஒதுங்கல் அஞ்சி,
உடம்பொடும் சென்மார், உயர்ந்தோர் நாட்டே"
(புறம் 362: 16 – 22)

பாடலின் இறுதிப்பகுதி இதுவாகும். இதில் சுடுகாட்டு (இடுகாடு) வர்ணனை இடம்பெற்றுள்ளது. வெள்ளெலும் புகள் காணப்படும், காக்கை, ஆந்தை போன்றன சத்தமிடும் இடமெனச் சுடுகாடு வர்ணிக்கப்பட்டுள்ளது. மேலும் சுற்றத்தார் அழுதரற்ற, இல்லத்திலிருந்து பெயர்ந்து, அவ் விடத்திற்கு இறந்த உடலம் எடுத்துச் செல்லப்படும் என்பதையும் அறிய முடிகின்றது. ஆதலால் உலக வாழ்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையற்றது. இறுதியில் இடுகாட்டிலேயே இறந்த உடல் அடக்கம் செய்யப்படும். அதனை உணர்ந்து போர் செய்யும்போது, அதற்குரிய போர் அறத்தைப் பேண வேண்டும். குடிமக்களைக் காப்பாற்றும்போது, அவர்களது தேவையை நிறைவேற்ற வேண்டும். பசியைப் போக்க வேண்டும். நல்ல செயல்களை அறவழியில் ஆற்ற வேண்டும் என்பதை இச்செய்யுள் விளக்குகின்றது எனலாம்.

இதே போன்றதாக ஐயாதிச் சிறுவெண்டேரையார் பாடிய செய்யுளொன்று (புறம்: 363), முடிசூடி ஆட்சிசெய்த மாமன்னர் கூட, முடிவில் இடுகாட்டில் அடங்கிப் போவர் என்ற நிலையாமைக் கருத்தை வலியுறுத்தியுள்ளது. இந்தப் பரந்த மாநிலத்தை, மிகச் சிறிதளவு இடமும் பிறருக்குக் கொடுக்காமல், தாமே ஆண்டு வந்த முடிமன்னர்கள், கடற்கரை மணலிலும் பலராவர். அவர்களெல்லாம் தமது நாடு பிறர்க்கு உரிமையாக, இறுதியில் இடுகாடே இடமாகச் சென்று மாய்ந்தனர். அதனால் நீயும் கேட்பாயாக! அழியாமல் என்றும் உடம்போடு நிலைத்திருக்கும் உயிரென ஒன்றும் கிடையாது. இது தெளிவான உண்மை. மாயம் எதுவுமில்லை. இடுகாட்டிலே நீயும் சென்று சேரும் முன்னே, நின் நாட்டை ஆளும் ஆசையை மறந்து, உன் புகழை நிலைபெறச் செய்வதற்குரிய செயல்களை இன்றே செய்யத் தொடங்குவாயாக! இவ்வாறு நிலையாமையை வலியுறுத்துகின்றது இச்செய்யுள்.

"நிலங்கல னாக இலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே,
செய்ந்நீ முன்னிய வினையே,
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே"

*(புறம் 363: 15 – 18)*

இவ்வாறு நிறைவு பெறுகிறது செய்யுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாடா மாலை பாடினி அணியப்
பாணன் சென்னிக் கேணி பூவா
எரிமருள் தாமரைப் பெருமலர் தயங்க"

(புறம் 364: 1 – 3)

எனத் தொடங்கும் கூகைக்கோழியார் பாடிய பாடலும், நிலையாமையை வலியுறுத்துவதாகும். இறந்தோர் உடல்களை இட்டுப் புதைத்தும், முதுமரப் பொந்தில் இருந்து கூகைக்கோழி கூவுவதுமான இடுகாட்டை அடைந்தபின், முன்னர் நீ செய்த மகிழ்ச்சிகரமான செயல்கள் செய்வதற்கு அரியன. பெருமானே, நீ இதை அறிவாயாக! என்று நிலையாமை இங்கு வலியுறுத்தப்படுகின்றது. புறம் 365ஆம் பாடலைப் பாடியவர் மார்க்கண்டேயனார். "மயங்குஇருங் கருவிய விசும்புமுகனாக" எனத்தொடங்கும் பெருங் காஞ்சித்திணைப் பாடலானது, நிலையாமையை அழுத்தமாக வலியுறுத்துகின்றது. புகழால் என்றும் நிலைத் தற்குரியவற்றைக் கருதிச் செல்வாயாக! என்று இச் செய்யுளில் நிலையாமை வலியுறுத்தப்பட்டுள்ளது. "விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற, உள்ளேன் வாழியர் யான்" என வரும் இறுதிப் பகுதிப் பாடலடிகள், விலைநலப் பெண்டிர் போல, எந்நாளும் வாழுகின்றேனே என்று, நிலமகள் பாடுவதாகக் கூறப்பட்டுள்ளது. எனினும் புலவர் தம்மையே இப்படிக்கூறினார் எனவும் அறிய முடிகின்றது.

### 1.4.11. உலகப்பொதுமை அறம்

புறநானூற்றுப் பாடல்களில் கணியன் பூங்குன்றனார் இயற்றிய "யாதும்ஊரே" எனத் தொடங்கும் பாடலானது, மிகவும் புகழ் பெற்றது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன,
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே, முனிவின்,
இன்னா தென்றலும் இலமே, மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."

*(புறம்: 192)*

தான் கண்டறிந்த உலகத்து ஊர்களையும், மக்களையும் முறையே, தன்னுடைய ஊராகவும், தன்னுடைய உறவினர் களாகவும் கருதுகின்ற சமவுடைமைத் தத்துவப் பண்பினை இப்பாடலில் காணமுடிகின்றது. மேலும், தீமையோ நன்மையோ, துன்பமோ அது நீங்குவதோ பிறரால் வருவ தன்று. தாமே தேடிக்கொள்வதாகும் என்ற நீதிக் கருத்தினையும் காண முடிகின்றது. வாழ்க்கையானது, மகிழ்ச் சிகரமானதெனக் கருதுதலோ அல்லது, சினம்கொண்டு துன்ப மயமானதென நினைத்தலோ தம்மிடம் இல்லையெனக் கூறுவதன்மூலம், மனச் சமநிலையில் வாழுகின்ற பண்பினைக் காணமுடிகிறது. இவற்றைத் தொடர்ந்து, வான மானது மின்னியிடித்து, கற்பாறைகளில் பொழிகின்ற குளிர்ந்தநீரானது, சிறுசிறு அருவிகளாகிப்பேராறாகும்போது, அலையின் திசையில் இழுத்துச் செல்லப்படும் மிதவை போல, எமது உயிர் விதியின் வழியே இழுத்துச் செல்லப்படும் என்பதைக் கற்றுணர்ந்து தெளிந்த ஞானிகளின் காட்சிகளின் மூலம் அறிந்து வைத்துள்ளோம் என்கிறார். இவ்விடத்தில் நீரலைகளால் மிதவை இழுத்துச் செல்லப்படுவதை விதியின் வழியே உயிர் இழுத்துச் செல்லப்படுவதற்கு உவமையாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளார். இதனை உணர்ந்த காரணத்தினால், செல்வத் தினால் மிகவும் மேம்பட்டவராக இருந்தாலும், அவரை வியப்புற்றுப் புகழ்வதுமில்லை. ஒருவேளை மரியாதை காரணமாகப் புகழவேண்டி ஏற்பட்டாலும், செல்வத்தால் சிறியவர்களை யாம் ஒருபோதுமே இகழ்ந்து பேசுவது மில்லை. இவ்வாறு கூறுவதன்மூலம் ஏழை, பணக்காரர் என்ற பேதம் கிடையாது. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு கிடையாது. அரசனானாலும், ஆண்டி யானாலும் எமக்குச் சமனே என்ற அறம் தழுவிய கருத்தை, மறை முகமாகப் புலவர் தந்துள்ளார். என்றைக்கும் அழியாத தமிழரின் சொத்தாக இப்பாடல் விளங்குகின்றது. இப் பாடலின் முதலடியானது, ஆங்கிலத்தில் மொழி பெயர்க் கப்பட்டு, ஜெனிவா நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை வாயிலில் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

புறநானூற்றின் 193ஆம் செய்யுளானது, ஒக்கல் வாழ்க்கை பற்றிக் குறிப்பிடுகின்றது. ஓரேருழவர் பாடியது. சுற்றத்தோடு கூடி வாழும் இல்வாழ்க்கையானது, என்னை ஓடவும் விடாமல், உய்யவும் விடாமல் காலைத் தடையிட்டு நிறத்தி விடுகின்றது என்று சலனப்படுகிறார் புலவர். தனியாக நிற்கும் மான், வேடனிடம் தப்பிப் பிழைத்து ஓடுவதுபோல, நானும் நலமுடன் கவலையின்றி வாழ்ந் திருப்பேன் என்றும் அங்கலாய்க்கிறார். இதன்மூலம், இல் வாழ்க்கையானது, சுற்றம்சூழ வாழும் அனைவரும் ஒன்றிணைந்த ஒக்கல் வாழ்க்கை என்பதும், அதிலிருந்து தப்பிப் பிழைப்பதென்பது, அரிதென்பதும் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. எனவே இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை ஆற்றிக்கொண்டு, அதிலேயே மகிழ்ச்சியுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்ற அறக்கருத்து இங்கு முதன்மை பெறுகின்றது. இதே போன்று அடுத்து வரும் புறநானூ ற்றின் 194 ஆம் பாடலை, பக்குடுக்கை நன்கணியார் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓரில் நெய்தல் கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்,
புணர்ந்தோர் பூவணி அணியப், பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்,
படைத்தோன் மன்ற, அப்பண்பி லாளன்!
இன்னாது அம்ம, இவ் வுலகம்;
இனியகாண்க, இதன் இயல்புணர்ந் தோரே."

*(புறம்: 194)*

இந்த உலகம் துன்பம் தருவது. ஒரு வீட்டில் உயிர் பிரிந்த காரணத்தினால் சாப்பறை முழங்குகின்றது. இன்னொரு வீட்டிலே மணவாழ்வில் ஈடுபடும் தம்பதியருக்காக, மங்கல முழவோசை முழங்குகின்றது. இதனூடாக, இன்பமும் துன்பமும் மாறி மாறி விளங்குகின்ற இவ்வுலக நிலையினைப் புலவர் கனத்த மனதோடு எடுத்துக்காட்டியுள்ளார். துன்பந் தருகின்றவற்றை விலக்கி, இன்பந்தருகின்றவற்றை மாத்திரம் நெஞ்சில் இருத்தி, வாழப்பழக வேண்டும் என்பதே புலவர் காட்டும் அறவுரையாகும்.

நரிவெரூஉத் தலையார் பாடிய பாடல், புறநானூ ற்றில் 195ஆம் பாடலாக அமைந்துள்ளது. நல்லவற்றைச் செய்யாது விடினும், தீயவற்றை செய்யாமல் இருங்கள். அதுதான் எல்லோரும் விரும்புவது. அத்துடன் நல்ல வழியில் செலுத்தும் நெறியும் அதுதான் என்பதை இப்பாடல் உணர்த்து கின்றது. பலவிதமான குணங்களை உடையவர்களே! என விளித்துப் புலவர் பாடும் இப்பாடலில், கூற்றுவன் வந்து உங்கள் உயிரைக் கவர்ந்து செல்லும் காலத்திலே உமது நிலைக்கு வருந்துவீர்கள். ஆதலால்தான் நல்வினை செய்யாது விடினும் தீவினையைச் செய்யாது விடுங்கள். அதுவே உங்களது புகழுக்கு, நன்னெறியில் உங்களைச் செலுத்துவதற்கும் ஏற்ற வழியாகும் என்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்,
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே"

(புறம் 195: 6 – 9)

இவ்வாறு முடிகின்றது நரிவெரூஉத் தலையாரின் பாடல். ஆவூர் மூலங்கிழார் இயற்றிய பாடலொன்று (புறம்: 196), தம்மால் இயன்ற பொருளை மனம் விரும்பிக் கொடுத்தலும், அப்படிக் கொடுக்க முடியாதபோது இல்லை எனக் கூறுவதும், தாளாண்மை உள்ளவர்கள்பால் அமைந்த இயல்பாகும். முடியாததை முடியும் என்பதும், செய்யக்கூடியதை செய்ய முடியாதென்றலும், இரப்போரை அலைக்கழித்தலும், அவரை ஈயும் இயல்பு இல்லாதவரெனப் புகழ்குன்றச் செய்துவிடும். நீ, என்பால் நடந்துகொண்டதும் அவ்வாறே ஆயிற்று. இதுவரை காணாத ஒன்றை இன்று கண்டேன். வெய்யிலோ மழையோ எதையும் பொருட் படுத்தாது, கல்லாகிக் கரையாது நிற்கும் என் வறுமையோடு, நாணம் அல்லாது வேறில்லாத என் கற்புடைய மனைவியின் நிலையை நினைத்து நானும் போகின்றேன். நின் வாழ்நாள் சிறப்பதாக! நோயற்று நின் புதல்வர் வாழ்வாராக! என்று முடிகின்றது இப்பாடலின் பொருள். அதாவது, புலவரின் வறுமையை உணர்ந்து, அதற்கேற்ற முறையில் அவரை மதித்து, அவர் குறையைத் தீர்க்காத பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் புலவர் மனம் நொந்துபாடிய பாடலாக இது அமைந்துள்ளது. அறத்தோடு அரசாட்சி எவ்வாறு நடக்க வேண்டும்? இரவலர் பால் அரசனின் கருணை எவ்வாறு காட்டப்பட வேண்டும்? என்பன போன்ற அறக்கருத்துக்கள் இங்கு முதன்மை பெற்றுள்ளன. இருப்பினும், 'நீயும் நின் புதல்வர்களும் நீண்டநாள் வாழ்வீராக!' என வாழ்த்துவதன் மூலம், துன்பம் செய்தவரிடத்தும் அறத்தினை வெளிப் படுத்தும் பண்பைப் புலவரிடம் காண முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வழிநடந் தன்னவா அய்ச்செலல் இவுளியொடு
கொடிநுடங்கு மிசைய தேரினர் எனாஅக்,
கடல்கண் டன்ன ஒண்படைத் தானையொடு
மலைமாறு மலைக்குங் களிற்றினர் எனாஅ,
உரும்உடன் றன்ன உட்குவரு முரசமொடு"

எனத் தொடங்கும் புறநானூற்றின் 197 ஆவது பாடலை, கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியுள்ளார். செல்வத்தால் மிகுந்த பேரரசர்கள் ஆயினும், இரவலர்களை மதிக்காதோரை நாமும் மதிப்ப தில்லை. வரகரிசிச் சோறு உண்ணத்தந்து, எமக்கு உதவும் சிற்றூர் வேந்தராயினும், அவர் எம்மிடத்துச் செய்யும் முறைமையை அறிந்து, அவரை நாம் பாராட்டுவோம். அறிவிலார் செல்வம் இரவலர்க்குப் பயன்படாது. ஆதலால் எவ்வளவு வறுமை ஏற்படினும் அதனை நினையோம். ஆனால் நல்லறிவுடையோர் எமது உணர்வை அறிந்து சிறிதளவேனும் உதவுவாராயின், அதனைப் பெரிதாக எண்ணிஅவர் வாழ நாமும் வாழ்த்துவோம் என்கிறது இப்பாடல்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக்
கொள்வார் பயன்தெரி வார்" (குறள்: 104)

என்ற திருக்குறள் இங்கு பொருத்தமாக அமைகின்றது. ஆகவே இப்பாடலின் அடிப்படையாக அமைந்த அறக்கருத்தானது, இரவலரின் துன்பத்தைத் தீர்க்கும் உணர்வு எவரிடம் இருக்கிறதோ, அவரே பாராட்டுக்குரியவர் என்பதும், புரவலரிடம் இருக்கும் செல்வத்தின் அளவைப் பொறுத்து அது அமைந்து விடுவதில்லை என்பதும் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கொடுக்கும் மனம் இங்கு எவரிடம் இருக்கிறதோ அவரே புகழுக்குரியவர் ஆவார். அவரையே இரவலரும் புகழ்ந்து பாடுவார் என்ற பல செய்திகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல் காட்டுகின்றது. உலக நீதி தழுவிய கருத்துக்களை இப்பாடல் தந்துள்ளது எனலாம்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

(புறம்: 312)

பொன்முடியார் பாடிய பாடல் இதுவாகும். தாய், தந்தை, மகன், கொல்லன், அரசன் ஆகியோர் ஆற்றவேண்டிய கடமைகளைவகுத்துக்கூறுவதாகஇப்பாடல் அமைந்துள்ளது. இங்கே கூறப்பட்ட கடமைகளே சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பகுதியினருக்கும் உகந்த அறமாகவும், கருதப்படக் கூடியன. மகனைப் பெற்றுத் தருவது தாயின் கடமையாகவும். அவனைக் கல்வியறிவு, ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்த சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனாகவும், வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடமையாகவும், நல்ல முறையில் போர்ப்பயிற்சி அளித்து அவனைப் போர்செய்யத் தகுதியுடையவனாக்குதல் வேந்தனின் கடமையாகவும் எடுத்துக்கூறுகிறது இப்பாடல். மற்றவர்கள் இப்பணிகளைச் செய்யும்போது, அந்த மகனாகிய காளைக்குக் கடமையாக அமைவது பற்றியும் புலவர் கூறத்தவறவில்லை. ஒளிருகின்ற வாளினைச் சுழற்றிக்கொண்டே போர்க் களத்தில் அஞ்சாமல் நின்று, பகைவென்று மீண்டு வருதலே காளைக்குக் கடனாகும் என்கிறது. இவற்றின்மூலம் ஒவ்வொருவருக்கும் உரிய பிரதானமான வாழ்க்கை அறத்தைப் பொன்முடியார் வலியுறுத்தியுள்ளார் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பெருஞ்சோழன் பாடிய பொருண்மொழிக் காஞ்சிப் பாடலொன்று (புறம்: 214), உயிருக்கு உறுதி தருவனவாகிய, உண்மை நெறிகளின்பால் செல்லுதலைப் பற்றி வலியுறுத்திக் கூறுகின்றது.

"செய்குவம் கொல்லோ நல்வினை! எனவே
ஐயம் அறாஅர், கசடுஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவுஇல் லோரே;
யானை வேட்டுவன் யானையும் பெறுமே;
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே;
அதனால் உயர்ந்த தேட்டத்து உயர்ந்திசினோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்,
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்;
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்,
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்,
மாறிப் பிறவார் ஆயினும், இமயத்துச்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்,
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே"
(புறம்: 214)

தெளிவில்லாத உள்ளத்தினர், நம்மாலும் நல்வினை செய்யக்கூடுமோ என ஐயங்கொண்டு அதனின் நின்றும் நீங்க வகையின்றி துணிவற்றவராக மயங்குவர். யானை வேட்டைக்குப் போகும் உள்ளத்து வலிமையுடையவன், யானையை எளிதாக வென்று வருவான். குறும்பூழ் (காடை) வேட்டைக்குப் போகக் கருதியவனோ, அது எளிதே எனினும் ஏதும் கிடைக்காமல் திரும்புதலுங்கூடும். ஆதலால் உயர்ந்த குறிக்கோளுடன் கூடியவராக விளங்குக! சுவர்க்கபோகம் உண்டென்றால், அவர்க்கு அதுவே நிச்சயமாகக் கிடைக்கும். இல்லையென்றால் மாறிமாறிப் பிறக்கும் பிறப்பாவது இல்லாமல்போகும். பல பிறவிகளும் இல்லையென்று சொல்வாராயின், இவ்வுலகில் இமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற உயர் புகழாவது நிலைநிற்கும். எனவே எவ்விதத்திலும் நல்வினைகள் செய்வதே நன்று. இவ்வாறு அறக்கருத்துக்களை உள்ளடக்கித் தனது வாழ்வியல் அனுபவத்தையும்சேர்த்துக்கோப்பெருஞ்சோழன்பாடியுள்ளார்.

குடிமக்களைப் பாதுகாத்தல், இரவலர்க்கு உதவுதல், சுற்றம் காத்தல், புலவரைப் போற்றுதல் ஆகியவை மன்னனின் முதன்மையான கடமைகள் என்பதை வலியுறுத்தும் செய்யுள் ஒன்று, புறநானூற்றின் 72ஆவது பாடலாக அமைந்துள்ளது. பாண்டியன் தலையானங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் பாடிய காஞ்சித்திணைச் செய்யுள் இதுவாகும். இவன் இளையவன், யாமோ பெரும் படை உடையவர்கள் எனக் கேவலமான வார்த்தைகளைக் கூறிக்கொண்டு, என்னுடன் போரிட வருகின்றார்கள் பகைவர்கள். இவர் களைச் சிதறி ஓடுமாறு போரிட்டு, இவர்தம் முரசையும் கைப்பற்றுவேன். அப்படிச் செய்யாவிடின், கொடிய வனெனக் கண்ணீர் பெருக்கிக் குடிமக்கள் பழிதூற்றும் கொடுங்கோலன் என என்னை இகழ்வாராக! மாங்குடி மருதன் முதலாகப் போற்றுகின்ற பெரும் புலவர்கள் பலரும் என்னைப் பாடாது, என் நாட்டை விட்டு நீங்கிச் செல்வாராக! எனது சுற்றம் துயர் மிக்கதாகுக! இரப்பவர்களுக்குக் கொடுக்க இயலாத வறுமை மிக்கவனாக யான் ஆகுக! இவ்வாறு வஞ்சினம் கூறிப்போருக்கெழுந்த நெடுஞ் செழியனின் வஞ்சினக் காஞ்சித் துறைப்பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது.

"நகுதக் கனரே, நாடுமீக் கூறுநர்,
இளையவன் இவன்என உளையக் கூறிப்,
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும், தேரும், மாவும்,
படைஅமை மறவரும், உடையம்யாம், என்று
உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சமஞ் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்குஅகப் படேஎன் ஆயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்,
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக,
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக,என் நிலவரை,
புரப்போர் புன்கண் கூர,
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே."
(புறம்: 72)

தன்னிகரில்லாத் தலைவனாகிய பாண்டியன் நெடுஞ் செழியன், தனது வீரத்தின் மீதும், போர் வெற்றியின் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையை இப்பாடல் வெளிப்படுத் துவதுடன், மன்னர் ஒருவன் மக்களுக்காக ஆற்ற வேண்டிய முதனிலை அறக்கடமைகள் பற்றியும் இப்பாடல் வலியுறு த்துகின்றது எனலாம்.

### 1.4.12. நட்புசார் அறம்

சோழன் நல்லுருத்திரன் பாடிய ஒருபாடல் (புறம்: 190), தனது முயற்சியால் அற வழியில் பொருளைப் பெற்று உண்ணுவதே சிறந்தது என்ற கருத்தை உணர்த்துகின்றது. அத்துடன்வலிமையுடையோரின்நட்பைப்பேணுதல்வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது. சிறிய விளை வயலைக் கண்டாலும், அங்குள்ள நெற்கதிர்களைத் தேடிச்சென்று தனது வளைக்குள் நிறைத்து வைக்கும் எலி போன்ற தன்மை யுடையோர், தம்மிடம் சேரும் செல்வத்தினையும் பதுக்கி வைப்பவர்கள். இத்தகை யோருடைய நட்பை விட்டொழித்திட வேண்டும். ஆனால் காட்டுப் புலியானது, தனது இடப் பக்கத்திலே இறந்து கிடக்கும் காட்டுப்பன்றியை உண்ண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பாது, பெரிய களிற்றினைத் தனது வலப் பக்கத்தே வீழ்த்தி உண்பதையே விரும்பும். அவ்வாறு வீரமுடையவர்களின் நட்பைப் பொருந்தி நடக்க வேண்டும் எனக்கூறும் இப்பாடல் மூலம், சுயநலம் மிக்க வீரமில்லாத நட்பைவிட வீரமுடைய நட்பு தன்மானத்துடன் திகழுமானால் அது போற்றப்பட வேண்டியது என்ற கருத்து "விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்.." (புறம்: 190) எனத்தொடங்கும் பாடல்மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

புறநானூற்றுப் பெண்பாற் புலவர்களில் மிக அதிகமான பாடல்களைப் பாடியவர் ஒளவையார். இவர் அதியமான் நெடுமான் அஞ்சியோடு நட்புப்பூண்டு ஒழுகி யவர். பலகாலம் அவனுடைய அரசபையில் வாழ்ந் திருந்தவர். அவனையும், பிறரையும் பாடியவர். அக்காலத்துப் புலவர்கள், அரசர்கள் மத்தியில் பெரும் புகழ் பெற்றிருந்தவர். இவருக்கும் அதியமானுக்கும் உள்ள நெருக்கம், இவரது பல பாடல்களில் வெளிப்பட்டுள்ளது. அவனுக்கும், ஏனைய வர்களுக்குமிடையிலே போர் நடைபெறவிருந்த வேளை களில் இருபக்கமும் பேசிச் சமாதானத்தையும் செய்து வைத்தவர்.

"களம்புகல் ஓம்புமின் தெவ்விர்! போர்எதிர்ந்து,
எம்முளும் உளன்ஒரு பொருநன், வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்அன் னோனே!"

(புறம்: 87)

பகைவர்களே! போர்க்களம் சேர்வதைப் போற்றுங் கள். எதிர்த்துப் போரிடும் வல்லமை உடையவன் எம்முள்ளும் ஒருவன் இருக்கின்றான். நாள் ஒன்றுக்கு எட்டுத் தேர் செய்யும் தச்சன், ஒரு மாதம் முழுவதும் கூடிச்செய்த தேர்க்காலைப் போன்ற அழகும் வலிமையும் உடையவன் அவன். இவ்வாறு தம் நட்புக்குரிய அதியமான் நெடுமானஞ்சியைப் போற்றி யுள்ளார் ஒளவையார். அவனது போர்த்திறத்தினை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்மையை, வீரத்தை, தோள் வலிமையினைப் புறநானூ ற்றின் 87 – 104 வரையுள்ள பாடல்களில் சிறப்பாகத் தந்துள்ளார். யானைக் கொம்பினிடையே வைக்கப்பட்ட கவளம், ஒருநாளும் தவறாதது போல, அதியமான் தரும் பரிசில் புலவர்களாகிய இரவலக்கு ஒருநாளும் தப்பாது. நிச்சயமாகக் கிடைத்தே தீரும் என்பதை "யானைதன் கோட்டிடை வைத்த கவளம்போலக் கையகத்தது அது பொய்யாகாதே!" (புறம்: 101) என்னும் அடிகள்மூலம் குறிப்பிட்டுள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில், "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே!" (புறம்: 206) என்று அதியமானுக்கு இடித்துரைத்தவர் ஔவையார். தனது நண்பனாகிய அதியமான் இறந்தபின் அவனது உடலை எரியூட்டக்கண்ட ஔவையார், மனங் கசிந்துருகிப் பாடிய பாடலாக புறநானூற்றின் 231ஆம் பாடல் காணப்படுகின்றது.

" எரிபுனக் குறவன் குறையல் அன்ன
கரிபுற விறகின் ஈமஒள் அழல்,
குறுகினும் குறுகுக; குறுகாது சென்று,
விசும்பஉற நீளினும் நீள்க; பசுங்கதிர்த்
திங்கள் அன்ன வெண்குடை
ஒண்ஞாயிறு அன்னோன் புகழ் மாயலவே!"
(புறம்: 231)

எரியூட்டப்பட்ட தினைக்கொல்லையிலே குறவன் தறித்த துண்டம்போன்று, கரிப்புறத்தை உடைய விறகுகளை அடுக்கி, ஈமத்தீயிலே அஞ்சியின் உடல் உள்ளது. இனி அந்த ஈமத்தீயானது, அவனது உடலை சிறுக்கினும் சிறுக்குக! அல்லது சிறிதாகாது வானளாவிச் சென்று நீண்டாலும் நீள்க! திங்கள் போன்ற வெண்கொற்றக் குடையை உடைய ஞாயிறுபோன்ற அஞ்சியின் புகழோ, என்றும் அழியாதது என்பது இப்பாடலின் பொருளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அடுத்து வரும் புறம் 232ஆம் பாடலில், அஞ்சியின் வள்ளன்மைப் பண்பைக் கூறிய ஔவையார், அவன் இறந்தபின் அவனுக்காக நடுகல் நாட்டி, மயிற்பீலி சூட்டி, மதுவைப்படைத்து வைக்கின்றார்களே, அதனை அவன் எற்றுக்கொள்வானோ? என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். அவன் மறைந்தான், காலையும், மாலையும் இல்லாதாகுக! எனது வாழ்நாட்களும் இல்லாது மறைவதாகுக! என்று கூறி வருந்துவதை இச்செய்யுளில் காணமுடிகின்றது. மேலும், உணவிருந்தால் அதனைத் தன்னிடம் வருபவர்க்கு உவப்போடு கொடுத்து உண்ணவும் வல்லவன். வேண்டாதாராயினும், அறியாமை உடையோராயினும், இரவலராகவரின் அவர் களுக்கும் ஈந்து, அவர்கள் மகிழ, அவர்களுக்குத் துணையாக விளங்குபவன் அதியமான் நெடுமான் அஞ்சி என, புறம் 315ஆம் பாடலில் பாடியுள்ளார். அத்துடன், புறம் 390, 392 ஆம் பாடல்களிலும் அதியமானின் கொடை, போர்த்திறம் ஆகியவற்றை ஔவையார் போற்றத் தவறவில்லை. இப்பாடல்களினூடாக அதியமானுக்கும் ஔவையாருக்கும் இடையிலான நெருங்கிய நட்பினைப் புரிந்து கொள்ள முடிகின்றது. அதியமானின் போர் வல்லமை யையும், கொடைப் பெருமையையும் விருந்தோம்பல் சிறப்பையும், அவனை இழந்துவிட்ட துயரத்தையும் ஔவையாரின் பாடல்களில் கண்டு மனமுருக முடிகின்றது.

புறநானூற்றுப் பாடலாசிரியர்களில் நட்புக்கு இலக் கணம் வகுத்த இன்னொருவர் கபிலர். பறம்பு நாட்டின் குறுநில மன்னனாகவும், கடையெழு வள்ளல்களில் ஒருவராக விளங்கிய பாரிக்கும் இவருக்குமிடையிலான நட்பு ஆத்மார்த் தமானது. பொதுவாக அறம் சார்ந்த நிலைப்பாடுகளில் தூய நட்பும் ஒருவகையானது. நண்பனுக் காக உதவுதல், நண்பனை நல்வழியில் ஆற்றுப்படுத்தல், நண்பனின் துன்பங்களில் பங்கெடுத்துக்கொள்ளல், உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைதல் முதலானவை இவற்றில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரி, கொழுகொம்பு இன்றி வாடிக்கிடந்த முல்லைக் கொடிக்கு, அது பற்றிப்படர தனது தேரை ஈந்ததன் காரணமாக, வரலாற்றில் வள்ளன்மையின் பெருமைக்குச் சான்றாக விளங்கியவன். அவனது அங்கவை, சங்கவை ஆகிய இரு மகள்மாரையும் மூவேந்தர்கள் பெண் கேட்ட போது, தர மறுத்ததால், அவர்கள் சினங்கொண்டு பாரியின் மீது போர் தொடுத்தனர். அப்போது பறம்பு மலை அழிக்கப் பட்டது. பாரியும் கொல்லப்பட்டான். பாரி மகளிர் ஆதர வற்றவர்கள் ஆனார்கள். அத்துயர் நிறைந்த வேளையில் பாரியின் உயிர் நண்பரான கபிலர், பாரி மகளிரை அழைத்துச் சென்றுஔவையாரிடம்பாதுகாக்குமாறுஒப்படைத்தாகவும், ஔவையார் பனம்பழ விருந்துடன் அவர்கள் இருவரையும் திருக்கோவிலூர் மன்னனுக்கு மணமுடித்து வைத்தாகவும் கூறப்படும் கதைகள் இருக்கின்றன. நண்பனின் மறைவால் துயருற்ற கபிலர், தானும் வடக்கிருந்து உயிர் துறந்தார் எனக்கூறப்படுகின்றது. பாரிக்கும், கபிலருக்கும் இடையேயான உன்னதமான நட்பின் பெருமையைப் புறநானூற்றில் கபிலர் பாடிய 20க்கும் மேற்பட்ட பாடல்களால் அறிய முடிகின்றது. பாரியின் வள்ளன்மை, விருந்தோம்பல், போர் வலிமை, இன்முகம் காட்டி உபசரித்தல், குடிமக்களை அன்போடு பாதுகாத்தல் முதலான பல குணாம்சங்களையும் கபிலர் நெஞ்சுருகப் பாடியுள்ளார். தனக்கும், அவனுக்குமிடையிலான நட்பின் வலிமையை, 'தானும் பாரியின் பொருள்களில் ஒன்று' என்ற விதத்தில் கூறிக் கையறுநிலையில் பாடியுள்ளார்.

விறலியே! சுனையிலே மலர்ந்த நீல மலரின் தேனானது, மழை பெய்யாத காலத்திலும் அருவியாய் வழிந்து கொள்ளிற்காக உழுத நிலத்தினூடாகப் பாய்காலாக ஓடும். அதனிலும் மலை உச்சியிலிருந்து வழியும் அருவி நீரிலும் பார்க்க இனிய பண்பினன் வேள்பாரி. அவனைப் பாடிச்சென்றால் சிறந்த பல சிறப்பான அணிகலங்களை நீ பெறுவாய் என்றவாறு கூறும் பாடலொன்று அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேயிழை பெறுகுவை, வாள்நுதல் விறலி!
தடவுவாய்க் கலித்த மாஇதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும், பெய்யா தாயினும், அருவி
கொள்ளுழு வியன்புலத்து உழைகால் ஆக,
மால்புஉடை நெடுவரைக் கோடுதோறு இழிதரும்
நீரினும் இனிய சாயல்
பாரி வேள்பால் பாடினை செலினே."

*(புறம்: 105)*

*இதே போன்று, பாரியின் கை வண்மையைக் கூறும் பாடலில் (புறம்: 106), நல்லதாயினும், தீயதாயினும் அல்லாத குவிந்த பூங்கொத்தும், புல்லிய இலையுமுடைய எருக்கம் பூவாயினும், ஒருவன் உள்ளன்புடன் சூட்டினால் அவற்றினைத் தெய்வங்கள் ஏற்குமே அன்றி விரும்போம் என்று கூறா. அதுபோல அறிவில்லாதாரும், புல்லிய குணத்தாரும் தாம் அறிந்த விதத்தில் பாடிப் புகழ்ந்து சென்றாலும், பாரி அவர்க்கும் உவந்துகொடை வழங்குவதே தனது கடமை என நினைக்கும் பெருவண்மை உடையவன் எனக் கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் புறம் 107ஆம் பாடலில், பாரியை இகழ்வதுபோலப் புகழ்ந்துள்ளார் கபிலர்.*

"பாரிபாரி என்று பல ஏத்தி,
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியுமுண்டு ஈண்டு உலகு புரப்பதுவே"

*(புறம்: 107)*

*இந்த நாலடியால் ஆன அகவல் பாவானது, செந்நாப் புலவர்கள் எல்லோரும், பாரிபாரி என்று அவனையே புகழுகின்றார்களே, பாரி ஒருவன் அல்லனே! உலகங்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பதற்கு இங்கு மாரியும் உள்ளதன்றோ! என்கிறது இப்பாடல். புறம் 108ஆம் பாடல், "குறத்தி மாட்டிய வறற் கடைக்கொள்ளி.." எனத் தொடங்குகின்றது. குறத்தி யானவள் சந்தனக் கட்டையை அடுப்பில் வைத்து எரிக்கும்போது, அதன் நறும்புகை வேங்கைப் பூங்கொத்தினூடும் சென்று பரவி நிற்கும். அத்தகைய மலைச்சாரலினை உடைய பறம்பு நாட்டைப் பாடுவோர்க் கெல்லாம், பங்கிட்டுக் கொடுத்த பொருளாளன் பாரி. பரிசிலர் இரந்தால் 'வாரேன்' என்று சொல்லாது, அப்போதே உடைமையாகி விடுபவன் அவன் என்கிறது பாடல். "அளிதோ தானே, பாரியது பறம்பே!" எனத் தொடங்கும் 109ஆம் பாடல், பாரியின் பறம்பு நாட்டின் இயற்கை வளத்தைப் புகழ்ந்து கூறுகிறது. பாரியை வெல்ல மூவேந்தர்களாகிய உம்மால் முடியாது. வாளால் போரிட்டு அவனை வெல்ல முடியாது. அவனது நாட்டைப் பெறுவது எவ்வாறெனில், பாடிப் பரிசில் பெறும் பரிசிலர்போல யாழிசையுடன்விறலியர்சூழ, ஆடிப்பாடிநீங்கள்சென்றீரானால், அவன் நாட்டையும், மலையையும் ஒருசேர நுமக்குப் பரிசிலாக வழங்கிவிடுவான். இதுவே உங்களுக்குரிய சிறந்த வழியாகும் என மூவேந்தரை நோக்கிக் கபிலர் பாடியது இப்பாடலாகும். இதன்மூலம் பறம்பு நாட்டின் வளம், பாரியின் போர்த்திறம், அவனது வள்ளன்மை உயர்ச்சி ஆகியன கபிலரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பாரி இறந்தபோது கபிலரால் தாங்கமுடியவில்லை.

> "கடந்து அடுதானை மூவிரும் கூடி
> உடன்றனிர் ஆயினும், பறம்புகொளற்கு அரிதே
> முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நல்நாடு,
> முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்,
> யாமும் பாரியும் உளமே;
> குன்றும் உண்டு; நீர்பாடினிர் செலினே" (புறம்: 110)

நீவிர் மூவரும் (மூவேந்தர்களும்) வஞ்சனையால் அல்லாது, எதிர்த்து நின்று பகவரை வெல்லக்கூடிய பெரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை உடையவர்கள்தான். ஆனால் பறம்பினை வெல்ல உம்மால் முடியாது. முந்நூறு ஊர்களை உடைய இந்நாட்டின் ஒவ்வொரு ஊரையும் பரிசிலர் பெற்றுச் சென்றுவிட்டனர். நீவிரும் பாடி வந்தால் யானும் பாரியும் உள்ளோம். அவனுடைய மலையும் இருக்கிறது. இவ்வாறு பாடலில் கூறப்பட்டுள்ளது. இதில் கபிலர் தன்னையும், பாரியின் செல்வமாகக் கூறுகிறார். இப்பண்பு அவரின் உயர்ந்த உள்ளத்தினைக் காட்டுகின்றது. இது பாரியுடனான நட்பின் பெருமையைப் பறைசாற்றுகின்றது. புறம் 111ஆம் பாடல், நாலடிகளால் ஆனது.

"அளிதோ தானே, பேரிருங் குன்றே!
வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே;
நீலத்து, இணைமலர் புரையும் உண்கண்
கிணைமகட்கு எளிதால், பாடினள் வரினே."

*(புறம்: 111)*

பெரிய கரிய குன்றமான இப்பறம்பு மலை வெல்வதற்கு எளிதோ? படையெடுத்துவந்தாலும் பறம்பு நாட்டை வெல்ல முடியாது. விறலியோடு பாடி வந்து இரந்து கேட்டால் அதனை அடைவது எளிது என்ற கருத்தை இப்பாடல் உணர்த்துகின்றது.

"மட்டுவாய் திறப்பவும், மைவிடை வீழ்ப்பவும்,
அட்டுஆன்று ஆனாக்கொழுந் துவைஊன் சோறும்
பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி,
நட்டனை மன்னோ, முன்னே; இனியே,
பாரி மாய்ந்தெனக், கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும்; வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே!
கோல்திரள் முன்கைக் குநற்றொடி மகளிர்
நாறுஇருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே"

*(புறம்: 113)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறம்பே, முன்னர் இருந்த உன் வளம் எத்தகையது? நின்னை நாடி வரும் இரவலர்க்கு மதுவும், ஆட்டுக்கிடாவை வெட்டிச்சமைத்த இறைச்சியும், சோறும் அளிப்பார்கள். அத்தகைய வளத்துடன் எமக்கு நட்புடைமையாக அன்று விளங்கினாய். இன்றோ, பாரி இறந்தனன். அவன்மகள்மாருக்குரிய கணவர்களைத் தேடி நான் எங்கோ செல்லுகின்றேன். பெருமை பெற்ற பறம்பே! கலக்கத்துடன் செயலிழந்தவனாகக் கண்ணீர் சோர உன்னைத் தொழுது வாழ்த்திச் செல்லுகின்றேன். இவ்வாறு கையறுநிலையில் பறம்பு மலையைப் பிரிந்து செல்லும் கபிலரின் துயரம், துன்பியல் இராகமாகக் கேட்கிறது.

அதேபோன்று பாரி மகளிர் நிலைக்கு வருந்தி, பறம்பு நாட்டைக் கடந்து செல்லும்போது, இரவலர்க்குச் சிறுதேர்களை வழங்கிச் சிறப்பித்த பாரியின் செயலை நினைவு கூர்ந்து, "ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும், சிறுவரை.." எனத்தொடங்கும் புறம் 114ஆம் பாடலைப் பாடியுள்ளார். தனது கண்பார்வையில் நின்றும், இயற்கை வளமும், போர் வளமும், கொடை வளமும், பாரியின் நட்பும் சிறந்து விளங்கிய பறம்பு நாடு கழிந்து போகின்றது என்ற கவலையில் பாடிய பாடலாகப் புறம் 115ஆம் பாடல் அமைந்துள்ளது. பாரி மகளிருக்காகக் கபிலர் அடையும் வருத்தத்தினைப் புறம் 116ஆம் பாடலும், பறம்பு மலையின் பிரிவினை 117, 118ஆம் பாடல்களும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

"கார்ப்பெயல் தலைஇய காண்பு இன்காலைக்
களிற்றுமுக வரியின் தெறுழ்வீ பூப்பச்
செம்புற்று ஈயலின் இன்அளைப் புளித்து;
மென்திணை யாணர்த்து; நந்துங் கொல்லோ;
நிழலில் நீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை இறந்தும்
இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் நாடே!"

(புறம்: 119)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரியின் மறைவுக்கு இரங்கி நெஞ்சழிந்து பாடிய பாடல் இதுவாகும். நிழலற்ற நெடிய வழியில், தனிமரம் போலநின்று, வேந்தரினும் மிகுதியாக வழங்கும் வள்ளன்மை யுடைய பாரியின் இந்நாடு, அவனை இழந்துவிட்ட காரணத்தால், இனி அழிந்தேதான் போய் விடுமோ? என்று பாடுவது அவர்களுக்கிடையேயான கேண்மையைக் காட்டு கின்றது. அத்துடன் பாரியின் சிறப்பையும், பறம்பு நாட்டின் வளத்தையும் எண்ணி வருத்தமுறும் 120 ஆவது பாடலும் குறிப்பிடத்தக்கதாகும். புறம் 337, 347 ஆகிய பாடல்களில், மூவேந்தர்கள் பெண் கேட்டபோது, அதனை ஏற்க மறுத்துத் தம்மகள்மாருக்குத் தகுந்த மணவாளனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட பாரியின் செயலை நினைவுகூர்ந்துள்ளார் கபிலர். தனது உயிருக்குயிரான நட்புக்குகந்த பாரி மன்னன் மீது கபிலர் காட்டிய பேரன்பு, அவர் பாடிய புறநானூற்றுப் பாடல்களால் விளங்குகின்றன. பாரியின் பிரிவு ஏற்படுத்திய வேதனை, வடக்கிருந்து உயிர்துறக்கும் நிலைக்கு அவரைத் தள்ளியது. "இடுக்கண் களைவதாம் நட்பு" (குறள்: 788) என்று திருக்குறள் காட்டும் நிலையிலும் பார்க்க, நட்பிற்காக உயிரை விட்ட கபிலரின் செயல் உன்னதமானதாகும். அறம் சார்ந்த நிலைப்பாடுகளில் நட்பும் ஒன்றாகக் கருதப் படக்கூடியது. கூடா நட்பை விலக்கி, ஒழுக்கத்துடனான உயரிய நட்பைப் பேணுதல் அறநெறியின்பாற்பட்டது. ஔவையார் – அதியமான், கபிலர் – வேள்பாரி ஆகியோரை நட்புக்கு இலக்கணமாகப் புறநானூறு படம்பிடித்துக் காட்டியுள்ளது.

இதேபோன்று, முகமறியாமலேயே நட்புக்கொண்டு பழகிய கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார் நட்பும் புறநானூற்றில் காணக்கிடைக்கின்றது. தனது மகன்மாருடன் மாறுபட்டு வடக்கிருந்து உயிர்துறக்கக் கோப்பெருஞ் சோழன் எண்ணிய வேளையில், தான் இறப்பதற்கு முன்னர், கட்டாயம் பிசிராந்தையார் தன்னைக் காண வருவார் என்ற நம்பிக்கையை அவன் கூறிவெளிப்படுத்தியிருந்தான். அதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று சோழன் உயிர் துறக்கும் தறுவாயில் புலவரும் வந்து சேர்ந்தார். அவனது பிரிவு தாங்காமல், அவரும் வடக்கிருந்து உயிர் துறந்ததாக வரலாறு கூறுகிறது. புறநானூற்றில் பிசிராந்தையார் பாடிய 4 பாடல்களில், 212ஆம் பாடல் மட்டும் கோப்பெருஞ்சோழனைப் பாடிய தாகும்.

"நுங்கோ யார்?' எனவினவின், எங்கோக்
களமர்க்கு அரித்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கின் காமம் வீடஆரா,
ஆரற் கொழுஞ்சூடு அங்கவுள் அடாஅ,
வைகுதொழின் மடியும் மடியா விழவின்
யாணர் நல்நாட் டுள்ளும், பாணர்
பைதல் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்,
கோழி யோனே, கோப்பெருஞ் சோழன்
பொத்தில் நண்பின் பொத்தியொடு கெழீஇ,
வாயார் பெருநகை வைகலும் நமக்கே."

(புறம்: 212)

கோப்பெருஞ்சோழனின் நல்லியல்பைச் சிறப்பித்துப் பாடிய இச்செய்யுளில், அவன் பொத்தியாரோடு நட்புக் கொண்டு விளங்கும் மாண்பையும் சேர்த்துக் கூறியுள்ளார் புலவர். குற்றமற்ற நட்புடையவனாகப் பொத்தி என்னும் புலவரோடு நாள்தோறும் பேசி மகிழ்ந்து வாழ்பவன். உறையூர் என்னும் பகைவீட்டுக்குப் பசிதீர்க்கும்படி, பாடி வரும் பாணரின் சுற்றத்திற்குக் கொடை வழங்கி உதவுபவன். மதுவை ஆமை இறைச்சியுடன் ஆசை தீர உண்பதுடன், ஆரல் மீனின் கொழுப்புக் கறியைக் கன்னம் புடைக்க உட்கொண்டு, தம் தொழிலையும் மறந்து திரியும் உழவர் மலிந்த வளம்மிக்க சோழநாட்டு மன்னவனாக விளங் குபவன். அவனே கோப்பெருஞ்சோழன். அவனே என் கோமான். இவ்வாறு மேலே உள்ள பாடலின் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. மன்னனின் புகழை, புலவர்களுடன் அவன் பேணிய நட்பை, நாட்டு மக்கள் குறையின்றி மகிழ்ச்சியாக வாழ்வதை, இரவலர்க்கு இன்னமுது அளித்துக் கொடை செய்வதை, தனக்கும் தலைவனாக விளங்கி அருள் செய்வதைப் பிசிராந்தையார் இப்பாடலின் மூலம் தெளிவாக்கியுள்ளார்.

கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இடையேயான முகமறியாத நட்பின் ஆழத்தை வெளிப்படுத்தும் பாடலொன்று, (புறம்: 215) கோப்பெருஞ்சோழன் பாடியதாக அமைந்துள்ளது. இவன் தனது புதல்வர்களுடன் முரண்பட்டுக்கொண்டு, வடக்கிருந்து உயர் துறக்க ஆயத்தமானான். அந்த நிலையிலும் தன்னைக்காணப் பிசிராந்தையார் வருவார் என்று நம்பிக்கையுடன் கூறினான். அவர் பாண்டிய நாட்டிலிருந்து வருவது கடினம்; வரமாட்டார் என்றனர் சான்றோர் சிலர். அவர்களுக்குப் பதிலாக அரசன் கூறியதாக அமைந்தது இப்பாடலாகும். "செல்வக் காலை நிற்பினும், அல்லற் காலை நில்லலன் மன்னே.." என்று பிசிராந்தையாரின் நெருங்கிய நட்பைச் சோழன் இதில் எடுத்துக்கூறியுள்ளான். வரகரிசிச் சோற்றையும், அதனோடு வேளையினது பூவையும், வெண் தயிரில் கலந்து சமைத்த புளித்த கூழையும் அவரை கொய்பவர் நிறைய உண்ணுகின்ற தென்பொதிய மலையிலே, அம்மலைக்குரிய பாண்டியனின் நாட்டிலே, என்னையே நினைத்துக் கொண்டி ருப்பவனாகிய பிசிராந்தையன் என்பவன் உள்ளான். என் உயிரைத் தன்னுயிராக எண்ணிப் பேணும் கலந்த நட்பினன் அவன். செல்வம் உள்ளபோது அவன் வாராதிருந்தாலும், என்னுயிர்க்குத் துன்பம் நேருகின்ற இந்நிலையில், இங்கு வராமல் அவன் நிற்க மாட்டான். இதனைச் சான்றோரே அறிவீராக! என்ற பொருள் தரும் பாடல், ஒரு அரசனுக்கும், புலவனுக்கும் இடையேயான பெருநட்பின் உன்னதத்தைக் காட்டியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலைக்கதிர் வரகின் அலைப்புறு வாக்கில்
தாதெரு மறுகின் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ,
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை
அவரை கொய்யுநர் ஆர மாந்தும்
தென்னம் பொருப்பன் நன்னாட்டு உள்ளும்
பிசிரோன் என்ப,என் உயிர்ஓம் புநனே;
செல்வக் காலை நிற்பினும்,
அல்லற் காலை நில்லலன் மன்னே."

*(புறம்: 215)*

மன்னன் கருதியது போன்றே அவன் உயிர் பிரியும் தறுவாயில், எதிர் பாராத விதமாகப் பிசிராந்தையாரும் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார். பின்னர் தனது நண்பன் இறந்துவிட்ட துயரம் தாளாது, புலவரும் வடக்கிருந்து உயிர் துறந்ததாக வரலாறு கூறுகின்றது. புலவர் வடக்கிருந்த போது, கண்ணகனார் (நத்தத்தனார்) அதனைக் கண்டு, பாடிய பாடல் புறநானூற்றில் 218ஆம் பாடலாக அமைந் துள்ளது. பொன், பவளம், முத்து, மணி என்பன வேறுவேறு இடங்களிலே கிடைப்பனவாயினும், அவற்றை ஒன்றாகச் சேர்த்துக் கோவையாகத் தொடுக்கும்போது, சிறந்த அணி கலனாகின்றது. இதனைப் போலவே சான்றோர் பக்கம் சான்றோரும், சால்பில்லாதவர் பக்கம் சால்பில்லாதவரும் சேர்வர். இதுவே உலகத்தின் இயல்பு. அதனை நாம் இங்கு கண்டோம் என்கிறது "பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய" எனத்தொடங்கும் இப்புறப்பாடல்.

## 1.5. முடிவுரை

புறநானூற்றில் காணப்படும் அறம்சார்ந்த கருத்துக்களையும், செய்திகளையும் நோக்கும்போது, கொடையும் விருந்தோம்பலும், அன்பும் அருளும், உழவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில், போர், நீதி, மனைமாட்சி, கல்வி, மக்கட்பேறு, பிறர்நலம் பேணல், உலகப்பொதுமை, நிலையாமை, நட்பு முதலியன சார்ந்த அறங்கள் பற்றிப் புறநானூறு கூறியுள்ளதைக் கண்டோம். விழுமிய பயன்மிக்க கருத்துக்களைத் தந்ததுடன், சங்ககாலப் புலவர்களின் பொய்யடிமையில்லாத குரல்களையும் இதில் கேட்க முடிந்துள்ளது. மன்னர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் ஆகியோரும் அறம் சார்ந்த செய்யுள்களைத் தந்துள்ளனர். போர், வெற்றி முதலியவற்றை ஒரு பக்கமாகவும், கொடை, விருந்து, நட்பு, அறவுரை போன்றவற்றை இன்னொரு பக்கமாகவும் புறநானூற்றுப் பாடல்களில் பாகுபடுத்தி நோக்க முடிகிறது. ஒருகாலத் தமிழ்ச் சமுதாயத்தின் உயர்வையும் தாழ்வையும், ஒற்றுமையையும் ஒற்றுமையீன த்தையும், பலத்தையும் பலவீனத்தையும் புறநானூற்றுப் பாடல்கள் எமக்குக் காட்டியுள்ளன. போர் பற்றிய செய்திகளே அதில் முக்கிய இடம் பிடித்திருந்தாலும், அவற்றினூடு வெளிப்படுத்தப்படும் புறத்திணையின் ஏனைய அம்சங்கள் கவனிக்கத்தக்கவை. போர் செய்தலிலும் அறநெறி பேணப் பட்டுள்ளது. ஏனைய அம்சங்கள் யாவிலும் அறநெறிச் செல்வாக்கு மிகுந்து காணப்படுகின்றது.

புறநானூற்றுப் பாடல்களில் விருந்தோம்பல் சிறப்பினை நோக்குவோமாயின், தம்மை நாடிவந்த இரவலர்க்கு, மன்னர்களும் வள்ளல்களும் உணவளித்து அவர்களின் பசியை முதற்கண் போக்கியதை அறிய முடிகின்றது. பலவேளைகளில் மன்னர்களும் இரவலர் களுடன் சேர்ந்து உணவுண்டதை அறிய முடிகின்றது. தினையரிசிச் சோறு, வரகரிசிச் சோறு, நெல்லரிசிச் சோறு, நெய்ச்சோறு, இலையுணவு, ஆட்டிறைச்சிக்கறி, முயற்கறி, ஆமையிறைச்சி, ஆரல் மீன்கறி, மான் தசை, வெண்தயிர், பால், தேன், பசுநெய், கூழ், கள் முதலான உணவுவகைகள் பற்றியும் புறநானூற்றுச் செய்யுள்கள் நிறையவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியுள்ளன. தனிப் பண்டமாகவும், அவை சிலவுணவுகளுடன் சேர்த்துக்கலந்த பண்டமாகவும் உணவளிக்கப்பட்டுள்ளன. இறைச்சிச்சோறு, வேளைப்பூ தூவியசோறு, நெய்யிட்டசோறு முதலானவற்றை அடையாளங்காட்ட முடியும். இதேபோன்று புரவலர்கள், இரவலர்க்கு அளித்த கொடைகளில் யானை, குதிரை, தேர், ஊர், பொன்னணி என்றவாறு பலவற்றையும் காணமுடிகின்றது. இரவலரை, மன்னர்களும் வள்ளல்களும் எதிர்கொண்டு விருந்தோம்பிக் கொடையளித்த செய்திகள், புறநானூற்றில் நிறையவே உண்டு. ஓரிரு நாட்களல்ல, எவ்வேளையிற் சென்றாலும் பரிசில் அளிக்கப்பட்டது. இரப்பவர்களின் முகக்குறிப்பறிந்து அவர்கள் மனம்போல உதவிசெய்யப்பட்டது. பாணர்களையும் விறலியர்களையும் புலவர்கள், மன்னனிடம் ஆற்றுப்படுத்திய செய்திகளும் நிறையவே உண்டு. காலம், புள் ஆகியவற்றின் நிமித்தம் பாராமல், கொடை வழங்கப்பட்டது. பரிசிலர் திறனற்ற சொற்களைக் கையாண்டு பேசியிருந்தாலும், அவற்றைப் பொருட்படுத்தாமல் கொடை வழங்கப்பட்டது. சில வேளைகளில் மன்னன், தனது மனைவியின் மங்கல அணி தவிரத் தன்னிடம் இருந்த ஏனைய பொருள்கள் அத்தனையையும் பரிசிலர்க்கு வாரி வழங்கியுள்ளான். இரவலர் கேட்டதிலும் பார்க்க, மிகமிக அதிகமாகப் பொருட்களை வழங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு. கொடை வழங்கும்போது, அறியாமை மிக்கவன் போல விளங்கினாலும், போர் புரியும்போது அறிவுடன் நடந்துகொண்ட மன்னவர்களும் உளர். மறுமையை நோக்கியே அறச்செயலைப் புரியாமல் உண்மையாகவே கொடையளித்தவர்களும் அதிகம். புலவர்களின் வறிய நிலைமையை எடுத்துக்கூறித் தவறான எண்ணத்தில் கொலை செய்யப்படவிருந்த புலவனை விடுவித்த புலவர் பற்றிய செய்திகளும் உண்டு. புரவலர் ஈந்த கொடையின் மிகுதியாலும், மகிழ்ச்சியாலும் பண்ணிசைக்க மறந்த, ஆடல் - பாடல் செய்ய மறந்த கலைஞர்கள் பற்றிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளும் புறநானூற்றில் காணப்படுகின்றன. அந்தணர்க்கு அருங்கலம் முதலான கொடைகளை அளித்தமை பற்றியும் அறிய முடிகின்றது. தன்தலையையே இரவலர்க்குப் பரிசாகக் கொடுக்க முனைந்த குமண வள்ளலின் கதையும் குறிப்பிடத்தக்கது. கடையெழு வள்ளல்களின் நிகரற்ற ஈகைச்சிறப்பும் பலபாடல்களில் வெளிப்பட்டுள்ளது. மயிலுக்குப் போர்வை கொடுத்ததும், சிவனுக்கு ஆடை அணிகலன் அளித்ததும் இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதாகும். மனைவியைப் பிரிந்த குறுநில மன்னன், திரும்பவும் அவளுடன் சேர்ந்து வாழ்வதே தமக்குரிய மேலான கொடை எனக்கருதிய இரவலர்களின் உயர்ந்த மனப்பாங்கும் புறப்பாடல்களில் தெரிகிறது.

உயரிய நட்பும், உழவர்குடியின் மேன்மையும், உலகம் தழுவிய நோக்கும், அறச்செயற்பாடுகளும், மக்கட் செல்வத்தின் இன்றியமையாமையும், வாழ்க்கை இன்பங் களின் நிலையாமையும், அறவழியிலான ஆட்சி முறையும், புறநானூற்றுப் பாடல்களில் வெளிப்படும் அறம் சார்ந்த நிலைப்பாடுடைய பாடல்களால் அறிய முடிகின்றது. புறநானூறு என்னும் பண்டைத்தமிழ் இலக்கியமானது, தொன்மையான தமிழர் வாழ்வையும், தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களையும் வெளிப்படுத்தி உள்ளது. எந்தவொரு இலக்கியத்தின் கருத்துக்களும் நிலையாக நின்று நிலைப்பதில்லை. காலப்போக்கில் புதிய சூழ்நிலை களுக்குத் தக்கதாகப் படிப்படியாக மாற்றங்களை அடைந்து விடுகின்றன. ஆனாலும் அடிப்படை விழுமியங்கள் அறாத் தொடர்புடன் பேணப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத் தக்கது. அந்த வகையில் புறநானூறு கூறுகின்ற அறம் பற்றிய செய்திகளும், கருத்துக்களும் நறிய தேனாக விளங்கி, தமிழர் சமுதாயத்தின் பண்பாட்டுக்கருவூலமாகவும் திகழ்வதுடன், உலகம் முழுமைக்குமேற்ற உறுதிப் பொருள் களைத் தருவனவாகவும் காணப்படுவதில் வியப்பில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சமகாலத்தில் நவீன இலக்கியத் திறனாய்வுக் கோட்பாட்டாளர்கள், அறநெறி அணுகுமுறை பற்றிக் குறிப்பிட்டுள்ளனராயினும், இத்தகைய அணுகுமுறை தமிழில் இலக்கியம் தோன்றிய காலத்திலிருந்தே பேணப் பட்டது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது. சமுதாயவியல் அணுகுமுறையோடு தொடர்புடையதுதான் அறநெறி அணுகுமுறையுமாகும். ஒரு குறிப்பிட்ட சமுதாய மானது, தமக்கென ஏற்படுத்திக்கொண்ட ஒழுக்க நெறிகளின், விழுமியங்களின் கருத்துக்களை ஏற்று நடத்தல் என்ற விதத்தில் அறநெறியின் செல்நெறி தீர்மானிக்கப் படுகின்றது. நல்லது – கெட்டது, தீங்கற்றது – தீங்கானது, ஏற்புடையது – ஏற்புடையதல்லாதது என்ற முறையில் மனிதாபிமான உணர்வும், பிறர்க்குக் கேடற்ற நடத்தையும், சமுதாய நல் உணர்வோடு தனிப்பட்ட மனிதனின் மன நலனும் கூடிவருகிற ஒரு விழுமியத்தைத்தான் அறவியல் என்பர். இது காலந்தோறும் மாறுபடக்கூடும். சமுதாய அமைப்புக்கேற்ப மாறுபடக்கூடும். மேலும் இத்தகைய கருத்தமைவு சமுதாய அமைப்போடு சார்ந்திருப்பதாகலின், சமுதாயவியல் நெறியோடு இது நெருங்கிய தொடர்பு கொண்டதாகும்" (நடராசன்.தி.சு, 2003: 166). சங்ககால இலக்கியங்களில் இருந்து இதிகாச, புராண இலக்கியங்கள், பிற்கால அறநெறி இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காவியங்கள், தத்துவ இலக்கியங்கள், உரைநடை இலக்கியங்கள், சமகால இலக்கியங்கள் ஆகியன வரையிலும் அறம் சார்ந்த நெறிகள் கூறப்பட்டுள்ளன. அங்கு அறவியல் அணுகுமுறை பேணப்பட்டள்ளது. அறவியல் கோட்பாட்டுத் தளத்தில் நின்று இலக்கியம் நோக்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும். எனினும் மேலைத்தேய நவீன திறனாய்வு அணுகுமுறைகளுக்கு ஏற்ப எமது தமிழ் இலக்கியங் களையும் பொருத்தி நோக்கி, நுணுகி ஆராய்ந்து, அவற்றின் பலம், பலமின்மை ஆகியவற்றைக் கண்டறிந்து கொள்வது எதிர்காலத் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு நன்மை பயப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரையிலான எமது பார்வையில் அறம் என்பதன் விளக்கம், தமிழிலக்கியத்தில் அறம், புறநானூற்றின் அறிமுகம், புறநானூறு கூறும் அறம் என்பன எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. கட்டுரையின் முக்கிய தலைப்புக்கு எற்றதாக, அறம் என்ற சொல் உணர்த்தும் பொருள்கள் இனங்காட்டப்பட்டுள்ளதுடன், தமிழிலக்கியக் களத்தில் – செய்யுள்களில் அவை இடத்திற்கேற்றதாக எவ்வாறு பொருள்கொண்டு அமைந்துள்ளன என்பதனை, சில இலக்கிய எடுத்துக்காட்டுக்கள் மூலம் இங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அதற்கேற்பத் தமிழிலக்கியப் பெருங் கடலில், எழுந்தமானமாகச் சில பாடலடிகளோ அல்லது சில பாடல்களோ மட்டும்தான் இந்நூலில் தரப்பட்டுள்ளன. தொடர்ந்து பழந்தமிழ் இலக்கியமான புறநானூற்றினைச் சுருக்கமாக அறிமுகம் செய்ததுடன், பறநானூற்றில் அறம் என்னும் நூற்தலைப்புக்கேற்ப விடயங்கள் ஆராயப் பட்டுள்ளன. புறநானூற்றின் நானூறு செய்யுள்களில் இருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட செய்யுள்கள், செய்யுளடி களைத் துணையாகக் கொண்டு அவற்றைச் சான்றா தாரமாகத் தந்து இந்நூல் விரிவாக்கம் பெற்றுள்ளது. மிகைப்படுத்தல் இல்லாமலும், கூறியது கூறாமலும், இயன்ற வரையில் மூலநூலோடு ஒத்திசைவாகச்சென்று, புற நானுற்றுப் பாடல்களில் அறம் பற்றிய கருத்துக்களைப் பொருண்மையுடன் இனங்காட்டும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. புறநானூறு என்னும் ஒப்பற்ற இலக்கியம், தமிழிர்களின் முதுசொம் ஆகும். அதனைப் படிக்குந்தோறும், ஆராயுந்தோறும் புதுப்புதுச் சிந்தனைகள் பரிமளிக்கும். நீண்ட காலப் பாரம்பரியத்தில், புறுநானூறு பற்றிய பல நூற்றுக்கணக்கான கட்டுரைகளும், நூல்களும் வெளி வந்துள்ளன. இந்த நூலும் புறநானூற்றின் பெருமையை எடுத்துக்காட்டுவதில், ஒரு சிறிய பங்களிப்பைத் தமிழ் இலக்கிய உலகிற்கு வழங்கியுள்ளதாகக் கருத முடியும்.

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.6. உசாத்துணை நூல்கள்

**அகநானூறு** (புலியூர்க்கேசிகன் தெளிவுரை), (1960), அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை – 17.

இராமலட்சுமணன் (பதிப்பாசிரியர்), (2001), **மணிமேகலை,** உமா பதிப்பகம், சென்னை – 600001.

**ஐங்குறுநூறு,** (1994), நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், சென்னை – 981.

**கலித்தொகை** (நச்சினார்க்கினியர் உரை), (1938), திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், திருநெல்வேலி.

கலியாணசுந்தரனார். எஸ் (பதிப்பாசிரியர்), (1947, இரண்டாம் பதிப்பு), **குறுந்தொகை,** கபீர் அச்சுக்கூடம், சென்னை.

**கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம் மூலமும் உரையும்,** (2006), உமா பதிப்பகம், சென்னை – 600001.

கோவிந்தராஜ முதலியார். கா (பதிப்பாசிரியர்), (1939), **இறையனார் அகப்பொருள்,** பவானந்தர் கழகம், சென்னை.

கோவிந்தன். வை (தொகுப்பாசிரியர்), (2003), **மகாகவி பாரதியார் கவிதைகள்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை – 600098.

**சிலப்பதிகாரம் மூலமும் உரையும்,** (1942), திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், திருநெல்வேலி.

**தனிப்பாடற்றிரட்டு** (முதற்பாகம்), (1939), டீ. இரத்தின நாயகர் ஸன்ஸ் வெளியீடு, சென்னை.

தாமோதரன். அ (பதிப்பாசிரியர்), (1999), **நன்னூல் மூலமும் உரையும்,** உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை.

**திருத்தொண்டர் புராணம்** – முதற்பகுதி, (1960, இரண்டாம் பதிப்பு), சாது அச்சுக்கூடம், சென்னை – 4.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்குறள் மூலமும் உரையும்** (பரிமேலழகர் உரை), *(2020)*, பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு – *11.*

**தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் விளக்கவுரையும்** (வ.த. இராமசுப்பிரமணியம் உரை), *(2008)*, பூம்புகார் பதிப்பகம், சென்னை – *600108.*

**நற்றிணை நானூறு மூலமும் உரையும்**, (அ. நாராயணசாமி உரை), *(1952)*, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி.

நடராசன். தி.சு., *(2003)*, **திறனாய்வுக்கலை**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை – *600098.*

நாச்சிக்குளத்தார் (பதிப்பாசிரியர்), *(1974)*, **சீறாப்புராணம்**, நாச்சிக்குளத்தார் பதிப்பகம், தஞ்சை.

**பத்துப்பாட்டு முதற்பகுதி மூலமும் உரையும்**, *(2004)*, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை – *600098.*

**பதிற்றுப்பத்து** (ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை விளக்கவுரை), *(2008)*, சாரதா பதிப்பகம், சென்னை – *14.*

**புறநானூறு** (ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை விளக்கவுரை), *(1947)*, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி.

வேணுகோபாலபிள்ளை (பதிப்பாசிரியர்), *(1958)*, **நளவெண்பா**, புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை – *1.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அணிந்துரையிலிருந்து...

ஈழத்தமிழ் இளம் எழுத்தாளரும், தமிழ் ஆய்வாளரும், இலக்கிய வேட்கை நிரம்பியவரும், எழுதத் துடிக்கும் எண்ணங்கள் உடையவருமான திருமலை மண்ணின் திரியாய்க் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகையா சதீஸ் (கவிஞர் முல்லை) அவர்கள், தனது ஆவல் மீதூரப்பெற்று "புறநானூற்றில் அறம்" எனும் தலைப்பிலான, கையடக்கமான சிறிய நூலொன்றினைத் தமிழ்ச் சமூகத்திற்குப் பயனுறத் தந்துள்ளார். பாரிய நூலொன்றினைப் படித்து, இரசித்து, பாடுபொருளறிந்து, அவற்றை நுணுகி ஆராய்ந்து, காரணகாரியத் தன்மையைச் சீர்தூக்கிப் பார்த்து, பாடல்களின் உணர்வையும், உணர்ச்சியையும் புரிந்துகொண்டு தன்னால் இயன்ற எழுத்தாளுமையுடன் இந்நூலினைப் படைத்துள்ளார். ஏற்கனவே கவிதைத் தொகுதி ஒன்றினையும், நாவல்கள் இரண்டையும், திறனாய்வு நூல்கள் மூன்றையும் வெளியிட்ட பெருமைக்குரியவர். இருநூல்களின் பதிப்பாசிரியர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றியவர். எழுத்தைத் தவமாகக் கருதிச் செயற்படுபவர். அவரது எழுத்துக்களில் இந்த நூலானது ஒரு மகுடமாக ஒளிரும் என்பதில் ஐயமில்லை. ...

கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு,
கோப்பாய் ஆசிரிய கலாசாலையின்
ஓய்வுநிலைப் பிரதியதிபர்.

விலை ரூபா 500/=

978-624-99407-6-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org